GOKULAM டிசம்பர் ' ௯௩ ரூ. 5/-

கோகுலம்



களிப்பூட்டும் கலை இது
கற்றுக்கொள்ள வாருங்கள்!



கோகுலம்

1996
டிசம்பர்
மலர் : 14
இதழ் : 10

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம் உண்மையென்று தானறிதல் வேணும் - பாரதியார்


அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம்.

அரையாண்டுத் தேர்வுக்கு தீவிரமாகப் படித்துக் கொண்டிருப்பீர்கள். இந்த ஆண்டுக்கு என்னென்ன பாடம் என்பதை உங்களுக்கு ஏற்கெனவே அறிவித்திருப்பார்களே? அதை மனத்தில் வைத்து, மீதியுள்ள ஆறு மாதங்களில் எத்தனை பள்ளி வேலை நாட்கள், எத்தனை விடுமுறை நாட்கள் என்பதைக் கணக்கில் வைத்து திட்டம் போட்டு இப்பொழுதே படிக்க ஆரம்பித்தால் தேர்வு உங்களைக் கண்டு பயப்படும்! கடினமானது என்று எதையும் விலக்கி வைத்து, சாய்ஸ்(choice)ல் பார்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொள்ளாதீர்கள். "நமக்கு ஆச்சு அதற்கு ஆச்சு!" என்று புரியாத பாடத்தைப் பிறர் உதவியுடன் புரிந்து கொள்ளுங்கள். தேர்வில் வேண்டுமானால் அதை விலக்கி, சாய்ஸ்(choice)ன் உதவியோடு தாண்டி விடலாம். ஆனால் பிறகு ஒருநாள் வேலைக்குத் தேர்வு நடக்கும்போது இந்த வினாவே அங்கு கேட்கப்பட்டு உங்களுக்குத் தடைகல்லாக வந்து விடலாம். அதனால், கடினமானது என்று எதையும் விலக்கிக் கொண்டு படிக்காதீர்கள்.

'என் ஆன்மீக வாரிசு' என்ற காந்திஜியால் புகழப்பட்ட பெருமைக்குரிய ராஜாஜி அவர்கள், குழந்தைகளுக்காக ஏராளமான சிறுகதைகளைக் கல்கியில் எழுதி, சிறுவர் இலக்கியத்திற்குப் பெருமை சேர்த்தவர். அவரது பிறந்த நாள் இந்த மாதம்தான். அவரது அருமையான சிறுகதை ஒன்று இந்த இதழில் வெளியாகியுள்ளது.

அடுத்த இதழில் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியின் முடிவும் பரிசு பெற்ற கதையும் வெளிவர உள்ளன.




கிறிஸ்துமஸ் கொண்டாடும் வாசகர்கள் எல்லோருக்கும் அன்பான வாழ்த்துகள். இடம் இல்லாத காரணத்தால் கேளுங்கள் சொல்லப்படும் பகுதியும், உங்கள் நூலகம் பகுதியும் கலைப்பொருள் செய்வோம் பகுதியும் இடம்பெறவில்லை. தீபாவளி வாழ்த்து அனுப்பிய அனைவருக்கும் நன்றி. மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்

ரேவதி

ஆசிரியர்




கோகுலம்

1996 டிசம்பர் – இந்த இதழில்...









ராஜாஜி

தாழ்த்தப் பட்ட மக்களின்
துன்பம் போக்கி அவர்களின்
வாழ்வு செம்மை அடையவே
வழிகள் காட்டி உதவினார்!

காந்தி வழியில் அவருமே
கிராம மக்கள் உயரவே
காந்தி ஆசிர மத்தையே
கட்டித் தொண்டு ஆற்றினார்!

குடியின் தீமை தன்னையே
கூறி மக்கள் மத்தியில்
குடிக்கும் பழக்கம் ஒழியவே
கதைகள் கூறித் திருத்தினார்

சேரி மக்கள் யாவரும்
சுத்தம் பற்றி அறியவே
காரி யங்கள் யாவையும்
கருத்தாய் நிறை வேற்றினார்!

அரிச னங்கள் யாவரும்
ஆல யத்தில் நுழையவே
உரிமை பெற்றுத் தந்திட
உயர்ந்த தொண்டு ஆற்றினார்!

இலக்கி யத்தில் ஆர்வமாய்
எண்ணில் லாத நூல்களை
விளக்க மாக எழுதியே
விரைந்து தொண்டு ஆற்றினார்!

இறுதி மூச்சு வரையிலே
இந்த நாடு உயரவே
விருப்பு வெறுப்பு இன்றியே
வாதம் செய்த உத்தமர்!

இருக்கும் விருதில் உயர்ந்ததாய்
இனிய 'பாரத ரத்தின!
விருதை அரசு இவருக்கே
வழங்கிப் பெருமை பெற்றதாம்!

– ஜி. ஜெயராமன்

வேண்டும்

இப்படித் தான் இப்படித் தான்
நடக்க வேண்டும் - நாம்
எப்படியும் வாழ்க்கையிலே
சிறக்க வேண்டும்.

அப்படி நாம் வாழ்க்கையிலே
சிறந்து விளங்க - வழி
அத்தனையும் நாம் அறிந்து
முடிக்க வேண்டும்.

உள்ளத்தை நாம் கோயிலாக
மாற்ற வேண்டும் - அதில்
உண்மை அன்பை தெய்வமாக
ஆக்க வேண்டும்

கள்ளம் சூது சோம்பல் எனும்
தீய குணங்கள் - சிறு
கடுகளவும் சேர்ந்திடாமல்
காக்க வேண்டும்.



நல்லதைத்தான் எப்பொழுதும்
நினைக்க வேண்டும் - நாம்
நல்லதைத்தான் எப்பொழுதும்
பேச வேண்டும்


நல்ல தைத்தான் என்றுமே நாம்
செய்ய வேண்டும் - இதை
நமது வாழ்க்கை நடை முறையாய்
ஆக்க வேண்டும்.


— வீ. கோமதி லட்சுமி,
அருப்புக்கோட்டை.

பூ

அம்மா தந்த அல்லிப்பூ
அப்பா தந்த அரளிப்பூ
அக்கா தந்த அடுக்குமல்லி
தம்பி தந்த தாமரைப்பூ
தாத்தா தந்த தாழம்பூ
பாட்டி தந்த பன்னீர்பூ
எல்லா பூவும் எடுத்து நான்
இறைவனுக்குப் போடுவேன்
இன்பம் தர வேண்டுவேன்.

— நா. சிந்து, காரைக்குடி.







நம் பாட்டி

பாட்டிச் சொன்ன கதைகளிலே
பொருள் இருக்குது - அதனைக்
கேட்டு நாளும் கடைபிடித்தால்
அறிவுச் சிறக்குது

அந்தக் கால அனுபவத்தை
அழகாய்க் கூறுவார் - நம்
அறிவும் தூயவழியில் செல்ல
நல்ல துணையிருக்கிறார்.

அகவை அதிகம் ஆகிவிட்டால்
ஒன்றும் தெரியல - என்று
அகந்தை கொள்வோர் மாற
மருந்தும் ஆகின்றார்.


மூத்தோர் காட்டும் நன்னெறியை
முறையாய்ப் பயின்றிடு - நாட்டில்
முதன்மையான மாணவனாய் நீ
உலகில் சிறந்திடு.

— அ.வை. எழிலன், மேலச்சாலை.

ஆளில்லையே!

ஊருக் செல்லாம் ஒரே நிலா,
உயரத்திலே இருக்குது!
உயரத்திலே இருந்தாலும்,
வெளிச்சம் நல்லா கொடுக்குது!
'ஆம்ஸ்ட்ராங்கு என்பவரு
அழகு நிலவில் நடந்தாரு.
ஆர்வம் இருக்கு எனக்கும்தான்.
ஆனால் அனுப்ப ஆளில்லையே!

— ஜி.கே. வெண்ணிலா,
சென்னை - 15.



தீபாவளி



வானில் வண்ண பூமலர
வாண வெடிகள் விடலாமா?
காண வியக்கும் தாரகையாய்
கம்பி மத்தாப்பூ விடுவோமா?

அண்டம் குலுங்க அதிர் வேட்டால்
அறிவீனம் மறைந்து ஒழியட்டும்
பொங்கும் மகிழ்ச்சி நிறையட்டும்
பாவம் விரைந்து போகட்டும்

அருணன் உதயம் முன்னாலே
அன்பு வானம் சிவக்கட்டும்
கருணை இரக்கம் அன்பாலே
காண்போம் புதிய உலகத்தை.


— கு. காளிமுத்து, வல்லம்.

எங்கள் ஊரில் நடந்தது!



எப்படி ஒரே நேரத்தில்?

எங்கள் ஊர் மேனிலைப்பள்ளி மாணவர்கள் ஒருநாள் கூட்டமாக வந்து கொண்டிருந்தனர். பேருந்து நிறுத்தத்தில் நின்ற நான் ஒரு மாணவரை நிறுத்தி என்ன விஷயம் என்று விசாரித்தேன். "ஹெட்மாஸ்டரின் (அவன் அப்படித்தான் சொன்னான்) மாமனாரும் கணக்கு டீச்சரோட மாமனாரும் இறந்துட்டாங்க" என்றான். இரண்டு பேருடைய மாமனாரும் எப்படி? ஒரே நாளில் இறந்தாங்க! அதிசயமா இருக்கே!. என்றேன். 'ஹார்ட் அட்டாக்கில்' என்றான் அவன். "இரண்டு பேருக்குமே எப்படி ஒரு நேரத்தில் ஹார்ட்



சைக்கிளில் போனேன்

எங்கள் கிராமத்தில் எனக்கு நிறைய நண்பர்கள் உள்ளனர். அவர்களுள் ஒரு நண்பன் "நான் பம்பாய்க்கு சைக்கிளிலே போய் வந்தேன்" என்றான். "எப்படிடா பம்பாய்க்கு சைக்கிளிலே போக முடியும்?



ரயில்லயோ இல்லே, பிளேனிலோதானே போக முடியும். நீ மட்டும் எப்படி சைக்கிளிலே போக முடியும்?" என்று கேட்டேன்? உண்மையாகவே திகைப்பாக இருந்தது. நான், பம்பாய் படத்துக்கு சைக்கிளிலே போனேன் என்று சொன்னான். நண்பன் அமைதியாக! அனைவரும் சிரிப்பில் மூழ்கினோம்.


வரிக்கல், தா.ரோஜஸ்.

அட்டாக் வந்தது?'' என்று திகைப்பு மாறாமல் கேட்டேன். "இருவருமே ஒருவர் தானே?'' என்று கூலாகச் சொல்லி விட்டுச் சென்றான் அவன்!

மன்னார்குடி, த.சாந்தி.

துருபஸ்!

நாங்கள் நண்பர்களுடன் பேருந்து நிலையத்தில் பஸ்ஸிற்காக நின்று கொண் டிருந்தோம். அப்போது ஒரு பெரியவர்



எங்களிடம் வந்து [illegible] 'துரு' பஸ் எப்பொழுது வரும்? என்று கேட்டார். அதற்கு எங்களுடன் வந்த ஒரு குறும்பு நண்பன், பாண்டி செல்ல எப்பொழுது வந்தாலும், பெயிண்ட் அடித்த பஸ்தான் வரும், 'துரு'பிடித்த பஸ்ஸெல்லாம் வரா துங்க, என்றான். இதைக் கேட்டு அனை வரும் சிரித்தோம்.

வரிக்கல், டி.பிரகாஷ்.

தட்டியது யார்?

எனக்கு ஒரு தங்கை உண்டு. அவள் வயது இரண்டுதான். ஒருநாள் எங்கள் அப்பா எங்கள் இருவரையும் மட்டும் வீட்டில் விட்டு "காலையில் வந்து விடு வோம்'' என்று கூறிச் சென்றார். இரவு திடீரென்று கதவை யாரோ சுரண்டும் சத்தம் கேட்டது! நாங்கள் இருவரும் பயந் தோம். ஏனெனில் பக்கத்து வீட்டிலேயே இதே போல திருட்டு நடந்திருந்தது.



ஆதலால் திருடன்தான் தட்டுகிறான் என்று நடுங்கினோம். பிறகு அரைக் கலக்கத்துடன் தூங்கினோம். காலையில் போய்ப் பார்த்ததில் வாசலில் ஒருநாய் தூங்கிக் கொண்டிருந்தது. அதுதான் இரவில் கதவைத் தட்டியிருக்கிறது!. காலை யில் அப்பா வந்தவுடன் சொல்லிச் சிரித் தோம்.

தாசுக்குப்பம், சி.ஜோசப்

தண்ணீரைப் பிடி!

எங்கள் வகுப்பில் ஆசிரியர் பாடம் நடத்துவதற்காக வந்தார். அப்பொழுது ஒரு மாணவனை அழைத்து "தண்ணீர் பிடித் துக் கொண்டு வா'' என்றார். இதைத் தவறாகப் புரிந்து [illegible] அவன்



தண்ணீ ரைப் பிடிக்க முடியாதே சார்?" என்றானே பார்க்கலாம். வகுப்பே சிரிப்பலையில் மூழ்கியது.

வரிக்கிராமம், வி.செல்வகுமார்.

கொம்பு

ஊட்டியில் இருந்து எங்கள் பள்ளிக்கு வந்திருக்கிற தமிழ் ஆசிரியர் ஒருநாள் இறைவாழ்த்து நடத்திவிட்டு, "நாளை கேள்வி கேட்பேன். சொல்லணும். சொல்லலேன்னா உதை" என்றார். உடனேயே "நாளை வரும்போது யாராவது கொம்பைக் கொண்டு வாருங்கள்" என்றார். பிரம்பைத்தான் அப்படி அவர் கூறினார். தவறாக புரிந்த கொண்ட குறும்புக்கார மாணவன் "எவன் கொம்பை



எப்படி சார் எடுத்தாரது? அது மாட்டு கிட்ட என்ன இருக்கும்? எப்படி அதை எடுத்து வருவது?" என்றானே பார்க்கலாம்?. வகுப்பில் ஆசிரியர் உட்பட குபீரெனச் சிரித்தோம்.

வெள்ளையம்பட்டு, கே. விஜய்காந்த்.

பள்ளியில் நடக்குமா?

இரண்டு மாணவர்கள் பள்ளியின் எதிரே நின்றுகொண்டு இருந்தனர். ஒருவர் அந்த வழியாகச் சென்றார். அவர் அந்த இரண்டு மாணவர்களையும் "தம்பி! பள்ளிக்கூடம் நடக்கிறதா?" என்று கேட்டார். அதற்கு ஒருவன் சொன்னான் "நான்கு வருடமாக இங்கேதான் படிக்கிறேன். பள்ளிக்கூடம் நடப்பதை நான் ஒருநாள்கூடப் பார்க்கவில்லை" என்றான்.



ஒரே சிரிப்புதான்.

செஞ்சி, கே.நடராஜன்

துணுக்கு

அன்று எங்களுக்கு நீதி போதனை வகுப்பு ஆசிரியர் வந்தார். அவர் எப்போதும் மாணவர்களுக்கு நல்ல அறிவுரை கூறுவார். அன்றும் அவர் இரண்டு சக்கர



வாகனமாக இருந்தால் இரண்டு பேர்தான் செல்லலாம். இதுதான் முறை" என்று கூறினார். உடனே இராவணன் என்ற மாணவன் எழுந்து "அப்ப ஆறு சக்கர பேருந்தில் 6 பேர்தானே சார் செல்ல வேண்டும்? பிறகு ஏன் 60 பேரை அடைக்கிறார்கள்?" என்று கேட்டான். ஆசிரியரால்கூட அதற்கு பதிலளிக்க முடியவில்லை! சிரித்து விட்டார்!

அனந்தபுரம், இர.சிவராஜ்.

எட்டுமணி நேரம்

அறிவியல் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருக்கும்போது இடையில், 'மனிதன் ஒருநாளைக்கு எட்டுமணி நேரம் தூங்க வேண்டும்' என்றார். இதைக் கேட்ட ஒரு குட்டி மாணவன் எழுந்தான், "சார் ஒரு நாளைக்கு என் போன்றவர்களால் எட்டு மணி நேரம் தூங்க முடியாது சார். ஏனெனில் ஸ்கூல் ஏழு



மணி நேரம்தானே நடக்குது!'' என சொல்ல வகுப்பறையில் சிரிப்பொலி.

வந்தவாசி, பா.ஜெயக்குமார்.

காசு எங்கே கிடைக்கும்?

என் அண்ணன் ஒருநாள் கோபமாக இருந்தார். அண்ணன் மகள் கவிதா ஐஸ் கிரீம் வேண்டுமென்று அடம்பிடித்துக் கொண்டிருந்தாள். கவிதாவிற்கு ஐஸ்கிரீம் என்றால் மிகவும் பிடிக்கும். தினமும் ஐஸ் கிரீம் வாங்கிச் சாப்பிடுவாள். அன்றும் அப்படித்தான் அண்ணனிடம் ஐஸ்கிரீம் வேண்டுமென்று அடம்பிடித்துக் கொண்டிருந்தாள். அண்ணனுக்கு மிகவும் கோபம் வந்துவிட்டது. "தினமும் ஐஸ் கிரீம் வாங்க உங்க அப்பா விடம் காசு எங்கே இருக்கு?'' என்று கேட்டார்.



உடனே கவிதா நிதானமாக, ''அவர் பையில் இருக்குது காசு'' என்றாள். அண்ணன் கோபம் மறந்து சிரித்து விட்டார். நாங்களும்கூட!

சோழன்மாளிகை,

டி.பி. நாராயணசாமிதாஸ்.

கையை நீட்டுங்கள்!

எங்கள் அண்ணன் பையன் அசோக்கிற்கு ஐந்து வயது ஆகிறது. நாம் எது செய்தாலும் "ஏன் எப்படி?" என்று கேள்விகள் கேட்பான். நாங்கள் வெளியூர் செல்வதற்கு பஸ் ஸ்டாண்ட் சென்று காத்துக் கொண் டிருந்தோம். பஸ் வந்தது. பஸ்ஸை நிறுத்து வதற்காக கையை நீட்டினேன். பஸ் நின்றதும் ஏறிப் பயணம் செய்தோம். அருகில் இருந்த அண்ணன் பையன் அசோக் "ஏன் அத்தை கையை நீட்டினீர்கள்?" என்றான். "பஸ் நிற்க வேண்டும் என்றால் கையை நீட்டினால்தான் நம்மை



"ஏற்றிக் கொள்ள நிறுத்துவார்" என்றேன். ஒருநாள் நாங்கள் குடும்பத்துடன் திருப்பதி செல்வதற்காக ரெயிலில் செல்ல காத்துக் கொண்டிருந்தோம். சிறிது நேரத்தில் ரெயில் வந்தது.

எங்களுடன் நின்ற அசோக் கையை நீட்டிக் கொண்டே நின்றான். அவன் நீட்டியதோடு அல்ல "எல்லோரும் கையை நீட்டுங்க, இல்லைன்னா ரெயில் நிற்காது" என்றானே பார்க்கலாம். நாங்கள் எல்லாம் குபீர் என்று சிரித்து விட்டோம்.

மேலப்பாதி, என்.ராஜலட்சுமி

கண்ணன் என்ன செய்வார்?

இன்று உலகில் தலைவிரித்தாடும் பல்வேறு 'தீயசக்திகளைப் பற்றி உரையாடிக் கொண்டிருந்த ஆசிரியர், பின் வரிசையில் குறும்புத்தனத்தில் ஈடுபட்டிருந்த மாணவனை எழுப்பி, "இன்று இவ்வுலகில் கிருஷ்ண பகவான் அவதரித்தால் என்ன செய்வார்?" என்று வினவினார். உடனே அவன் அவசரமாக, "வெண்ணெய்க்குக் கட்டுப்படியாகாமல், கூடவே கொஞ்சம் ப்ரெட்டும் ஜாமும் திருடியிருப்பார் சார்" என்று பதிலளிக்க வகுப்பே கலகலத்தது.



தாசில்தார்நகர், ஜோதி.

ஓடும் பஸ்சில் ஏறாதே!

நானும் என் தோழியும் பள்ளி விட்டு வீட்டிற்கு வருவதற்கு பஸ்சில் ஏறி



அமர்ந்தோம். கண்டக்டர் டிக்கட் போட்டுக் கொண்டு வந்தார். எங்களிடம் வந்ததும் குறும்புக்காரத் தோழி கண்டக்டரிடம் "இந்த பஸ் ஓடுமா சார்?" என்றாள். அதற்கு அவர் "ஓடும்மா" என்றார். "பின்ன ஏன் சார் இந்த பஸ்ஸில் ஓடும் பஸ்ஸில் ஏறாதே! என்று எழுதியிருக்கிறது?" என்றாளே பார்க்கலாம்! பயணிகள் அனைவரும் சிரித்து விட்டனர்.

தென்எலப்பாக்கம்,

சி.சத்யா.

இந்தக் கேள்வி வருமா?

எங்கள் விலங்கியல் ஆசிரியர் நகைச்சுவையுடன் நன்றாகப் பாடம் நடத்துவார். ஒருமுறை அவர் பாடம் நடத்திவிட்டு அவர் நடத்தியதில் ஏதாவது சந்தே



கம் இருந்தால் கேளுங்க என்றார். ஒருவரும் சந்தேகம் கேட்கவில்லை. உடனே ஆசிரியர் கோபமாக "யாருக்கும் சந்தேகம் வரவில்லையா? இப்ப யாராவது சந்தேகம் கேட்கவில்லை என்றால் அனைவருக்கும் அடி கிடைக்கும்" என் றார். ஒரு குறும்புக்கார மாணவன் எழுந்து அவர் நடத்திய ஒரு கேள்வியைச் சொல்லி, "இந்தக் கேள்வி பரீட்சைக்கு வருமா சார்?" என்றதும் வகுப்பே சிரிப்பில் ஆழ்ந்தது.

வந்தவாசி, சி.ஸ்ரீதர்.

எப்படிக் கத்த?

என் நண்பன் மிகவும் முரட்டுதவ



மாணவன். அவனை அவங்க அம்மா கடைக்குப் போய் முருங்க கத்(ஜ)த வாங்கி வரச் சொன்னாள். அவன் கடைக்காரரிடம் "எப்படிங்க கத்(ஜ)த?" என்று கேட்டான். அதற்குக் கடைக்காரர் "நீ எப்படி வேணுமானாலும் கத்தலாம். அது உன் விருப்பம்" என்றார். இதைக் கேட்ட அனைவரும் சிரித்தனர் முரட்டு நண்பன் உட்பட!

செஞ்சி, டி.பிரகாஷ்.

பச்சை அரிசி

எங்கள் சித்தியும், சித்தி பையனும் கோடைவிடுமுறைக்காக எங்கள் வீட்டிற்கு வந்திருந்தனர். ஒருநாள் நான் நண்பர்களுடன் விளையாடச் சென்றுவிட்டேன். அம்மா அரிசி வாங்க என் சித்தி பையனையும் கடைக்கு அழைத்துச்




சென்றிருந்தார். அம்மா கடைக்காரரிடம் "பச்சை அரிசி ஐந்து கிலோ" போடச் சொன்னார். அரிசியை வாங்கிக் கொண்டு வந்தார். என் சித்தி பையன் அரிசியைப் பார்த்து "கடைக்காரர் பச்சை அரிசி போடாமல் வெள்ளை அரிசி போட்டு விட்டார்! என்று சொன்னான். பின்னர் தான் அவன் சொன்ன அர்த்தம் புரிந்தது. வீடே ஒரே சிரிப்புதான்.

ஸ்ரீநகர், எல்.சேகர்.

என் பெயர் அசோகன். கேரள மாநிலம் கொல்லத்தில் வாழும் தமிழ்க் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவன்.

என்னால் தமிழைப் புரிந்து கொள்ள முடியும். நன்கு பேசவும் கூடத் தெரியும். ஆனால் போன வருஷம் வரை எனக்கு தமிழ் படிக்கவோ எழுதவோ தெரியா திருந்தது. தமிழனாகப் பிறந்த வனுக்கு தமிழைப் படிக்க எழுதத் தெரியாமல் இருப்பதை அவமானமாக என் பெற்றோர்கள் நினைத்தார்கள். அதனால் தமிழ்நாட்டில் உள்ள பாளையம்கோட்டைக்கு என் தாத்தா வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள்.

கொல்லத்தில் எட்டாம் வகுப்பு வரை பள்ளியிலே ஆங்கிலம், மலையாளம், இந்தி படித்தேன். தமிழைப் படிக்க வாய்ப்பே யில்லை.



இங்கேயே படிக்கிறேன்..!

பாளையம்கோட்டை பள்ளியிலே ஆங்கிலத்துக்கு அடுத்து இரண்டாவது மொழியாக தமிழைச் சொல்லிக் கொடுத்தார்கள். அந்தப் பள்ளி ஆங்கில மெட்ரிக் பள்ளி.

நான் எல்லாப் பாடங்களிலும் முதல் அல்லது இரண்டாவது இடத்தில் வந்து விட்டேன். ஆனால் தமிழில் மட்டும் நான் தான் கடைசி!

முப்பது பேர் கொண்ட வகுப்பில் தமிழில் நான் தான் முப்பதாவது மாணவன்!

எங்கள் தமிழய்யாவுக்கு இதில் பெரிய வருத்தம். என் கட்டுரை நோட்டை என்னிடம் நீட்டினார். அதில் நான் எழுதியிருந்ததைவிட அவர் திருத்தியிருந்ததுதான் அதிகமாக இருந்தது!

'பலைய தமிள் மன்னர்கள் களைகளைப் போற்றி வலர்த்தார்கள்.' என்று நான் எழுதியிருந்ததை, நான் எழுதியிருந்த படியே படித்துக் காட்டி தமிழய்யா மிக உணர்ச்சி வசப்பட்டார்.

'ஆங்கிலத்தில் நூற்றுக்குத் தொண்ணூற்று ஐந்து வாங்கும் உன்னால், தமிழில் குறைந்தது நாற்பது மதிப்பெண்ணாவது வாங்க முடியாதா?' என்று தமிழய்யா கேட்டபோது எனக்குப் பெரிதும் அவமானமாக இருந்தது.

"ஊஹூம், இனி இந்தத் தமிழ்நாட்டில், இந்தப் பள்ளியில் என்னால் படிக்க முடியாது. பேசா

அருப்புக்கோட்டை செல்வம்



மல் கொல்லத்துக்குப் போய் பழைய பள்ளியிலேயே படிக்க வேண்டியதுதான்" என்னும் முடிவுக்கு வந்தேன்.

மாலையில் வீட்டுக்கு வந்ததுமே, பாட்டியிடம் அழுதேன். 'என்னைக் கொல்லத்துக்கே அனுப்பி விடுங்கள்' என்று கெஞ்சினேன்.

வெளியே நூலகத்துக்குப் போயிருந்த தாத்தா இரவு எட்டு மணிக்கு வீட்டுக்கு வந்தார். பாட்டி விஷயத்தைச் சொன்னார்.

தாத்தா ஒருகணம் யோசித்தார். அப்புறம் "சரி, உன் முடிவு அது தான் என்றால் அனுப்பி வைத்து விடுகிறேன்" என்று சொன்னார். எனக்கு ஒரே குஷி; கொண்டாட்டம்! இனி இந்தத் தமிழைப் படித்து நானும் துன்பப்பட்டு மற்றவர்களையும் துன்பப்படுத்த வேண்டாமே என்ற நிம்மதிப் பெருமூச்சு!

"இந்த விடுமுறையில் பாட்டி, நான், நீ மூன்று பேரும் சுற்றுலா போறோம். போய் வந்தவுடன் பள்ளியிலிருந்து டி.சி வாங்கிக் கொண்டு கொல்லத்துக்கே போகலாம்" என்றார் தாத்தா.

எனக்கு இது ஒரு கூடுதல் போனஸ். முதலாவது, இந்தத் தமிழ்த் தண்டனையிலிருந்து விடுதலை! இரண்டாவது சுற்றுலா!

ஒரு இனிய காலைப் பொழுதில் எங்கள் சுற்றுலா ஆரம்பமானது.

மதுரைக்கு வந்தோம். மதுரையிலிருந்து சிவகங்கைக்குப் போனோம். சிவகங்கைக்குச் சில கிலோ மீட்டர் தூரத்திலிருக்கும் சோழபுரம் என்னும் ஊருக்கு வந்தோம்.

அங்கே சுத்தானந்தர் தவக்குடில் என்னும் இடத்திற்கு அழைத்துச் சென்றார் தாத்தா.

போகும்போது கவியோகி சுத்தானந்த பாரதியாரைப் பற்றிச் சொல்லிக் கொண்டு வந்தார்.

தவக்குடிலின் மாடிப் பகுதியில் மூன்று பீரோக்கள் நிறையப் புத்தகங்கள் இருந்தன. அவற்றில் பல கவியோகியாரே எழுதியவையாம்!

கவியோகியாரின் அண்ணன் மகன் என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்ட ஒரு பெரியவரிடம் "நம் கவியோகியாருக்கு எத்தனை மொழிகள் தெரியும்?" என்று கேட்டார் தாத்தா.

"பதினாறு மொழிகள்" என்று பதில் வந்தது. சுருக்கென்று நெஞ்சில் ஒரு குத்தல் எனக்கு!

"பதினாறு மொழிகளா! என்னென்ன மொழிகள்?" என்று ஆச்சர்யத்தோடு நான் கேட்டேன்!

"தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, ஆங்கிலம், பிரஞ்சு, ருஷ்யன் ஆகிய மொழிகளில் நம்ம கவியோகியார் சரளமாகப் பேசுவார்; எழுதுவார். மற்ற மொழிகளை, மற்றவர்கள் பேசினால் புரிந்து கொள்வார்" என்றார் பெரியவர்.

இது எப்படி சாத்தியம்?

ஒரு மனிதரால் இத்தனை மொழிகளைக் கற்றுக் கொள்ள முடியுமா? ஒருவேளை ரீல் விடுகிறாரோ?" என்றுகூட நான் நினைத்தேன்.

என் மனத்தை அவர் படித்து விட்டாரோ என்னவோ... சில புத்தகங்களை மேஜை மேல் எடுத்துப் போட்டு,

"இவையெல்லாம் பிரஞ்சு மொழியிலிருந்து யோகியார் மொழி பெயர்த்தவை." என்றார்.

பாட்டி, "நான் ஏற்கனவே ஏழைபடும் பாடு, இளிச்ச வாயன் எல்லாம் படித்திருக்கிறேன்" என்றார்.

எனக்கு கவியோகியாரை நினைக்கும்போதே வியப்பாக இருந்தது. "ஒரு மனிதரால் பதினாறு மொழிகளை எப்படிப் படித்திருக்க முடியும்?" என்ற சந்தேகமும் எழுந்தது.

ஒருவேளை கடவுளே கவியோகியாருக்கு எந்த மொழியையும், எளிதாகப் படித்துக்கொள்ள சிறப்பான வரம் கொடுத்திருப்பாரோ?"

பாட்டியிடம் கேட்டேன். "இருக்கலாம்" என்றார், பாட்டி.

சோழபுரத்திலிருந்து மதுரை வந்து திருப்பதிக்குப் பயணமானோம். ரயில் பயணம் ஏக குஷி.

ரயிலில், நாங்கள் இருந்த பெட்டியில், ஒரு மலையாளக் குடும்பம் இருந்தது. அந்தப் பையன்களின் அம்மாவும் உடன் வந்தார்கள்.

அவர்களுடன் மலையாளத்தில் நிறைய சம்சாரித்தேன்! சரளமாக நான் மலையாளம் பேசியதைப் பார்த்த பாட்டிக்கு ஒரே ஆனந்தம்; பெருமை.

அந்தப் பையன்கள் பிரதிப், பிரவீ என்று தங்கள் பெயரைச்சொன்னார்கள். அவர்களும் இப்போ தமிழ் எழுத, படிக்கக் கற்றுக் கொண்டு வருகிறார்களாம்!

"வேண்டாம் என்று வெறுக்காமல் இருந்தாலே எந்த மொழியும் எளிதாக மனத்தில் பதியும்" என்று அந்தப் பையன்களின் அம்மா சொன்னார்.

'அது எப்படி? எதற்கும் ஒரு அளவு இல்லையா? மூன்றாவது தோசைக்குப்பின் நாலாவது தோசை தின்றாலே அஜீரணமாகிவிடுகிறதே? மொழிகளில் மட்டும் அளவுக்கு அதிகமாகப் படித்தால் மனதுக்கு - மூளைக்கு ஆஜீரணம் ஏற்பட்டு விடாதா?" மனதில் தோன்றியதே தவிர அவர்களைக் கேட்கவில்லை.


இருள் கலைந்து கொண்டிருந்தபோது ரயில் திருப்பதி ஸ்டேஷனில் நின்றது.

பல மொழிகள் பேசும், பல பழக்க வழக்கங்கள் கொண்ட ஒரே ஜனத் திரள்.

தேவஸ்தான பஸ்ஸில் திருமலைக்குச் சென்றோம். வழியெல்லாம் சுத்தானந்த பாரதியாரைப் பற்றிய நினைவுகள். அவரது பல மொழித் திறமை பற்றிய ஆச்சர்யம்...

பஸ்ஸைவிட்டு இறங்கி பாட்டி தாத்தாவுடன் தங்குமிடம் பதிவு பண்ணுவதற்காக தேவஸ்தான அலுவலகத்துக்குப் போனோம். அங்கே ஒரு போர்ட்டர் குறுக்கிட்டார்.

திருப்பதி என்றால் தெலுங்குதானே பேச்சு மொழியாக இருக்க வேண்டும்?



அந்த போர்ட்டர் நாங்கள் தமிழ் பேசுபவர்கள் என்று தெரிந்ததும் மிகச் சரள மாகத் தமிழ் பேசினார்.

பதிவு பண்ண எங்



''தீபாவளியன்னிக்கு உனக்கு வெடி வெடிக்கிறது பிடிக்குமா... பட்சணம் தின்பது பிடிக்குமா...?''

''பட்சணம் தின்னுண்டே வெடிக்கிறதுதான் பிடிக்கும்.

-இரா.திலீப்

களுக்கு அவர் வழி காட்டிக் கொண் டிருக்கும்போதே பெங்களூரிலிருந்து வந்த வர்கள் சிலரை வரவேற்று மிக இயல்பாகக் கன்னடத்தில் பேசினார்.

எனக்கு ஓரே ஆச்சர்யம்! கொஞ்சம் இளைஞர் அவர்.

'ஏன் மாமா. உங்க சொந்த ஊர் எது?' என்று கேட்டேன். 'திருப்பதி' என்றார் அவர். "தெலுங்கு தெரியுமா"? "பாக"

"என்னென்ன மொழிகள் பேசுவீர்கள்?"

"இங்கே வருகிற பிரயாணிகளுடன் பேசும் அளவுக்கு ஒரு நாலைந்து மொழிகள்" என்றார் அவர்.

அன்று வேங்கடேசப் பெருமாளை "கடவுளே எந்த மொழியையும் வெறுக் காமல் தேவையானவற்றைப் படித்துக் கொள்ளும் சக்தியை எனக்குக் கொடு" என்று மனம் உருகி வேண்டினேன்.

தமிழைப் படிக்கப் பயந்து கொல் லத்துக்கு ஓட முடிவு செய்திருந்த என்னுள் ஒரு மாறுதல்...

'இந்தப் போர்ட்டரே இந்த வயதில் நாலைந்து மொழிகளைப் புரிந்து கொள்ள, பேச அறிந்து கொண்டிருக்கும்போது... நம் மால் நம் தாய் மொழியைத் தவறில் லாமல் படிக்க எழுதக் கற்றுக் கொள்ள முடியாதா?'

திரும்ப வரும்போது பஸ்ஸில் வந்தோம். நாங்கள் வந்த அதே பஸ்ஸில் மதுரைக் குடும் பம் ஒன்று வந்தது.

அவர்கள் தெலுங்கு பேசுபவர்கள்.

ஐந்து அல்லது ஆறு வயதுப் பையன் தெலுங்கில் தன் பெற்றோருடன் சரளமாகப் பேசிக் கொண்டு வந்தான்.

பஸ் திருச்சிக்கு வருமுன்னரே பாட்டி தாத்தாவுடன் அந்த மதுரைக் குடும்பம் ஒட்டிக் கொண்டு விட்டது.

"**ம**துரையில் எங்கள் வீட்டிற்கு வந்து தங்கி விட்டுத்தான் போக வேண்டும்" என்று அவர்கள் வற்புறுத்தவே தாத்தாவும் சம்மதித்தார்.

மதுரை - திருமலை நாயக்கர் மஹால் பக்கம் அவர்கள் வீடு.

காலை குளித்து டிபன் சாப்பிட்டு ஓய் வெடுத்துக் கொண்ட பின் பத்து மணிக்கு அந்த வீட்டு வாசல் பக்கம் வந்து பார்த்தேன். அந்த வாண்டு அவன் மட்டத்துப் பையன் களுடன் எனக்குக் கொஞ்சம்கூடப் புரியாத ஏதோ ஒரு மொழியில் பேசிக் கொண்டிருந் தான்.

என்னைப் பார்த்ததும் ஓடி வந்தான் அவன். 'என்ன அண்ணா, அதுக்குள்ளே அலுப்பு தீர்ந்திடுச்சா?' என்று கரிசனத் தோடு கேட்டான்.

"ஆமா. இப்போ நீ அந்தப் பையன் களோடு பேசினாயே அது என்ன மொழி?" - என்று கேட்டேன் நான்.

"சௌராஷ்டிரா...." என்றான் அவன்.

"சௌராஷ்டிராவா! அது எப்படி அந்த பாஷை உனக்குத் தெரியும்?"

"நான் பிறந்தது இந்த வீட்டிலேதானே? இங்கே இந்த வீதியிலே இருக்கிறவங்க பேசற மொழி எப்படி எனக்குப் புரியாமல் போகும்?"

"உனக்கு வீட்டுல பேசறது?"

"தெலுங்கு...." என்றான் அவன்.

எனக்கு உடம்புபெல்லாம் சில்லென்றது வியர்த்தது. அவன், வீட்டில் தெலுங்கு பேசுகிறான். வீதியில் சௌராஷ்டிரம் பேசுகிறான். பள்ளியில் தமிழும் ஆங் கிலமும் படிக்கிறான்.

இத்தனைக்கும் அவன் வயது ஏழு கூட இருக்காது!

கவியோகிக்கு வரப்பிரசாதம். திருப்பதி போர்ட்டருக்கு வயிற்றுப்பாட்டுக்கான தேவை. இதோ இந்தப் பையனுக்கு?-

வயிற்றுக்கான உணவு ஓரளவுக்கு மேல் போனால் அஜீர்ணம். இந்த மொழித் திற னும், அறிவாற்றலும் எவ்வளவு அதிக மானாலும் அஜுர்ணமாவதில்லை! வலிய மறுக்காதவரை மனமும் அறிவும் எத்தனை மொழிகளானாலும் எளிதாகவே ஏற்றுக் கொள்ளச் செய்கின்றன!

பாளையம்கோட்டை வந்து இறங்கி - வீட்டுக்குப் போகும்போதே பாட்டியிடம் சொல்லி விட்டேன்.

"நான் இங்கேயே, இப்போ படிக்கிற பள்ளியிலேயே, தொடர்ந்து படிக்கிறேன்!"

மாமாவின் பரிசு!

(பங்கு கொள்வோர் விஜய், ஹரி, நித்யா இவர்களது தங்கை)

காட்சி-1

விஜய் : இன்னிக்கு விடி காலையிலே நான் ஒரு சந்தோஷமான கனவு கண்டேன்டா!

ஹரி : சந்தோஷமான கனவா?

விஜய் : ஆமாம்! நடக்கப்போற இந்தியா-ஸ்ரீலங்கா டெஸ்ட் மாட்ச்சுக்கு நீயும் நானும் டிக்கட் வாங்கற மாதிரி கனவு கண்டேன். கனவு முடியறதுக்கு முன்னாடி நம்ம நித்யா அக்கா வில்லி மாதிரி வந்து, என் மூஞ்சில தண்ணி தெளிச்சு எழுப்பிட்டாடா...!

ஹரி : அப்படியா? விடிகாலையிலே கனவு கண்டா நிச்சயம் பலிக்கும்னு நம்ம தாத்தா அடிக்கடி சொல்வாருடா! அப்போ நாம நிச்சயம் டிக்கட் வாங்கத்தான் போறோம்! கிரிக்கெட் மாட்ச் பாக்கத்தான் போறோம்!

விஜய் : போடா... எனக்கு இதிலே நம்பிக்கையில்லை. ஏன்னா, நம்ம ரெண்டு பேருக்கும் குறைந்த பட்சமா இருநூறு ரூபா தேவைப்படும்!... அப்பா வேற ஊரிலே இல்லே... இருந்தாலும் கொடுக்க மாட்டார்... வேற யாருடா கொடுக்கப் போறாங்க?... அதனால இந்தக் கனவு பலிக்காது!

நித்யா : டேய், காலையிலேயே கிரிக்கெட் மாட்ச்சைப் பத்திப் பேச்சா? அடுத்தவாரம் அரை ஆண்டு தேர்வு ஆரம்பம் நினைவுல வச்சுக்குங்க... அப்பா, அம்மா ஊரிலே இல்லேன்னா அவிழ்த்து விட்ட குதிரைதான்...!

விஜய் : அவங்க இல்லேன்னா என்ன? அவங்களுக்கு மேலே நீதான் இருக்கியே எங்களை மிரட்டி உருட்ட?

நித்யா : அடேடே... இன்னிக்குத் தேதி 15 இல்லே? ஒரு முக்கியமான விஷயத்தை மறந்துட்டேன்... கொஞ்சம் இருங்க [உள்ளே சென்று இருநூறு ரூபாயுடன் வந்து] இந்தாங்க இருநூறு ரூபாய்!


ஹரி : ஹை! கிரிக்கெட் மாட்சுக்கு டிக்கட் வாங்கவா?



நித்யா : ம்... இல்லை... மின்சார பில் கட்ட... இந்தாங்க பில் கார்டு... எப்படியாவது இன்னிக்கே பணத்தைக் கட்டிட்டு வாங்க... அப்பா சொல்லிட்டுப் போயிருக்காரு...

விஜய் : அக்கா... ரெண்டுநாள் பொறுத்துக் கட்டிக்கலாமேக்கா...?

எஸ்.ஆர்.ஜி.சுந்தரம்



நிதயா : இன்னிக்குத்தான் கடைசி நாள். அப்பா சொன்னபடி இன்னிக்கே மின் கட்டணத்தைக் கட்டியாகணும்! ம்... புறப்படுங்க!

ஹரி : அக்கா. இன்னும் ஒரு வாரம் தாமதமா கட்டலாமே பரவாயில்லை! அனுமதிப்பாங்க!

விஜய் : ஆமாங்க்கா. இந்தியா-ஸ்ரீலங்கா மாட்ச் ரொம்ப பிரமாதமா இருக்கும்! அதனால இந்த இருநூறு ரூபாய்க்கு டிக்கட் வாங்கிடறோம்?

நித்யா : அப்போ எலக்ட்ரிக் பில்லை எப்படிக் கட்டுவீங்க?

ஹரி : அதுக்கும் ஒரு 'ஐடி'யா இருக்கு!.. வர 30-ஆம் தேதி எங்களோட பிறந்தநாள் வரப் போறது இல்லையா?

ஹரி : எங்க பிறந்தநாள் பரிசா டில்லி மாமா இந்த வருஷமும் நிச்சயமா 250 ரூபா அன்பளிப்பு அனுப்பப் போறதா போன மாசம் வந்திருந்தப்போ சொல்லியிருந்தார்.

விஜய் : கரெக்ட்! இந்த 22-ஆம் தேதிக்குள் எப்படியும் அந்த 250 ரூபா எங்க கைக்குக் கிடைச்சுடும்!


ஹரி : அந்தப் பணம் எலக்ட்ரிக் பில்லுக்கு! இந்தப் பணம் கிரிக்கெட் மாட்ச்சுக்கு! எப்படி ஐடியா?

நித்யா : முட்டாள்தனமான 'ஐடியா'!... மாமாவோட அன்பளிப்புப் பணம் வந்து சேரல்லேன்னா...?

விஜய் : மாமா அப்படி ஏமாத்த மாட்டார்!... நீ கவலைப் படாதே... நாங்க பார்த்துக்கறோம்.

நித்யா : எனக்கு என்னவோ பயமாயிருக்கு... ஒரு வாரத்துக்குள்ளே பணம் வந்து சேரல்லேன்னா மின்கட்டணத்தைக் கட்ட முடியாம போயிடும்... மின்சாரத்தைக் 'கட்' பண்ணிடுவாங்க.. வீட்லே லைட் எரியாது... நீங்களும் படிக்க முடியாது... ஞாபகம் வச்சுக்குங்க! அடி வாங்கிக்க வேண்டியதுதான்.

ஹரி : போதும் கற்பனை. உனக்கு அடி விழாம நாங்க பாத்துக்கறோம்! வா விஜய்! இப்பவே போய் டிக்கட் வாங்கிட்டு வந்துடுவோம்!



காட்சி 2

விஜய் : ஹரி, என்னடா இது இப்படி 'உம்'முன்னு உட்கார்ந்துக்கிட்டிருக்கே?... நாமதான் கிரிக்கெட் மாட்ச் பார்க்க டிக்கட் வாங்கியாச்சே! 'ஜாலி'யாயிரு!

ஹரி : போடா நாம கிரிக்கெட் மாட்ச் பாக்கறது சந்தேகங்கந்தான்... இன்னிக்கு காலையிலே நானும் ஒரு கனவு கண்டேன்.

விஜய் : என்ன கனவுடா?

ஹரி : நீயும் நானும் கிரிக்கெட் மாட்ச் பாக்கமுடியாம ரேடியோவுல கமெண்ட்டரி கேட்கிற மாதிரி கனவுடா!

விஜய் : உண்மையாவா?

ஹரி : உண்மையைத்தான்டா சொல்றேன். அப்புறம் ஊர்லேந்து நம்ம அப்பா வந்ததும், உன்னையும் என்னையும் முதுகுலே அடி அடின்னு அடிக்கிறதா கனவு கண்டேன்... கனவுலேகூட இந்த நித்யாவுக்கு அடி விழவேயில்லைடா!

விஜய் : டேய் ஹரி! உன் கனவு சுத்த பைத்தியக்காரக்கனவு. நிச்சயம் பலிக்காது. கவலையை விடு!


(நித்யா வருகிறாள்)

நித்யா : ஏன், நீ கண்ட கனவு மட்டும் புத்திசாலிக் கனவோ?

விஜய் : ஆமாம், நான் கண்ட கனவுதான் முதல்லே வந்த கனவு! அந்தக் கனவுப்படி டிக்கட்டும் வாங்கியாச்சு

நித்யா : எனக்கென்னவோ ஹரி கண்ட கனவுதான் பலிக்கும்னு தோன்றது. ஏன்னா நீ கண்ட கனவு பழசாப் போச்சே!...ம்! இன்னிக்கு தேதி 23. நேத்து வரைக்கும் மாமாவோட அன்பளிப்புப் பணம் வந்து சேரல்லே... இன்னிக்கும் வரப் போறதா தெரியல்லே... மின் கட்டணம் கட்ட கடைசி தேதியும் போயாச்சு! என்ன செய்யப் போறீங்க!

(தபால்காரர் வருகிறார்)



தபால்காரர் : தம்பி, உனக்கு பார்சல் வந்திருக்கு! கையெழுத்துப் போடு!

விஜய் : டேய் ஹரி, என்னடா இது? டில்லி மாமா பணத்துக்குப் பதிலா ஏதோ பார்சல் அனுப்பிச்சிருக்காரு!

ஹரி : டேய் நம்ம டில்லி மாமா இப்படித்தான் ஏதாவது 'சஸ்பென்ஸா' செய்வார்! போன பிறந்தநாளுக்கு இப்படித்தான் பார்சலை அனுப்பி உள்ளே 250 ரூபாய்க்கு புது அஞ்சு ரூபா நோட்டு வச்சு, வாழ்த்தும் அனுப்பிருந்தார். 'ம்' பிரிச்சுத்தான் பார்ப்போமே?

விஜய் : அ....ப்...பா! எவ்வளவு பலமான பேக்கிங்! மரப்பெட்டி... உள்ளே நிறைய கந்தல் துணி! அதுக்கு நடுவிலே பேப்பர் துண்டு! அதுக்கு நடுவிலே வட்ட வடிவத்திலே, ஒரு பிளாஸ்டிக் டப்பா!... டேய், இதுதான் மாமா 'பிரசன்டேஷனா?'

ஹரி : டேய், பொறுமையா கவனிடா...! இந்த பிளாஸ்டிக் டப்பாவோட மூடியையும் திறந்து பார்ப்போம்!

விஜய் : டேய் ஹரி! இதோ பாருடா வாத்தியக் கோஷ்டி பொம்மை! அழகா இருக்கு இல்லே...? நித்யாக்கா! இங்கே வந்து பார் மாமாவோட 'பிரசன்டேஷனை'!

நித்யா : அட வாத்தியக் கோஷ்டி பொம்மைங்க! இதே மாதிரி சிநேகிதி ஷீலா வீட்லேகூட பாத்திருக்கேன். இந்த பிளக்கை மாட்டி, ஸ்விட்சைப் போட்டா ஒரு பாட்டுக் கச்சேரியே நடக்கும்.


ஹரி : அப்படியா?

நித்யா : ஆமாம்! ஸ்விட்சைப் போட்டதும் இந்தப் பொம்மைகள் பாடும்! இந்தப் பொம்மை மிருதங்கம் வாசிக்கும் - இது பிடில் வாசிக்கும். இது தம்பூரா வாசிக்கும்! மொத்தத்தில் அழகா ஒரு பாட்டுக் கச்சேரியே நடக்கும்!

''என்னது, திடீர்னு அரசியலிலே குதிக்கப் போறேன்னு சொல்றே?''

''அரசியல்தான் ஒரு சாக்கடையாமே!''

செ.மலர்விழி



விஜய் : நிஜமாவா?... டேய் ஹரி! சீக்கிரம் பிளக்கை மாட்டி ஸ்விட்சைப் போடுடா... பார்க்கலாம்!

(ஹரி அப்படியே செய்கிறான்)

விஜய் : ஹைய், ரெண்டு பொம்மைப் பாடகர்களும் அழகா வாயை அசைச்சுக்கிட்டு, தாளம் போட்டுக்கிட்டுப் பாடறாங்க!

விஜய் : வயலின்காரரும், மிருதங்கக்காரரும் ஜோர்!

நித்யா : நல்லா கவனியுங்க! இப்போ பாட்டுகூட நல்லா கேட்கறது!

ஹரி : ஆமாம்!... சைலன்ஸ்! பாட்டைக் கேட்கலாம்!

பாடகர் பொம்மை : தந்தை தாய் சொல்லில் தனிப்பெருமை உண்டு மறவாதே புதல்வா!'

[பாட்டு கேட்கிறது]

நித்யா : என்ன விஜய்! பாட்டு எப்படி?... உங்களுக்காகத்தான்! (திடீரென்று பொம்மைகள் அசைவில்லாமல் நின்று விட...)

விஜய் : ஐய்யய்யோ... என்னடா இது? எல்லாப் பொம்மைகளும் அப்படியே நின்னுபோச்சு...

ஹரி : ஒருவேளை பொம்மையே கெட்டுப் போச்சா?

(அப்பா உள்ளே வருகிறார்)

அப்பா : பொம்மை எதுவும் கெட்டுப் போகல்லேடா... உங்க புத்திதான் கெட்டுப் போச்சு!

விஜய் : (மெதுவான குரலில்) ஐய்யய்யோ அப்பாவே வந்தாச்சுடா...! 'எலெக்ட்ரிக் பில் கட்டலே... என்ன செய்யப் போறாரோ?

அப்பா : டேய், இங்கே வாங்கடா... எங்கேடா ஒதுக்கறீங்க? ஏன் இந்தச் சங்கீதக் கச்சேரி நின்னுபோச்சுன்னு தெரியுமா?... இப்பத்தான் நம்ம வீட்டுக்கு வர 'எலக்ட்ரிக் சப்ளை'யை 'கட்' பண்ணிட்டுப் போறாங்க! ஏன் என்ன ஆச்சு? நித்யா ஏன் 'எலக்ட்ரிக் பில்லை கட்டலே?

நித்யா : இல்லேப்பா வந்து....


விஜய் : அப்பா... நாங்கதான் நீங்க கொடுத்த பணத்தை 'டெஸ்ட் மாட்ச்' டிக்கட் வாங்க செலவழிச்சுட்டோம்! அக்கா மேலே தப்பில்லே!

நோய் பரப்பும் கடைகள்!

பள்ளிக்கூட வாசலில்
பாட்டி கடையை வைக்கிறாள்
பாட்டி கடையில் விற்கவை
பழுத்துக் கெட்ட பழங்களாம்
துள்ளி ஆடும் குழந்தைகள்
சுத்தம் இல்லாப் பழங்களை
சுவைத்து விட்டால் நோய் நொடி
சுலபமாக வந்திடும்.

சாலை யோரம் வழியிலே
தகுதி இல்லா இடத்திலே
தம்பி தங்கை வாங்கவே
தரமும் இன்றி விற்கிறார்
மூலை முக்கில் இப்படி
மூக்கை நீட்டும் கடைகளில்
முந்தி வாங்கித் தின்பதால்
மோச மானநோய் வந்திடும்

ஈக்கள் மொய்க்கும் இடத்திலே
இருக்கும் சின்னக் கடைகளில்
இனிப்புப் பண்டம் வாங்கினால்
இன்னல் தேடி வந்திடும்



மூக்கைத் துளைக்கும் நாற்றமாய்
முளைத்து விட்ட கடைகளில்
மிட்டாய் வாங்கித் தின்பதால்
முட்டாள் ஆக வேண்டுமா?

-அழகனார்

ஹரி : நேத்து வரை டில்லி மாமாவோட பிறந்தநாள் பரிசை எதிர்பார்த்தோம்!... வரல்லை! இன்னிக்குத்தான் வந்தது...

விஜய் : அதுவும் நாங்க எதிர்பார்த்தபடி ரூபாயா வராம, பரிசுப் பொருளா வந்திருக்கு! நேத்தே ரூபாயா வந்திருந்தா எலக்ட்ரிக் பில்லைக் கட்டியிருப்போம்!

ஹரி : இப்படியெல்லாம் நடக்கும்னு நாங்க எதிர்பார்க்கல்லேப்பா.. 'இப்பவே போய் எங்க டிக்கட்டை யாருக்காவது வித்துட்டு கிடைச்ச பணத்தை வாங்கிட்டு வந்துடறோம். வாடா விஜய்!

அப்பா : ஏய்... நில்லுங்கடா... நில்லுங்க! அவசரப்படாதீங்க! நீங்க சின்னவங்க... அனுபவம் இல்லாதவங்க.... அதனால இப்படி தாறுமாறா ஏதாவது செய்யத்தான் செய்வீங்க! அதுக்காகத்தான் பெரியவங்க பேச்சை தட்டாம கேட்டு நடக்கணும்னு அந்தக் காலத்துலேந்து பெரியவங்க சொல்லிக்கிட்டு வராங்க!...

விஜய் : ஆமாம்ப்பா நாங்க பண்ணினது தப்புத்தான். பரீட்சை நேரத்துலே படிக்க லைட் இல்லாம நாங்களும் கஷ்டப் படப் போறோம்! அதை நினைக்கறப்போ ரொம்ப வருத்தமாயிருக்கு!

ஹரி : இனிமேல் இப்படி எங்க விருப்பப்படி நடந்துக்க மாட்டோம்ப்பா... எங்களை மன்னிச்சுடுங்க!

அப்பா : சரி! சரி! போய் நல்லா படிங்க!... பரீட்சை முடிஞ்சதும்தானே மாட்ச்சு?... பாத்துட்டுப் போங்க! நான் வேற ஏற்பாடு ஏதாவது பண்ணி எப்படியாவது எலக்ட்ரிக் பில்லைக் கட்டிக்கறேன்!

(மீண்டும் பொம்மைகள் பாட)

தந்தை தாய் சொல்லில்
தனிப் பெருமை உண்டு
மறவாதே புதல்வா!

விஜய் : ஹேய்! மின்சாரம் இல்லாம எப்படி பாடறது!

நித்யா : நான்தான் பாட்டரி செல்லைப் போட்டுப் பாட வச்சேன்... உங்க ரெண்டு பேருக்கும் ஏத்த பாட்டாச்சே... கேளுங்க!

அப்பா : 'கேட்டு நடங்க'ன்னு சொல்லும்மா!

(எல்லோரும் சிரிக்கின்றனர்)

பள்ளிவிட்டு வந்ததும் வராததுமாக யமுனாவின் அழுகைச் சத்தம் கேட்டது. கூடவே அம்மா திட்டுவதும் அதைத் தொடர்ந்து யமுனாவின் அண்ணன் வேலன் வெளியே ஓடுவதும் தெரிந்தது. இவற்றையெல் லாம் வேப்ப மரத்தடியில் அமர்ந்தபடி கவனித் துக் கொண்டுதானிருந்தார் தாத்தா.

தாத்தாவுக்கு வேலனின் செயல்களெல்லாம் வருத்தத்தை அளித்தது. தன்னைவிட சிறு பிள்ளைகளை அடித்து மிரட்டுவதும், கிண்டல் செய்வதும் வேலனுக்கு வெல்லக்கட்டி தின் பதைப் போல். அதோடு தங்கை யமுனாவை எப்போது பார்த்தாலும் அழவைத்துக் கொண்டே இருப்பதில் தனி மகிழ்ச்சி. யமுனாவை மட்டுமல்ல, விளையாடச் செல்லு மிடத்திலும் சிறுப்பிள்ளைகளைத் துன்புறுத்து வதும் 'சம வயதுடையவர்களை வம்புக்கிழுப் பதும் வேலனுக்குப் பிடித்தமான பொழுது போக்கு.

நீயா காப்பாத்துவே?

இருட்டிக் கொண்டிருக்கும்போது வேலன் அடித்து விட்டதாக இரண்டுப் பிள்ளைகள் அழுதபடி வந்து, அம்மாவிடம் கூறிவிட்டுப் போயினர். வேலன் வந்தவுடன், அவனை அடிக்க அம்மா குச்சியைத் தேடினாள். தாத்தா அம்மாவைத் தடுத்துவிட்டு வேலனைக் கூட்டிக் கொண்டு வேப்பமரத்தடிக்கு வந்தார். கூடவே யமுனாவும் போனாள். மூவரும் மரத்தடியில் பரப்பப்பட்டிருந்த மணலில் அமர்ந்தனர்.

"உங்களுக்கு ஒரு கதை சொல்லட்டுமா?" என்று கேட்டுவிட்டுத் தாத்தா ஆரம்பித்தார்.

"ஒரு காட்டுல பெரிய யானை இருந்தது. அந்தக் காட்டுல எல்லா மிருகங்களும் இருந்தன. ஒரு நாள் அந்த யானைக்குக் கீழ் முதுகுல, அரிப்பு எடுத்தது. தாங்க முடியாத அரிப்பு. உடனே பக்கத்துல இருந்த மரத்துல தன் உடம்பைத் தேய்ச்சுது. ஆனா அது பட்ட மரம். அதுனால, மரம் படார்னு முறிஞ்சு விழுந் துடுத்து. யானைக்கு உடனே தலைக்கனம் ஏற் பட்டது. ஒரு பெரிய மரத்தையே உடைச்சித் தள்ளிட்டேனே! என்னை விட இந்தக் காட்டுல வேறு பலசாலி உண்டான்னு கேட்டுக்கிட்டே மரங்களைகளையெல்லாம் முறிக்க ஆரம்பிச்சது. அதோட, எதிர்ப்பட்ட மிருகங்களையெல்லாம் தும்பிக்கையால அடிச்சு விரட்டவும் தொடங் கியது. காடே அதிரும் அளவுக்குப் பிளிறியது. மிருகங்களெல்லாம் பயந்து ஒளிஞ்சுக்க ஓடிப் போச்சு. அது போற வழியில ஒரு உயிருகூட இல்லை. புல்லுங்க கூட தலையக் குனிஞ்சு வளைஞ்சுகொடுத்ததால் யானை மிதிக்கும் போது நசுங்கிப் போகாம தப்பின. இதை யெல்லாம் கவனிச்ச யானைக்கு, கர்வம் அதிகமாச்சு. என்னை எதிர்க்க ஆளே இல் லேன்னு பிளிறி அமர்க்களம் பண்ணி ஓடியது.

ஆனா ஒரே ஓர் புதர்ல ஒரு தேனீ மட்டும் இதையெல்லாம் கண்டுக்காம தரையில படர்ந் திருந்த சின்னச் செடியில் மலர்ந்திருந்த குட்டிப் பூவில, தேன் எடுத்திட்டிருந்தது. யானையை அது லட்சியமே பண்ணலே. தன் வேலையி லேயே கவனமா இருந்தது."

"ஐய்யய்யோ... அப்புறம் என்னாச்சு தாத்தா!" என்றார்கள் வேலனும் யமுனாவும்.

தாத்தா மீண்டும் கதையைத் தொடர்ந்தார்.

"தேனியின் அலட்சியத்தைப் பார்த்ததும் யானைக்கு பயங்கரமான கோபம் வந்தது. அதை அப்படியே மிதிச்சுக் கொல்லணும்னு அதன் பக்கமா போனது.

"அற்பத் தேனியே, என்னைப் பார்த்து எல்லா மிருகங்களும் பயந்துதுங்க. என் கண்ணுலே படாம ஒளிஞ்சு பிழைக்குதுங்க. உனக்கெவ்வளவு தைரியம் இருந்தா, நான் வரதைப் பார்த்தும் கூட இப்படிப் பயமில்லாம உட்கார்ந்திருப்பே!" என்று யானை கத்திக் கேட்டது."

"யானை கோபமா கேட்டும்கூட தேனி பயந்து நடுங்கலே! உடனே அது சொன்னது.



"யானையாரே, நீங்க வலிமை மிக்கவர்தான். அதுல சந்தேகமே இல்லே. அதுக்காக உங்களைப் பார்த்துட்டு நான் எதுக்கு ஓடணும்? அப்படி ஓடினா, உங்களுக்குப் பேரென்ன தெரியுமா? கொள்ளைக்காரன்! கொள்ளைக்காரனப் பார்த்துத்தானே எல்லோரும் பயந்து ஓடுவாங்க? வல்லவரா இருக்கும் நீங்க, ஏன் நல்லவராவும் இருக்கக் கூடாது? நீங்க எல்லாரிடமும் அன்பாப் பழகினாத்தான் உங்களுக்கு ஏதாவது ஆபத்து வந்தா மத்தவங்க காப்பாத்துவாங்க..."

தேனி இப்படிச் சொல்லிக் கொண்டே ஒரு மரத்தோட உச்சிக்குப் பறந்து போனது.

"அறிவுகெட்ட தேனியே! யாரு யாருக்கு உதவறதுன்னு கணக்கு இல்லையா? உருவத்தைக் கூடப் பார்க்க முடியாத அளவு துரும்பா இருக்கிற நீ, ஆபத்து வந்தா என்னைக் காப்பாற்றப் போறியா...?" என்று கேட்டு ஏளனமாகச் சிரிச்சது யானை. "சிறு துரும்பும் பல்குத்த உதவும்..." "ஆனையாருக்குக்கூட அடி சறுக்கும்" என்று பறந்து போனது தேனி.


"தாத்தா... தேனிக்கு பழமொழி எப்படித் தெரியும்?"- யமுனா கேட்க- "உங்க பள்ளியில இருக்கிற பூந்தோட்டத்துல தேனெடுக்கறப்போ உங்க ஆசிரியர் பாடம் நடத்தினதைக் கேட்டுதோ என்னவோ" என்று சிரித்துக் கூறிவிட்டுக் கதையைத் தொடர்ந்தார் தாத்தா.

"ஒருவாரம் போச்சு. சர்க்கஸ் கம்பெனிக்காரங்க யானைக்குட்டி ஒன்னு பிடிக்கனம்னு காட்டுக்கு வந்தாங்க. அங்கே இருந்த முரட்டு யானையைப் பார்த்ததும், அதை சுட்டுக் கொன்னுட்டு தந்தத்தை எடுத்துட்டுப் போனா நல்ல விலை கிடைக்கும்னு நெனைச்சி சுடுவதற்குக் குறி வைச்சாங்க... யானைக்கு அதைப் பார்த்து, கால் நடுங்க ஆரம்பித்தது! அப்போ அந்தப் பக்கமா தேனெடுக்க வந்த தேனி, இதப் பாத்துட்டு, உடனே தன்னோட கூட்டத்தைக் கூட்டிட்டு வந்து சர்க்கஸ் காரங்களைத் துரத்தியடிச்சிடுச்சுது. யானை அன்னி வேர்ந்து தன் கர்வத்தை விட்டுவிட்டு எல்லார் கிட்டயும் பணிவா; அன்பாப் பழக ஆரம்பிச்சுது."

தாத்தா கதையை முடிக்க, வேலன் சில நிமிடங்கள் யோசித்தான். பிறகு தாத்தா, இனிமே நான் யாரையும் துன்புறுத்தமாட்டேன். எல்லார்கிட்டயும் அன்பா நடந்துக்குவேன். யமுனா, என்னை மன்னிச்சிடு. இனிமே உன்னையும் அழ வைக்கமாட்டேன்" என்றான்.

வேலன் திருந்திவிட்டதில் மனநிறைவு பெற்ற தாத்தா, வேலன் தங்கையோடு கைகோர்த்து சாப்பிடச் செல்வதை மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டிருந்தார்.

குறுக்கு வழி!



பரத்வாஜர் என்ற முனிவருக்கு, 'யவக்கிரீதன்' என்ற ஒரே ஓர் மகன். அவனுக்குக் கல்வி வரவில்லை. இந்தக் குறையை நீக்க இந்திரபகவானை வேண்டி, காட்டில் கடுந்தவம் செய்தான்! இந்திரனும் மனம் இரங்கி, கிரீதனிடம் வந்து, 'க்ரீதா! உனக்கு என்ன வரம் வேண்டும்?' என்று கேட்டார்.

கிரீதன் இந்திரனிடம், 'பெரிய பெரிய மகான்களுக்கெல்லாம் தெரியாத வேத மந்திரங்கள் எனக்குத் தெரிய வேண்டும்; நான் பெரிய வித்வானாக மாறிட வேண்டும். குருவின் மூலம் அனைத்தையும் படிப்பதற்கு அதிக காலம் ஆகும்! அவ்வாறு இல்லாமல் இந்தக் கடுந்தவத்தின் மூலமாகவே நேரே இவைகளை அடைய அருள்புரிந்திட வேண்டும்' என்றான்.

இதைக் கேட்டு இந்திரன் சிரித்தான்!

'கிரீதா! வேதங்களைத் தெரிந்து கொள்வதற்கு வழி, நல்ல குருவைத் தேடிக் கற்றுக் கொள்வதுதான். அதற்கு இந்தக் குறுக்கு வழி சரி அல்ல. கல்விக்கு வழி தவமல்ல. கல்விக்கு வழி கல்வியேதான்!' எனக்கூறி இந்திரன் மறைந்து விட்டான்.

கிரீதன் விடவில்லை. இன்னும் மிகக் கடுமையான தவம் செய்தான்! இந்திரன் மீண்டும் தோன்றி, 'கிரீதனே, நீ வீணாக உடலை வாட்டிக் கொள்ளாதே. உன் தந்தைக்கே வேதம் நன்கு தெரியும். நீ அவரிடம் சீடனாக இருந்து கற்றுத் தெரிந்து கொள்'' எனக் கூறினார். ஆனால் கிரீதன் விடாப்பிடியாக, "பிரபுவே! நீ எனக்கு வரம் தராவிட்டால், என் உடலில் உள்ள உறுப்புகளை ஒவ்வொன்றாக வெட்டித் தீயில் போட்டுக் கடும் தவம் செய்வேன்!" என்று விடாப்பிடியாகச் சொன்னான்.

அன்று வழக்கப்படி விடியற்காலையில் கங்கையிலே குளிக்கச் சென்றான் கிரீதன். அப்போது ஒரு வயதான மெலிந்த கிழவன் ஒருவன் கங்கைக்கரையில் உட்கார்ந்து இருப்பதைப் பார்த்தான். அந்தக் கிழவன் ஆற்று மணலைக் கையில் எடுத்து கங்கை நீரில் போட்டுக் கொண்டே இருந்தான்!

"கிழவரே! நீர் என்ன செய்கிறீர்?" என்று கிரீதன் அவரைக் கேட்டான்.

"நான் கங்கையைத் தாண்ட இங்கே பாலம் ஒன்று கட்டுகிறேன்!" என்றார் கிழவர்.

கிரீதன் சிரித்தான்; "ஏனய்யா பெரியவரே! கங்கைக்குக் குறுக்கே கைப்பிடி மணலைப் போட்டுப் பாலம் கட்ட நினைக்கிறீரே! இது முடிகிற செயலா? உமக்கு என்ன பைத்தியமா?' என்று அவரைக் கேட்டான்.

"நீர் மட்டும் படித்து அறியாமல் குறுக்கு வழியில் தவம் செய்து மேதையாக வேண்டும் என்று பிடிவாதமாக நினைக்கிறீரே! அது போல்தான் நானும் கைப்பிடி மணலைப் போட்டுப் பாலம் கட்ட நினைக்கிறேன். உன் முயற்சி முடியக்கூடியது என்றால் என் முயற்சியும் நடக்கக்கூடியதே" என்றார் கிழவர்.

கிழவர் சொன்னதைக் கேட்டவுடன் கிரீதனுக்கு இருந்த தவறான பிடிவாதம் அடங்கியது. அந்தக் கிழவர் வேறு யாருமல்ல; இந்திரன்தான்! உண்மையை உணர்ந்து அவரை வணங்கினான் கிரீதன்.

பின்னர் கஷ்டப்பட்டு, வேதங்களை நன்கு படித்துத் தேர்ந்து கிரீதன் 'பண்டிதன்' ஆனான்!


- அம்மு

ஒலியும் கேட்டலும்


ஆழி




ஒலி, பொருள்களின் அதிர்வுகளினால், காற்றின் மூலம் பரவுகிறது. பொருள்களின் அதிர்வுகள், காற்றை அதிரும்படிச் செய்து ஒலி அலைகளை உண்டுபண்ணும்.



ஒலியின் வேகம் மணிக்கு 1216 கி.மீ. ஒலியின் வேகம், ஒளியின் வேகத்தைவிடக் குறைவு. அதனால் தான் இடியும் மின்னலும் ஒரே சமயத்தில் தோன்றினாலும், மின்னல் முதலில் தெரிகிறது; இடியின் ஓசை பின்னால் கேட்கிறது.




காற்று உள்ள இடத்தில் தான் ஒலி கேட்கும். காற்று இல்லாவிட்டால் சலனங்கள் இல்லை. சந்திரனில் எந்தச் சிறு சத்தமும் கேட்காது. ஏனென்றால் சந்திரனில் காற்று இல்லை.




நாம் பேசுவது என்பது, நம்முடைய குரல் நாண்களை அதிரச் செய்வதுதான். குரல் நாண்கள் 'குரல் பெட்டி'யினுள் இருக்கிறது. குரல் பெட்டி, தொண்டையினுள் இருக்கிறது. தொண்டையில் கடினமான ஒரு தசை உருண்டை இருக்கிறது. பேசும்போது அது மேலும் கீழும் அசையும். அதுதான் குரல் பெட்டி. இரண்டு குரல்நாண்கள் அதற்கு அப்பால் நீண்டு இருக்கும். நுரையீரல்கள் காற்றை அதனுள் செலுத்தும் போது அவை அதிர்ந்து ஒலி உண்டாகும்.

ஆண் தவளைக்குத் தொண்டையில் குரல்பெட்டிகள் உண்டு. ஆண்தவளை கத்தும்போது, அதன் தொண்டையை பலூன் போல் ஊதச் செய்யும்.







சில பறவைகளுக்கும் இரண்டு விதமான 'குரல் பெட்டிகள்' உண்டு. ஒன்று பாடுவதற்கு, மற்றொன்று மற்ற பறவைகளைக் கூப்பிடுவதற்கு, அல்லது எச்சரிப்பதற்கு.

தவளை இனங்களில், அமெரிக்காவில் உள்ள 'எருதுத் தவளை' கத்தினால் 1½ கி.மீ. தூரத்திற்கு அந்தச் சத்தம் கேட்கும்!



கொசு பறக்கும்போது கேட்கும் 'ஙொய்' என்னும் சத்தம் அதன் வாயிலிருந்து வருவதல்ல; அதன் சிறகுகளை அசைப்பதிலிருந்து ஏற்படும் சத்தம்தான் அது. ஒரு வினாடி இடை நேரத்தில் கொசு தன் சிறகுகளை சுமார் 500 தடவைகள் அசைக்கிறது.



விலங்குகளில் உரத்த குரலில் ஒலி எழுப்புவது 'ஹௌலர்' குரங்கு. இதன் கூக்குரல் சுமார் 4 கி.மீ. தூரத்திற்குக் கேட்கும்! இது மற்ற விலங்குகளைவிட 25 மடங்கு அதிகம்!




வெளியிலிருந்து வரும் ஒலிகள், காற்றை அதிர்வடையச் செய்கின்றன. அந்த அதிரும் காற்று, காதிலுள்ள செவிப் பறையை அதிர்வடையச் செய்கின்றன. அதனுடன் தொடர்புகொண்ட நுண்ணிய எலும்புகள் அதிர்ந்து, உட்செவி அதிர்ந்து, உட்செவி நரம்புகள் மூளைக்குச் செய்தியை அனுப்புகின்றன. இதுவே நாம் கேட்பது.




நம்முடைய கேட்கும் சக்தி, நாள் முழுதும் ஒரே அளவில் இருக்காது என்றும், காலையில் மிகக் கூர்மையாகவும், நடுப் பகலில் மந்தமாகவும், சாப்பாட்டுக்குப் பிறகு மிக மந்தமாகவும் இருக்கும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.



வெட்டுக்கிளியின் காதுகள் அதன் வயிற்றுக்கு அடியில் இருக்கின்றன.



மீனின் காதுகள் அதன் உடம்பில் ஒரு கோட்டில் அமைந்திருக்கின்றன. அந்தக்கோடு, அதிர்வுகளை உணர்கிறது.




மீன்கள் நீரின் ஆழத்தில் இருந்தாலும், கரையில் ஏற்படும் அதிர்வுகளை, நீரின் வழியே அறிந்து கொள்ளும் சக்தி அவற்றுக்கு உண்டு.

வட துருவத்தில் அதிகமான ஒலிகளின் குறுக்கீடு இல்லை என்பதால், அங்கே இரண்டு பேர்கள் சாதாரணமாகப் பேசிக்கொண்டால் அது 2 கி.மீ. தூரத்திற்குக் கேட்கும்!

இதுவரை மனிதன் வெகு தூரத்திலிருந்து கேட்ட பயங்கர ஒலி 1883-ஆம் ஆண்டு, 'க்ராக்கடோவா' எரிமலை வெடித்தபோதுதான். இந்தோனேஷியாவில் எழுந்த அந்த ஒலி 4800 கி.மீ. களுக்கு அப்பால் உள்ள மடகாஸ்கர் தீவுவரை கேட்டது.




அதிக ஒலியைத் தாங்கிக் கொள்ள முடியாத உயிரினம் பிளாட்டிபஸ். ஆஸ்திரேலியாவில் உள்ள இந்த உயிரினம், பலத்த சத்தம் கேட்டால், அந்த அதிர்ச்சியில் அப்படியே செத்து விடும்!






ஒலி, காற்றின் மூலம் செல்லுவதைவிட நீரின் மூலம் செல்லுவது 4 மடங்கு அதிகம். கடலுக்குள் ஒரு 'ஸ்பெர்ம் திமிங்கிலம்' எழுப்பும் ஒலியை சுமார் 25 கி.மீட்டருக்கு அப்பால் உள்ள மற்றொரு திமிங்கிலம் தெளிவாகக் கேட்கும்!







ரப்பர் பந்துபோல் ஒலி மோதித் திரும்புவதுதான் எதிரொலி.



வினாடிக்கு 20 முதல், 20,000 அதிர்வுகள்வரை நாம் கேட்கமுடியும். ஆனால் 20க்குக் குறைவான அதிர்வுகளையும் 20,000க்கு அதிகமான அதிர்வுகளையும் நாம் கேட்கமுடியாது. இதற்குக் 'கேளாத ஒலி' என்று பெயர். இந்தக் கேளாத ஒலி அலைகளைக் குவித்து ஒருமுகப்படுத்தினால், தீயை உண்டாக்கலாம். இதன் அதிர்வுகளைக்கொண்டு ஆடைகளைச் சலவை செய்யலாம்!



யானைகள் சுமார் 3 கி.மீ. பரப்பளவில் உள்ள மற்ற யானைகளுடன் 'கேளா ஒலி'யின் மூலம் தகவல்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றன. என்கிறார்கள் விஞ்ஞானிகள். இந்தக் கேளா ஒலிகள், மற்ற பிராணிகளுக்கோ மனிதர்களுக்கோ கேட்பதில்லை. ஆப்பிரிக்காவில், 'ஒரெஸான்' என்னுமிடத்தில் இதைப் பரிசோதித்துக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.



உலகில் மிக அதிகமான எதிரொலிகள் கேட்குமிடம் அயர்லாந்தில் இருக்கிறது. அங்கே ஒரு தடவை ஓர் ஒலியை எழுப்பினால் அது 100 தடவைகள் எதிரொலிக்கும்.



வெளவால்களின் கண்களைக் கட்டிவிட்டால் கூட அவற்றால் நன்றாகப் பறக்க முடியும். கேளாத ஒலி அலைகளை எழுப்பி, அந்த ஒலி அலைகள், பொருள்கள் மீது பட்டுத் திரும்பும் எதிரொலியைக்கொண்டு அவை தடங்கல் இல்லாமல் பறக்கின்றன.

பொருள்களின் அதிர்வினால் ஒலி உண்டாகிறது. அதுபோல, அந்த ஒலியைப் பதிவு செய்து, அந்தப் பதிவின் மூலம், ஒலியை மீண்டும் ஒலிக்கச் செய்து கேட்கலாம் என்னும் அடிப்படையில்தான், 'தாமஸ் ஆல்வா எடிஸன்', 'கிராமபோன்' என்னும் கருவியைக் கண்டுபிடித்தார். இசைத்தட்டின் மூலம் பாட்டுக் கேட்கும் கருவி இது.





மீண்டும்.

முகம்மது ஹில்மி

வஹீதாவின் பார்வை செல்வியின் மீது விழுந்தது.

செல்வியின் பக்கத்தில் யாருமே இல்லை. தனியாக உட்கார்ந்திருந்தாள். அவளே வலியப் பேசச் சென்றாலும் சற்று எச்சரிக்கையோடு மாணவிகள் ஒதுங்கிச் சென்றனர்.

வஹீதாவுக்கு அவளைப் பார்க்கும் போது மிகவும் பரிதாபமாக இருந்தது.

தன்னைக் காட்டிக் கொடுத்தாலும் தனக்குப் பெரிய தண்டனை வாங்கித் தருவதற்கு அவள் காரணமாக இருந்தாலும் செல்வி தீய மனம் படைத்தவள் இல்லை என்பது அவளுக்கு உறுதியாகத் தெரியும்.

நினைக்கும் போது வேதனையாக இருந்தாலும் அன்று நடந்த நிகழ்ச்சி மீண்டும் அவள் மனத்தில் ஓடியது.

அது மூன்றாம் பாடவேளை நீதி போதனை வகுப்பு. ஆசிரியர் விடுப்பில் இருந்தார். அதனால் யார் வரப்போகிறார்கள் என்று ஆவலோடு மாணவிகள் அமர்ந்திருந்தனர்.

தலைமை ஆசிரியையே வந்துவிட்டார்! அவரைக் கண்டதும் பெட்டிப் பாம்பாக அடங்கி அமர்ந்திருந்தனர் மாணவிகள்.

வகுப்பில் பயங்கர அமைதி!

கண்டிப்புக்குப் பெயர் போன தலைமை ஆசிரியை மாணவிகளுக்கு சிம்ம சொப்பனம். பார்த்தாலே பயந்து நடுங்குவார்கள். ஆனால், அவரிடம் ஒரு நல்ல பழக்கம் இருந்தது. வகுப்பிற்குள் வந்து விட்டால் ஓரளவுக்கு இயல்பாக இருப்பார். வழக்கமாக முகத்தில் தெரியும் கண்டிப்பும் கடுமையும் இருக்காது. புன்முறுவலை முகத்தில் தவழ விட்டுக் கொண்டு வேடிக்கையாகப் பேசுவார்.

''மாணவிகளே!'' என்று துவங்கி வகுப்பை ஒரு நோட்டம் விட்டார் தலைமை ஆசிரியை.

''நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்வது பற்றி நான் உங்களுக்கு முந்தைய வகுப்பு ஒன்றில் விரிவாகச் சொல்லியிருக்கிறேன். பொதுவாக, தங்களோடு பழகுபவர்களின் குறைகளை வைத்து அவர்களுக்கு ஒரு கேலிப் பெயர் சூட்டி கிண்டல் செய்யும் பழக்கம் உங்களிடம் உள்ளது. இது தீய பழக்கம். கிண்டல் செய்யப்படும் மாணவிகள் எப்படி மன வேதனைப்படுவார்கள், தெரியுமா? சிலர் ஆசிரியைகளுக்கே கூட கேலிப் பெயர்கள் சூட்டிப் பேசிக் கொள்ளவும் செய்கிறார்கள். இதெல்லாம் மிகவும் தீய பழக்கங்கள்'' என்றார்.

பிறரின் குறைகளை வைத்து என்னென்ன மாதிரியெல்லாம் கேலிப் பெயர்கள் சூட்டுகிறார்கள் என்று தலைமை ஆசிரியை விளக்கமாக உதாரணத்துடன்

சொல்லிக் கொண்டு சென்ற போது வகுப்பில் சிரிப்பலைகள் அவ்வப் பொழுது வர ஆரம்பித்தன.

ஒருவாறு தான் பேசியதை நிறுத்தி மௌனமாக வகுப்பின் மீது தன் கண்களைச் சூழல விட்டார் தலைமை ஆசிரியர் எல்லோரும் நடுங்கினர்.

"நீங்கள் எல்லாம் நல்ல மாணவிகள். இது போன்ற வெறுக்கத் தக்க செயல்களில் ஈடுபட மாட்டீர்கள் இல்லையா?'' என்றவாறு மீண்டும் வகுப்பைப் பார்த்தார்.

"மாட்டோம் மேடம்" என்று கோரசாக ஆனால் சப்தம் அதிகம் எழாமல் சொன்னார்கள் எல்லோரும்.

அந்தக் கோரஸ் சப்தம் அடங்குவதற்கு முன்பாகவே செல்வி மெல்ல எழுந்து, "மேடம்" என்று அழைத்தாள். தலைமை ஆசிரியை அவளைப் பார்த்தார்.

"வஹீதா இருக்காளே மேடம்? அவள் நம்ப அலுவலக உதவியாளரை



தெத்துப்பல் செல்லம்மா என்று சொல்றா மேடம்" என்றாள். வகுப்பே கொல்லென்று சிரிப்பில் மூழ்கியது.

வஹீதா மெல்ல எழுந்தாள். அவள் காலின் கீழே தரை நழுவிச் செல்வதைப் போலத் தடுமாறினாள். தலை கவிழ்ந்த வண்ணம் நின்றாள்.

தலைமை ஆசிரியையின் முகத்தில் இதுவரை இருந்த மலர்ச்சி மறைந்தது. வழக்க மான கடுமை தலைகாட் டியது.

ஒரு வழியாக பெல் அடித்தார்கள்.


தலைமை ஆசிரிை வெளியேறும்போது 'என் னுடன் வா' என்று வஹீ தாவிடம் சைகை செய்து விட்டு வெளி யேறினார்.


'ஐயோ, என்ன செய்வேன்?'' என்று வஹீதா மனதுக்குள் புலம்பினாள்.

இம்மாதிரி நிகழ் சிகளுக்குத் தலைமை ஆசிரியை தரும் தண்டனை, தனது அறை வாசலில் நாள் முழுவதும் நிற்க வைப்பது தான் வழக்கமான அந்தத் தண் டனை தனக் குக் கிடைக்கப் போகிறது என்பது வஹீதாவிற்கு நிச்சய மாகத் தெரிந்து விட்டது.

தலைமை ஆசிரியையின் அறை வாசலில் அவள் நிற்க வைக்கப்பட்டாள்.

தான் விளையாட்டாகச் செய்தது இவ் வளவு பெரிய தண்டனை தரக் கூடிய தர்மமா?





''கால் இல்லாத டேபிள் எது?''
''டைம் டேபிள் (Time table) தான்

அ.சு.கிருஷ்ணன்

செல்வியின் மீது அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது. தன்னை வசமாக மாட்டிவிட்டாளே என்று நினைத்துப் பொறுமினாள்.

தான் அவ்விதம் தவறாகப் பேசும் பொழுது, "அது தவறு. அப்படிப் பேசக் கூடாது" என்று சுட்டிக்காட்டினாளா? அப் போது நம்முடன் சேர்ந்து சிரித்து விட்டு திடீரென்று இப்படி வசமாக மாட்டி விட்டாளே!

அன்று பூராவும் தலைமை ஆசிரியை யின் அறைவாசலிலேயே அப்படியே நின்று கொண்டிருந்தாள் வஹீதா.

இது நடந்த பிறகு மாணவிகள் மத் தியில் செல்வி ஒரு பயங்கர ஒற்றனைப் போல் காட்சி தரத் தொடங்கினாள்! பேசிக் கொண்டே இருப்பார்கள். செல்வி வந்தால் உடனே நிறுத்தி விடுவார்கள். எங்கே அவள் தலைமை ஆசிரியையிடம் எதையாவது சொல்லிக் கோள் மூட்டி விடுவாளோ என்று எல்லோரும் அவளைத் தவிர்த்தனர்.

வஹீதாவுக்குக் கூட அவளைப் பார்க் கும் போது கோபம் மறைந்து போய் அனு தாப உணர்ச்சியே மேலிட்டது. தெரியா மல் செய்த தவற்றிற்கு நான் ஒரு நாள் முழுவதும் தண்டனை அனுபவித்தேன். ஆனால் செல்வியோ, தான் செய்த காரி யத்திற்கு எல்லோரின் வெறுப்பையும் சம் பாதித்துக் கொண்டு ஒவ்வொரு நாளும் வேதனையை அனுபவிக்கிறாளே என்று பரிதாபப்பட்டாள்.

அவள் தன்னிடம் பேச வருவாள் என்று வஹீதா எதிர்பார்த்தாள். ஆனால், குற்ற உணர்வு காரணமாக செல்வி அவள் இருந்த பக்கமே திரும்பவில்லை. உண்மை யில் வஹீதா அவளுடன் பேச விரும் பினாள். பழையபடி அவளுடன் நட்பைப் புதுப்பித்துக் கொள்ள விழைந்தாள். தனி மையில் அமர்ந்து மனத்தில் செல்விக்குக் கடிதமாக எழுதத் தொடங்கினாள்.

"செல்வி! இக் கடிதத்தைப் பார்க்கும் பொழுது உனக்கு ஆச்சரியமாக இருக்கும். என்னால் மனதில் உள்ளவைகளைக் கோர்வையாக உன்னிடம் நேரடியாகச் சொல்ல முடியவில்லை. எனவேதான் இக்கடிதத்தை எழுதுகிறேன்.

எனக்கு உன் மீது கடுமையான கோபமும் வெறுப்பும் இருந்தது உண்மைதான். நீ என்னை எந்த விதமான முன் அறிவிப்பும் இல்லாது; என்னைத் திருத்திக் கொள்ள வாய்ப்புக் கூடத் தராமல் இப்படிக் காட்டிக் கொடுக் கலாமா? அதன் விளைவை எவ்வளவு வேதனையுடன் அனுபவித்தேன் என்பதை நீ உணர்ந்து பார்த்தாயா?

உனக்கு ஒன்றை ஞாபக மூட்டவா? நீ எவ்வளவு முறை மற்றவர்களைப் பற்றிக் கிண்டலாகவும் கேலிப் பெயர்கள் சூட்டியும் பேசியிருக்கிறாய்? தலைமை ஆசிரியைமுன் நான் தலைகுனிந்து நின்ற போது என் மனத்தில் நீ பேசிய அத்தகைய பேச்சுக்கள் அடுக்கடுக்காக ஓடிவந்தன. அப்பொழுதே எனக்கு இருந்த கோபத்தில் உன்னை நான் காட்டிக் கொடுத்திருக் கலாம். பழிக்குப் பழி வாங்கியிருக்கலாம்.

பழிக்குப் பழி வாங்குவதும் ஒரு பண்பற்ற செயல்தானே? எனவே பொறு மையாக நின்றேன். பண்பற்ற செயல்கள் எதுவானாலும் அதை வெறுத்து ஒதுக்க வேண்டும் என்பதை நன்கு உணர்கிறேன்.


இப்பொழுது நமது வகுப்புத் தோழி களைப் பார். யாரும் உன்னுடன் பேசு வதற்கு அஞ்சுகிறார்கள். பிறரைப் பற்றிக் கோள் சொல்வது தவறான செயல். அப் பழக்கம் உன்னிடம் உள்ளது என்பதால் அவர்கள் உன்னைக் கண்டு பயப்பட வில்லை. பின்பு எதற்கு என்று கேட் கிறாயா? எங்கே தன்னை மாட்டி விடு வாயோ என் அச்சம்! ஆக உனக்கும் சரி அவர்களுக்கும் சரி பண்பற்ற செயல் களைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் வரவில்லை. எல்லாவற்றையும் ஒரு விளையாட்டாகக் கருதுகிறீர்கள்.

நடந்தவைகளை மறந்து விடுவோம். நானும் செய்த தவறை மீண்டும் செய்ய மாட்டேன். நீயும் உனது போக்கை மாற்றிக் கொள். நாம் மீண்டும் தோழிகளாவோம்."

கடிதத்தை எழுதி முடித்தாள். நம்பிக் கையோடு செல்வியிடம் நடந்தாள்.

அரசகுமாரனும் மூன்று அற்புதப் பொருள்களும்

கதை அமைப்பு: குமாரன்.
ஓவியம் : சசி






நூரினாவுக்கு வெறுப்பாகி விட்டது.
அடிக்கடி என்னைப் புகழ்ந்தால் நான் சந்தோஷப் படுவேன் என்று நினைக்கிறார்கள். வீரசாகசங்கள் புரிய ஒரு ராஜகுமாரனும் இல்லையா, அப்பா?
தேடிப்பார்க்கறேன்.
வேண்டாம். இனிமேல் நான் யாரையுமே சந்திக்கத் தயாராக இல்லை.
படார்!
அடப்பாவமே
அந்தப்புரத்தில் அடைந்து கிடந்தாள் நூரினா. ஒரு நாள்...
என்பெயர் அகமத். பல்ஸாரா நாட்டு ராஜகுமாரன். வேட்டையாடப்போனபோது வழி தப்பி...
அரசகுமாரனுக்கு உரிய மரியாதை பெற்றான் அகமத்.
குளித்து, உணவருந்தி, இளைப்பாருங்கள்.
எத்தனை அழகான ராஜகுமாரன்!



அகமத் படுக்கச் சென்ற பிறகு...
நம் ராஜகுமாரிக்கு ஏற்றவன்.
ஆனால் நூரினாதான் எந்த ராஜகுமாரனையும் ஏறெடுத்துப் பார்க்க மாட்டேன் என்று பிடிவாதம் செய்கிறாளே!
மறுநாள்...
அரசே! நான் விடை பெறுகிறேன். போவதற்கு முன்...
என்ன?
உங்கள் மகளின் அழகு பற்றிக் கேள்விப்பட்டேன். அவளைப் பார்க்க விரும்புகிறேன்.
அவளைப் பார்க்கணும்னா நீ அவளை மணக்கத் தகுதியுள்ள வீரன் என்பதை நிரூபிக்க வேண்டும்.
அப்படியே ஆகட்டும்.


வருத்தத்துடன் தன் நாடு திரும்பினான் அகமத்.
இளவரசே! ஏன் சோகமாக இருக்கிறீர்கள்?
அமைச்சரே!...
நடந்ததைக் கூறினான்...
எனக்கு நூரினாவை எப்படியாவது பார்க்கணும்.
நீங்க சின்னக் குழந்தையாக இருந்த போது...
...ஜாதகம் கணிக்க வந்த ஜோதிடர்...
அரசே! இது யோக ஜாதகம். ஒரு பேரழகியை மனைவியாக அடைவான். ஆனால் அதற்கு முன்னால்....
...பல ஆபத்துக்களை இவன் சந்தித்து மூன்று மந்திரப் பொருள்களைக் கண்டுபிடிக்க வேண்டும்.
என்ன அவை?
மந்திர டெலஸ்கோப். அது சுவர்களைக் கூட ஊடுருவிப் பார்க்கும்! மந்திரக் கம்பளம். அது எங்கேயும் இவனைச் சுமந்து பறக்கும்!



மூன்றாவது?
மந்திரவில். அம்பு தொடுத்து எய்தால் குறிபிசகவே பிசகாது...
பழைய கதையை ஞாபகம் வைத்திருந்து சொன்னதற்கு நன்றி. ஆனால் இந்த மந்திரப் பொருள்களை நான் எங்கே போய்த் தேடுவேன், அமைச்சரே?
இதை நானும் அன்றைக்கே அந்த ஜோதிடரிடம் கேட்டேன். ஒரு புராதன நகரில், ஒரு வியாபாரியின் வீட்டில், பழையபெட்டி ஒன்றில் டெலெஸ்கோப் இருக்கிறது என்றார்.
அதைக் கண்டு பிடித்து விட்டால் பிறகு ஒரு குக்கிராமத்தில் உள்ள மந்திரக் கம்பளத்தை அடைவது சுலபம். பச்சைப் பின்னணியில் சிவப்பும் மஞ்சளுமாக சித்திர வேலைப்பாடு செய்தது.
அரசகுமாரன் அகமத் நீண்ட பயணம் செய்தான்.
பலநாள் பிரயாணத்தில் பல பட்டணங்களில் தேடியாச்சு....


அதோ. அந்த நகரைப் பார்த்தால் புராதானமாகத் தோன்றுகிறது. அங்கே யாவது....
பல வியாபாரிகளை சந்தித்தான். ஓர் இளைஞன்...
ஆமாம். என் அப்பா அப்படி ஒரு டெலஸ்கோப் வைத்திருந்தார். ஒரு மந்திரவாதி கொடுத்ததா சொல்லுவார்.
அவரிடம் அழைத்துப் போ.
அவர் காலமாகி விட்டார். நீ இரண்டு நாட்கள் கழித்து என் வீட்டுக்கு வா. தேடி வைக்கிறேன்.
இரு தினங்கள் சென்று...
கண்டா முண்டா சாமான்களெல்லாம் இந்த அறையில் தான் போட்டு வைக்கிறது. ரெண்டு பேருமா தேடுவோம்.
நீண்ட நேர தேடலுக்குப் பிறகு.
ஆ! இதோ! டெலஸ்கோப்!



நீ அதிர்ஷ்டக் காரன்தான்! 'இதைத் தேடிக் கொண்டு ஒரு ராஜகுமாரன் வருவான்' என்று என் அப்பா சொன்னது நினைவிருக்கு. அதனால் தருகிறேன்.
அமகத் நன்றியுடன் பெற்றுக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தான்.
மந்திர கம்பளத்தை இனித் தேடணும். ஆனா அது அவ்வளவு கஷ்டமில்லே.
மந்திர டெலஸ்கோப்! தயவு செய்து மந்திரக் கம்பளம் இருக்குமிடத்தைக் காட்டு!
தொலை தூரத்திலுள்ள ஒரு குக்கிராமத்தை டெலஸ்கோப் இனம் காட்ட...
அங்குபோய்ச் சேர்ந்ததும்...
இந்தக் கிராமம் முழுவதுமே கம்பள நெசவாளிகள்தான். நீ யாரைத் தேடி வந்தாய்?





வீடு வீடாகச் சென்று...
பச்சைப் பின்னணியில் சிவப்பும் மஞ்சளுமாக சித்திர வேலைப்பாடு செய்திருக்கும்...
ஒரு வீட்டில்...
அப்படி ஒரு கம்பளம் இருக்கு. ஆனா அது ரொம்பப் பழசாச்சே!
பரவாயில்லை, அதைக் காட்டு!
நெசவாளி ஒரு பழங்காலப் பெட்டியைத் திறந்து...
என் தாத்தா காலத்திலேர்ந்து இருக்கு... ஒரே தூசி–தும்பு.
இந்தா பண முடிப்பு..
மந்திரக் கம்பளத்தில் அமர்ந்து உத்தரவிட்டதும் அது பறக்க ஆரம்பித்தது.
அட..! ஆ!
பறந்தபடியே டெலஸ்கோப் வழியே பார்க்க...
வில்லேந்திய வீரன் தெரிகிறான். மந்திரக் கம்பளமே அவனிடம் அழைத்துப் போ!


வீரன் முன்னால் வீதியில் இறங்கியது கம்பளம்.
உன் வில்லின் விலை என்ன?
ஆயிரம் பொற்காசுகள்!
இந்தா! இதில் அதிகமாகவே இருக்கு!
வீரன் பொற்காசுகளை எண்ணி முடிப்பதற்கு முன் அகமத் புறப்பட்டு விட்டான்.
மந்திரக் கம்பளமே! பெர்ஷிய தலைநகருக்கு அழைத்துப் போ.
அதோ அரண்மனை! இறங்கு!
மன்னரே! ஏன் இந்த சோகம்?
நூரினாவுக்கு உடம்பு சரியில்லை. நாளுக்குநாள் இளைத்து வருகிறாள்.


அரண்மனை வைத்தியர்களால் குணப்படுத்த முடியாத நோயா?
நோயில்லை. ஒரு சூன்யக்காரன் மந்திரம் போட்டிருக்கிறான். அதைத் தகர்க்க முடியவில்லை...
...எத்தனையோ மந்திரவாதிகள் முயன்று பார்த்தும் தோல்விதான்...
எனக்கு அனுமதி கொடுங்கள்.
ஏற்கெனவே ஒருமுறை நூரினாவைப் பார்க்க விரும்பி ஏமாற்றத்துடன் திரும்பியவன்தானே நீ?
ஆமாம், காலதாமதம் செய்யாதீர்கள்.
ஹும்... எனக்கு நம்பிக்கை இல்லை; ஆனால் நீ முயன்று பார்ப்பதில் எனக்கு ஆட்சேபணையும் கிடையாது.
என் சக்தியை சீக்கிரமே உணர்வீர்கள். இது மந்திர டெலஸ்கோப். ஆ! கண்டு பிடிச்சுட்டேன்!
என்ன? என்ன?


உங்கள் அரண்மனைக்குப் பக்கத்தில் இருக்கிற ஒரு கோபுரத் தில் நின்றபடி அந்த சூனியக்காரன் அந்தப்புர ஜன்னல் வழியாக நூரி னாவை பார்த்து மந்திரம் ஜபிக்கிறான்.
சூனியக்காரனுக்கு தன்னை யாரோ கவனிப்பது தெரிந்து விட, பார்வையை நகர்த்தினான். உடனே...
அரசே உங்கள் மகள் அசைகிறாள்; கண் விழிக்கிறாள்!
சூன்யக்காரனுக்கு அகமத் மீது கோபம் பொங்க கோபுரத்திலிருந்து வேகமாக இறங்கி...
அவனை என் பார்வையாலேயே சுட்டெரித்து விடுகிறேன்!
அகமத் டெலஸ்கோப்பை வைத்து விட்டு மந்திரவில்லில் அம்பு எய்தான்.
எந்த சூன்யக்காரனும் என்னை நெருங்க முடியாது.
அம்பு நேராகப் பாய்ந்து, பிறகு திசை திரும்பியது.
ஆ! என்ன ஆச்சர்யம்!


சூன்யக்காரனைத் தேடிச் சென்று தாக்கியது.
ஆ! ஐயோ!
சூன்யக்காரன் நெருப்புப் பந்தாக மாறி...
மறைந்தான்.
நீ அசாதாரணமான வீரன்! உன் போன்ற வீரனுக்காகத்தான் என் மகள் காத்திருக்கிறாள்.
நூரினா! உன்னை சூன்யக்காரன் பிடியிலிருந்து மீட்ட வீரன் இவன்தான்.
இவர் அன்புப் பிடியில் சிக்கி விட்டேன் இப்போது.
அகமத்–நூரினா திருமணம் தடபுடலாக நடந்தது.


மறுநாள்...
உன்னுடைய மந்திர டெலஸ்கோப், மந்திரவில், மந்திரக் கம்பளம் ஆகியவற்றின் உதவியுடன் உலகையே ஆளலாம்!
வேண்டாம் அரசே! அவற்றை தவறான வழிகளில் பயன்படுத்தக் கூடாது. பேராசை பெரு நஷ்டமாகும்.
மனிதர்களை, மனிதனாக இருந்து ஆள்வதுதான் நல்லது. மந்திர சக்திகளின் துணை கொண்டு அல்ல.
நீ வீரன் மட்டுமல்ல; புத்திசாலியும் கூட.
இந்தப் பெட்டியில் வைத்துப் பூட்டி விடுகிறேன். அத்யாவசியத் தேவை ஏற்பட்டால் எடுத்துக் கொள்ளலாம்.
சமர்த்து!
அகமத்தும் நூரினாவும் பெர்ஷியாவையும் பல்ஸாராவையும் ஒரு குடையின் கீழ் ஆண்டு, இன்பமாய் வாழ்ந்தார்கள்.

யானைக்கால்

● த. வாசுதேவன், சென்னை – 38.

? தினப்பத்திரிகைகளில் மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியைப் பலமுறை படித்திருக்கிறேன். மாரடைப்பு என்றால் என்ன? அது எப்படி, எங்கு ஏற்படுகிறது? விளக்கம் தேவை, டாக்டர்!

! மாரடைப்பு (HEART ATTACK) என்பது இதயத்தில் ஏற்படுகின்ற கோளாறு. நம் உடல் இயக்கத்திற்குத் தேவையான ரத்தத்தை இதயம் வழங்குவது உனக்குத் தெரிந்திருக்கும். அதே சமயம் நம் இதயத்தின் இயக்கத்திற்குத் தேவைப்படுகின்ற ரத்தத்தை இதயத்தமனி (CARONARY ARTERY) என்கிற மிகச் சிறிய ரத்தக்குழாய் வழங்குகிறது. இந்த இதயத் தமனி அடைத்துக் கொள்வதால் ஏற்படும் விளைவுதான் மாரடைப்பு.

தமனி அடைப்பு எப்படி ஏற்படுகிறது? ரத்தத்தில் கொலஸ்ட்ரால் என்ற கொழுப்புச் சத்து, மிக அதிக அளவில் இருப்பவர்களுக்கு, தமனிக் குழாயின் உள்சுவரில் கொலஸ்ட்ரால் படிந்து, தண்ணீர்க் குழாயில் பாசி படிந்து அடைத்துக் கொள்வதைப் போல அடைத்து விடுகிறது.

புகைபிடிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கு அதில் உள்ள நிகோட்டின் நச்சுவின் பாதிப்பால் தமனிக் குழாய் உள் அளவில் சுருங்கி அடைத்துக் கொள்கிறது.

சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு ரத்தம் உறையும் தன்மை அதிகப்படுவதால், தமனிக்குழாயில் சிறு சிறு துகள்களாக ரத்தம் உறைந்து போவதால் அடைப்பு ஏற்படுகிறது.

முதுமையின் காரணமாக ரத்தக் குழாய்கள் தடித்துப் போவதுண்டு. அப்போது தமனிக் குழாய் உள்பக்கமாகத் துடித்து உள் அளவில் சுருங்கி அடைத்துக் கொள்ளும்.

இப்படிப் பல காரணங்களால் தமனி அடைத்துக் கொள்ளும் போது இதயத்திற்குத் தேவையான ரத்தம் கிடைக்காமல் இதயத் திசுக்கள் இறந்துவிடும். இதுதான் மாரடைப்பு. மனிதனை மரண வாசலுக்கு அழைத்துச் செல்கின்ற ஆபத்தான அடைப்பு இது வாசுதேவன்!



● சு. அருணாதேவி, தக்கோலம்.

? தந்தையின் ரத்தமும் தாயின் ரத்தமும் ஒன்றாக இருந்தால் குழந்தையின் கை, கால், கண்கள் ஊனமாவதற்கு வாய்ப்பு உண்டா, டாக்டர்?

! இல்லை, அருணாதேவி! தந்தையின் ரத்தமும் தாயின் ரத்தமும் வெவ்வேறாக இருக்கும்போது, அதிலும் ஆர்.எச். (Rh) என்ற பிரிவு வித்தியாசப்படும்போது – குழந்தைக்கு சில பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புண்டு. அது கூட மிகக் குறைந்த சதவீதமே! இப்போதுள்ள நவீன தடுப்பு மருந்துகள் மூலம் இந்தக் குறைகளையும் முன்கூட்டியே தடுத்துவிட முடியும். ஆகவே, கவலைப்படாதே, சகோதரி!

● கோவி. காந்திமதி, புத்திராம்பட்டு.

? யானைக்கால் நோய் தொற்றுநோயா? அந்நோய் உள்ளவர்களோடு பழகலாமா?

! யானைக்கால் நோய் தொற்றுநோய்தான்! (INFECTIOUS DISEASE). ஆனால், தொட்டாலே ஒட்டிக் கொள்கின்ற வகையல்ல! (It is not a

கேட்கட்டுமா டாக்டர்?

தொற்றுவியாதியா?

communicable disease) என்றாலும் இந்நோய் உள்ளவர்களோடு மிக நெருங்கிப் பழகும்போதும், பல வருடங்கள் தொடர்ந்து பழகும் போதும் யானைக்கால் நோய் அடுத்தவர்களுக்கும் பரவ வாய்ப்புள்ளது. எனவே, இந்த நோய் உள்ளவர்களோடு மிக நெருக்கம் வேண்டாம்.

● ஜெ. ஜம்மு, செம்பனார்கோயில்.

? சர்க்கரை நோயால் கண்கள் பாதிக்கப்படும் என்று கூறுகிறார்களே, இது உண்மையா டாக்டர்?

! உண்மைதான், ஜம்மு. சர்க்கரை நோய் கட்டுப்பாடில்லாமல் இருந்தால் நிச்சயம் கண்கள் பாதிக்கப்படும். சீக்கிரம் 'கிட்டப்பார்வை' வந்து விடும். பிறகு 'கேட்டராக்ட்' (CATARACT) என்ற கண்புரை நோய் வந்து பார்வை குறைந்து விடும். 'கிளாக் கோமா' (GLAUCOMA) என்கிற கண்நீர் அழுத்தநோய் ஏற்பட்டு பார்வையை மறைக்கும். இவற்றையெல்லாம் விடக் கொடிய ஆபத்து கண்ணின் விழித்திரை (RETINA) யில் ஏற்படும். இதற்கு 'ரெட்டினோபதி' (RETINOPATHY) என்று பெயர். இதன் விளைவாக திடீரென்று ஒருவருக்கு ஒரே நாளில் பார்வை முழுவதும் பறிபோய் விடும். அப்படி நேரும்போது, மீண்டும் அவருக்குப் பார்வை கிடைக்கச் செய்வது படுசிரமம். இத்தனை சிரமங்கள் நமக்கெதற்கு? சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தி விட்டால் எந்தச் சிக்கலும் வராதே! சர்க்கரை நோயாளிகளிடம் இதைக் கூற வேண்டும், ஜம்மு!

● ப. நமீஸ் அஹமது, ஆடுதுறை.

? மாமிச உணவு விஞ்ஞானபூர்வமாக நல்ல உணவா, டாக்டர்?

! இல்லை. மாமிச உணவில் கொழுப்புச் சத்து மிக அதிகம். மிகுந்த கொழுப்பு உடல்நலனுக்கு ஆபத்து. ஆகையால் அஹமது, மாமிச உணவு நல்ல உணவல்ல!

● வி. கௌரி, சீர்காழி.

? மனிதனின் தோல் ஏன் வயதானவுடன் சுருங்குகிறது?

! வயதாக ஆக தோலின் சுருங்கி விரியும் தன்மை (ELASTICITY) குறைந்து போகிறது. சுருங்கிய தோல் பகுதி விரிவதற்கு இயல்வதில்லை. இதனால்தான் வயதானவர்களுக்கு தோல் சுருங்கி விடுகிறது.

● எஸ். வினோத்பாபு, கபிஸ்தலம்.

? எலும்பு முறிவு ஏற்படுபவர்களுக்கு நாட்டுக்கட்டு கட்டுவது சரியா?


! முறிந்து போன எலும்புகளை சரிசெய்து, நேராக்கி, மீண்டும் பழைய இடத்தில், பழைய நிலையில் வைத்து, முறிந்த எலும்புகள் வளர்ச்சி பெற்று இணையும் வரை அசையாமல் இருப்பதற்காக 'கட்டு' போடுகிறார்கள். அனுபவ வைத்தியர்கள் இதற்கு 'நாட்டுக் கட்டு' போடுகிறார்கள். மருத்துவம் படித்தவர்கள் 'மாவுக் கட்டு' போடுகிறார்கள். அனுபவ வைத்தியத்தில் தவறுகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். மற்றதில் இது குறைவு. இப்போது நீயே சொல்லு வினோத்பாபு, நாட்டுக்கட்டு கட்டுவது சரியா?



டாக்டர்
கு.கணேசன்

இசையை ரசிப்போம்!

• கே.ஸ்ரீராம்





டிசம்பர் என்றதும் என்ன நினைவுக்கு வரும்? முதலில் அரையாண்டுத் தேர்வு, பனி கொட்டும் மார்கழி மாதம், கிறிஸ்துமஸ் அதை அடுத்து வரும் விடுமுறை நாட்கள்- இவைதான் எல்லோருக்கும் நினைவுக்கு வரும். இசையில் ஆர்வமுள்ளவர்களைக் கேட்டுப் பாருங்கள். சென்னை நகரில் நடக்கும் இசை விழா கச்சேரிகளைப் பற்றிக் கூறுவார்கள்.

சென்னையில் டிசம்பர் இறுதியில் நடைபெறும் இசைவிழா உலகப் புகழ் பெற்றது. அயல்நாடுகளில் இருந்து இதை ரசிப்பதற்காகவே வருடாவருடம் வருவோர் உண்டு. இசையைப் பற்றிய ஆராய்ச்சிகள், மறுப்புகள் எல்லாம் காரசாரமாக நடைபெறும். புதிய வித்துவான்களின் கச்சேரியை ஊக்குவிப்பார்கள். இசைப் பிரியர்களுக்கு இந்த டிசம்பர் மாதம் ஒரு கொண்டாட்டமான மாதம்.

நமது இந்திய இசை புராதனப் பெருமை மிக்கது. இதைப் பயில குருகுல வாசம் போன்ற தனி மரபு உண்டு. இதைச் சிறிய வயதிலேயே தொடங்கி விட வேண்டும். இத் துறையில் பெரும் புகழோடு விளங்கிய முன்னோடிகளும், இன்று சாதனை படைத்து வருவோரும் மிகச் சிறிய வயதிலேயே தங்கள் இசைப் பயிற்சியைத் தொடங்கியவர்கள். இன்றுள்ள நிலையில் பள்ளிப் படிப்புக்கே நேரம் போதவில்லையே என்று கேட்பது தெரிகிறது. ஆர்வம் இருந்தால் கண்டிப்பாக வழி உண்டு. மற்ற எதிலுமே மனதைச் செலுத்தாமல் படிப்பு, பயிற்சி



என்று இந்த இரண்டையும் மட்டுமே இலட்சியமாகக் கொண்டு முயன்றால் வெற்றி உங்களுக்குத்தான். இன்று முன்னணியில் உள்ளவர்களைக் கேட்டுப் பாருங்கள். அவர்கள் வெற்றிக்குப் பின்னால் இப்படிப்பட்ட ஒரு லட்சிய உழைப்பு கண்டிப்பாக இருக்கும்.

இசைக் கருவிகளுக்கு மொழிப் பிரச்னை இல்லை. மொழி தெரியாத எவரும் புல்லாங்குழல், வீணை, மிருதங்க இசையை ரசிக்கலாம். எளிய வாத்தியங்களான ஹார்மோனியத்தையும், புல்புல்தாராவையும், மவுத் ஆர்கனையும் வைத்து எந்தப் பாட்டையும் வாசித்து எவரையும் கட்டிப் போடலாமே! இத்தாலிய நாட்டு வயலினைக் கர்நாடக இசைக் கருவியாக்கிக் கொண்ட பெருமைகூட நமக்குத்தான். இசைக் கருவிகளை வைத்து, மொழி அறியாத எவரையும் தாளம் போட வைக்க இயலும். இது மொழிக்கு அப்பாற்பட்டது. இதனாலேயே ஏதாவது ஒரு இசைக் கருவியையாவது கற்க வேண்டும் என்ற ஆர்வம் பொதுவாகப் பெருகி வருகிறது. ஆனால் ஒன்று, இதற்கும் கூட அடிப்படை இசை அறிவு தெரிந்திருக்க வேண்டும். இதை வாய்ப்பாட்டின் மூலமே பெறக்கூடும்.




இசையால் மன நோய்களைக் கூடக் குணப்படுத்த முடியும் என்கிறது மருத்துவ ஆராய்ச்சி. இசையில் லயித்து, தன்னை மறந்து ஒன்றிவிடும் நிலை யோக நிலைக்குச் சமமானது என்கிறார்கள். இத்தகைய சக்தி மிக்க இசையை நாம் அறிந்து வைத்திருப்பது அவசியம் இல்லையா?

விளையாட்டு உணர்வு உலகை ஒன்றுபடுத்தும் என்கிறார்கள். இசையும் அப்படித்தான். இதைச் சிறுவயதிலேயே தொடங்குவது மிகச் சிறந்தது.



அட்டையில் வயலின், மிருதங்கம் கற்பவர்கள் சிறுமி **வி.எஸ்.அருணா**, சிறுவன் **எச்.ஸ்ரீராம்**,

வண்ணப்படங்கள்: **ஸ்ரீஹரி**



✉ 'மானுக்கு கொம்பு அழகா ஆபத்தா?' புதிய அறவியல் செய்திகளைத் தந்தது. – சிதம்பரம் கி. சரத்பாபு, மாணிக்கையூர் து. ஆரோக்கியம், சின்னாளம்பட்டு வி, பொன்ராசன், திட்டமரக்குடி ஏ. சுலைமான், குன்னூர் காலனி து. பரசுராமன், எல்லபாளையம் வி. சுந்தரராமன், சாத்தூர் மு. ரமணி, பாளை வ. சித்திர மணி.

✉ என்ன சார் 'கேளுங்கள் சொல்லப்படும்' வரவில்லையே? நாங்கள் எல்லோரும் விரும்பிப் படிக்கும் பகுதி அது- பொன்மலை கி. தவமணி, வல்லக்கோட்டை தா. சீதாராம், திருப்பாதிரிப் புலியூர் எஸ். பூமிநாதன்- (அடுத்த இதழில் இருந்து தொடர்ந்து வெளிவரும்)

✉ 'திக்திக் கதைகள்' சூப்பர்தான்! இதைப் படிக்கவே நான் வாங்கும் கோகுலத்தை ஓசி கேட்க நண்பர்கள் வருகிறார்கள். நான்தான், காசு கொடுத்து வாங்கிப் படிக்கும்படி கூறி விட்டேன். ஒரு இரகசியம். எங்க வீட்டில் அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி எல்லோரும் இந்த திக்திக் கதையின் வாசகர்கள்! – ..ாண்டி மா. அடைக்கலம், திருமணியூர் வா. கருணாகரன், நேமத்தம்பட்டி கனகா. சீதாராம், திருவள்ளூர் வி. சந்திரமணி, மேட்டுப்பாளையம் கி.ராமமூர்த்தி, நாகை ச. சித்த மல்லிமாறன், மும்பை சு. சுபேதானந்தன்.

✉ ஆபத்தான வெடிகளை வெடிப்பது நன்றன்று. தீயது... இதை வலுவூட்டியது 'வேண்டாம் வேண்டாம் ஆட்டாம் பாம்!– கதை. காலம் அறிந்து வெளி யிடுவதற்கு நன்றி. – விருத்தாசலம் வி. பிரபாகர், ஆலப்பாக்கம் கி. சிவா, கபித் தலம் எஸ். சக்திவேல், கபிஸ்தலம் எஸ். வினோத் பாபு, கபிஸ்தலம் ஆர். ரவிவர்மன்,

✉ 'நண்பர் பெருமை' கட்டுரை குழந்தைக் கவிஞரின் அன்பர்களான எங்களை நெகிழ வைத்தது- திண்டிவனம் எஸ். சுப்பையா, மாயூரம் கி. வித்யா சங்கர், திருத்துறைப் பூண்டி நா. சீதாமணி, கொத்த மங்கலம் கி. மனோகரன், கபிஸ்தலம் எஸ். வினோத் பாபு.

நாய் மட்டும் வரக் கூடாதா?

✉ "கோயிலுக்குள் யானை வரலாம். பசு, மயில், சேவல் வரலாம். நாய் மட்டும் வரக் கூடாதா?"- என்ற கேள்வி சாட்டையடியாக இருந்தது ராணாபோட்ட மாவிளக்கு படக் கதையில். நன்றி! – மேலப்பாதி ரவீந்திரன், கருமத்தம்பட்டி அ. இராஜப்பன், பவித்ர மாணிக்கம், டி. முருகேசன், சின்ன சேலம் ஆர். பிரசன்ன குமார், கபிஸ்தலம் எஸ். வினோத்பாபு, கபித்தலம் எஸ். சக்திவேல், கபிஸ்தலம் ஜி. சுரேஷ்குமார், கபிஸ்தலம் ஆர். ரவிவர்மன், நெய்வேலி எஸ். ஸ்ரீராம், கபிஸ்தலம் நவநீத கண்ணன், வேதாரண்யம் எஸ். பி. ராஜ்குமார், திருவண்ணாமலை வானதி ராமு.

✉ நேருஜியின் வாழ்க்கையில் நாங்கள் இது வரை அறிந்தறியாத பகுதிகளைத் தந்துள்ளது மகிழ்ச்சியாக இருந்தது. திருமையம் வி. எதிராஜ், செங்கை வி. கார்த்திகேயன், நாகை வி. சுக்கூர், திருமங் கலம் நா. அடைக்கலம்.

✉ பிருந்தாவனக் கவியரங்கம் ஒரு பக்கம் தான் என்றாலும் இரண்டு பாடல்களும் இனித்தன. பாட வைத்தன- கோவை. தா. சத்தியப்பிரியன், தருமபுரி கி. வேட்டியப்பன், ராணிப்பேட்டை எம். இஸ்மாயில், மேட்டூர் எம். கனகதுர்கா, தரங்கை தா. ஜோசப், தம்மம்பட்டி எஸ். அற்புதராஜ்.

ராஜாஜி



ஏழைக் குடியானவன் ஒருவன் கண்ணபிரானை மிக பக்தியுடன் பூஜை செய்து வந்தான். கண்ணன் அவனுக்கு இரங்கி, "உனக்கு என்ன வேண்டும்? கேள், தருவேன். ஆனால் உனக்குத் தருவதை எல்லாருக்கும் தருவேன். எதையும் உனக்கு மட்டும் தருவதற்கு முடியாது" என்றான்.

"கோபாலா! எனக்கு வேண்டியதை நீ தந்தால் போதும்! அதை நீ எல்லாருக்கும் தந்தாயானால் எனக்கு என்ன ஆட்சேபணை? நான் அப்படித் துர்ப்புத்திக்காரன் அல்ல. எனக்கு யார் பேரிலும் அசூயை இல்லை" என்றான் குடியானவன்.

"நீ மிகவும் நல்லவன். எனக்குத் தெரியும். உனக்கு வேண்டியதைக் கேள் மனைவியுடன் யோசித்துக் கேள். பிறகு மாற்றிக் கொள்ள முடியாது" என்றான் கண்ணபிரான்.

உழைத்துப் பிழை!

"அப்படியே சரி! மனைவியைக் கேட்டுச் சொல்லுகிறேன். எனக்கு மூளை உன்னைப் பார்த்ததும் கலங்கிப் போயிற்று. நாளைக்குக் கேட்கலாமா?" என்றான் குடியானவன்.

"அப்படியே!" என்றான் கண்ணன்.

குடியானவன் அன்றிரவு தன் மனைவியுடன் யோசனை செய்தான். தன் புருஷன் பெற்ற வரத்தைக் கேட்டு மனைவிக்கு வெகு சந்தோஷம். இதைக் கேட்கலாமா, அதைக் கேட்கலாமா என்று இருவரும் வெகு நேரம் யோசித்துக் கடைசியாக முடிவு செய்து கொண்டார்கள்.

மறுநாள் குடியானவன் கண்ணனைத் தியானித்தான். ஆண்டவன் சிரித்துக் கொண்டே தரிசனம் தந்தான்.

"தம்பீ, என்ன கேட்கிறாய்?" என்றான் கண்ணபிரான்.

"கருணைக் கடலே, கோபித்துக் கொள்ள வேண்டாம். நான் ஏழை. எனக்கு அறிவு அதிகமில்லை. ஆன படியால், நீ சொல்லியபடி என் மனைவி யுடன் யோசித்தேன்" என்று ஆரம்பித் தான் குடியானவன்.

"என்ன வேண்டுமோ அதைக் கேட் டுப் பெறுவாய். அது ஊரில் எல்லோருக் கும் கிடைக்கும் என்பதை நினைவில் வைத்துக் கொள்" என்று மறுபடி எச்ச ரித்தான் கண்ணன்.

"ஆண்டவனே! என் பெட்டி நிறை யப் பணம் வெள்ளி ரூபாயாக இருக்க வேண்டும். எவ்வளவு எடுத்தாலும் குறை யக்கூடாது. வரமாக இதைக் கேட்கி றேன்" என்றான் குடியானவன்.

"அப்பனே, உனக்கு ஏன் பண ஆசை பிடித்து விட்டது?" என்று கேட்டுக் கோவிந்தன் அந்த வரத்தைத் தரத் தாம தித்தான்.


ஆனாலும், தான் கேட்ட வரத்தையே தரவேண்டும் என்று குடியானவன் வணக்கத்தோடு பிடிவாதம் செய் தான்.

"சரி, அப்படியே!" என்று சொல்லிக் கோவிந்தன் மறைந்து விட்டான்.

பணம் இருந்தால் எல்லாமே பெற லாம். அவ்வப்போது என்ன வேண் டுமோ அதைப் பெறலாம். ஆனபடியால் இந்த வரத்தைக் கேள் என்று, தன்னு டைய மனைவி சொன்னதைக் குடி யானவன் சரி என்று ஒப்புக் கொண்டு, இவ்வாறு கேட்டு வரம் பெற்றான்.

வரத்தின்படி பெட்டியில் ரூபாய் நிறைந்து விட்டது. உடனே கை நிறைய ரூபாயை எடுத்துக் கொண்டு, அடுத்த ஊரில் துணிக்கடைக்குச் சென்றான் குடியானவன். வீட்டுக்காரிக்கு நல்ல புடவை இரண்டு வாங்க வேண்டு மெனச் சென்றான்.

குடியானவன் சென்ற வழியில், ஜனங்கள் எல்லாரும் ஏதோ வெகு குதூ கலமாக இருப்பதைக் கண்டான். தனக்



குக் கோவிந்தன் தந்த வரம் எல்லாருக்குமே பயன்பட்டு விட்டது என்பதை அவன் முதலில் மறந்து விட்டான். பிறகு நினைவுக்கு வந்தது. ஊரில் எல்லாரும் சந்தோஷமாக இருப்பதைப் பார்த்து, அவனும் மகிழ்ந்தான். ஜவுளிக் கடைக்குள் நுழைந்தான்.

நல்ல புடவைகள் இரண்டு எடுத்துத் தரச் சொன்னான்.

''நீ என்ன கொடுப்பாய்?'' என்றார் கடைக்காரர்.

"என்ன விலை சொல்லுகிறீரோ அதைத் தருகிறேன்."



கார்த்திகை



கார்த்திகை தீபம் கண்டோமே
களிப்பு மிகவும் கொண்டோமே
நேர்த்தி யுள்ள முருகனிடம்
நெருங்கி நெருங்கி சென்றோமே.

வரிசை வரிசை விளக்குகள்
வண்ண வண்ண விளக்குகள்
எரியும் மெழுகு விளக்குகள்
எண்ணெய் ஊற்றும் விளக்குகள்

சொக்கப் பானை கட்டவே
சொக்கப் பனை கூப்பிட்டோம்
எக்க சக்க கூட்டத்தில்
எரிய விட்டோம் சொக்கப்பானை

மலையில் தீபம் ஒளிவிடும்
மகிமை யுள்ள கார்த்திகை
அலையும் மன இருளினை
அகற்று கின்ற கார்த்திகை

காவடி ஆட்டம் ஆடியே
கந்தன் கோவிலில் கூடியே
ஆவ லோடு பாடிடும்
அழகுத் திருநாள் கார்த்திகை

- வேட்டைநல்லூர் தமிழன்பன்

"விலையா? எங்களுக்குப் பணம் வேண்டாம். பணத்தை இப்போது மதிப்பார் இல்லை. அது எல்லோரிடமும் ஏராளமாக இருக்கிறது. எத்தனை மூட்டை அரிசி தருவீர்? சொல்லும்?" என்றார் கடைக்காரர்.

"ரூபாய்க்கு ஏன் மதிப்பில்லை? அதற்கு என்னவாயிற்று?" என்றான் குடியானவன். கடைக்காரர் வேடிக்கை செய்கிறார் என்று எண்ணி, இப்படிக் கேட்டான்.

"எல்லாரிடமும் வேண்டிய அளவுக்குக் குறையாமல் ரூபாய் இருக்கிறது. இப்போது யாருக்கும் பணம் வேண்டியதில்லை. இது உமக்குத் தெரியாதா?" என்றார் கடைக்காரர்.

குடியானவனுக்கு விஷயம் விளங்கவில்லை. அடுத்த கடைக்குப் போனான். அங்கேயும், "அரிசியோ, பருப்போ, கடலையோ ஏதாவது கொண்டு வா. பணம் வேண்டாம். அது நம்மிடம் ஏராளமாக இருக்கிறது" என்றார்கள்.

குடியானவன் துக்கமடைந்தான். பிறகு எந்தக் கடைக்கு எந்தப் பண்டம் வாங்கப் போனாலும் இதையே கூறக் கண்டான். ரூபாய்க்கு மதிப்பே இல்லாமல் போயிற்று. மனைவியும் புருஷனும் துயரத்தில் மூழ்கினார்கள்.

"கோவிந்தா, ஏமாற்றி விட்டாயே!" என்று அழுதான் குடியானவன்.

"உன்னை நீயே ஏமாற்றிக் கொண்டாய்" என்றான் கோவிந்தன்.

"நானும் குடும்பமும் பசியில் செத்துப் போவோமே?" என்று குடியானவன் அழுதான்.

"வரத்தைத் திருப்பிக் கொடுத்து விடுகிறாயா?" என்று கேட்டான் கண்ணன்.

"உன் வரத்தை நீயே எடுத்துக் கொண்டு போ. நான் முன்போல் உழைத்துப் பிழைப்பேன். அதற்கு நீ உதவினால் போதும்" என்றான் குடியானவன் தைரியமாக.

"அதுவே சரி. நீயும் உழைத்துப் பிழை. எல்லாரும் உழைத்துப் பிழைக்கட்டும்" என்றான் கோவிந்தன்.

உதயன் எங்கே?

வி.ர.வசந்தன்


ஐரோப்பாவின் பால் பண்ணை என்று புகழப்படும் பால்வளம் மிகுந்த டென்மார்க் நாட்டிலுள்ள ஒரு பெரும் தர்ம ஸ்தாபனம் புகலிடமற்ற அனாதைச் சிறுவர்களுக்காக உலகின் பல நாடுகளிலும் கருணை இல்லங்களை நடத்தி வந்தது. அதில் ஒன்றுதான் ஜோதிபுரத்தில் திருமதி மார்கரெட்டின் தலைமையில் இயங்கி வந்த கருணை இல்லம். முழு நிர்வாக உரிமை அந்த நிறுவனத்திடம் இருந்த போதிலும் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள கருணை இல்லங்களே தங்கள் வருவாயைத் தாங்களே தேடிக்கொண்டாக வேண்டும்.

அதற்காக அந்த இல்லங்களுக்கு பல ஏக்கர் நிலங்களையும், நூற்றுக்கணக்கான பால் மாடுகளையும், அந்த நிறுவனமே இலவசமாக வாங்கிக் கொடுத்திருந்தது. ஜோதிபுரத்திலுள்ள இல்லத்தின் நிர்வாகப் பொறுப்பை வகிக்கும் திருமதி மார்கரெட் அம்மையார் அந்த டென்மார்க் நாட்டைச் சேர்ந்தவர்தான். அவர் அந்தக் கருணை இல்லத்தின் ஒவ்வொரு சிறுவரையும் தன் சொந்தக் குழந்தையாகவே கருதி அன்பு செலுத்தி வந்தார்.

அவர்களது எதிர்காலத்தில் மிகுந்த அக்கறையுள்ளவராக, ஒரு தாய் போலவே அன்புடன் கண்டிப்பையும் காட்ட அவர் தவறியதில்லை. அந்த இல்லத்திலுள்ள சிறுவர்களுக்கு அவரிடம் பாசமும், அதே நேரம் அதிக பயமும் இருந்தது.

கருணையில்லத்திற்குச் சொந்தமான பல ஏக்கர் நிலங்களில் காய்கறிகளையும், பலவிதமான பழ மரங்களையும் பயிரிட்டிருந்தனர். அந்தத் தோட்டங்களில் பயிரிடுவது, உரமிடுவது, களையெடுப்பது, நீர் பாய்ச்சுவது போன்ற எல்லா வேலைகளையும் அங்குள்ள சிறுவர்களே செய்ய வேண்டும். பால் மாடுகளைப் பராமரிக்கும் வேலைகளையும்கூட அவர்களேதான் செய்ய வேண்டும். ஆனால், கடின வேலைகளைச் செய்வதற்கு மட்டும் அருகிலிருந்த கிராமத்திலுள்ள சிலர் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.

மேலும் அங்கு சில நடைமுறை விதிகள் மிகுந்த கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன.



காலை ஐந்து மணிக்கு எல்லோரும் எழுந்து காலைக் கடன்களை முடித்துவிட்டு, அவரவருக்கு அளிக்கப்பட்டவாறு தோட்டத்திலோ, மாட்டுப் பண்ணையிலோ வேலை செய்ய வேண்டும். ஏழு மணிக்குத் திரும்ப வந்து குளித்து சிற்றுண்டி அருந்தி விட்டு, பள்ளிப் பாடங்களை ஒன்பது வரை படிக்க வேண்டும்.

அதுபோல் மாலையில் ஐந்து மணியிலிருந்து, ஏழு மணிவரை தோட்ட வேலையும், பண்ணை வேலையும் சரியாக இருக்கும். ஏழரைக்கு நல்வழி வகுப்பொன்று நடைபெறும். அதில் உலகத்தில் வாழ்ந்து மறைந்த பல அறிஞர்கள், மேதைகள், இலட்சிய வீரர்கள் போன்றோரது வாழ்க்கையில் நடைபெற்ற பலவிதமான அனுபவங்களை திருமதி மார்கரெட் அம்மையார் கதை சொல்வது போல் சுவையாக அவர்களிடம் சொல்லுவார். இரவு உணவிற்குப் பின் எட்டு மணியிலிருந்து பத்து மணி வரை பாடங்களைப் படிக்க வேண்டும். ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள் முன் அனுமதி பெற்று, தகுந்த காரணத்தோடு அவர்கள் வெளியே சென்று வரலாம். இந்த விதிமுறைகளை மீறி நடப்பவர்களுக்கு அங்கு கருணை காட்டப் படுவதில்லை.

அன்று மாலை கருணையில்லத்திலுள்ள சிறுவர்கள் காய்கறித் தோட்டத்தில் பலவித வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். களையெடுப்பதிலும், உரமிடுவதிலும் ஒரு பகுதியினர் மூழ்கியிருக்க, மற்றொரு பிரிவினர் புதிய பாத்திகளுக்காக, நிலத்தைப் பண்படுத்துவதில் ஈடுபட்டிருந்தனர். ஆங்காங்கே அமைந்திருந்த பம்பு செட்டுகள் நீரை இறைத்து வாய்க்கால்களில் பாய்ச்சிக் கொண்டிருந்தன.



''என்னைத் தின்னே... நீ குளோஸ்! ஒரு விஷப் பூச்சியை முழுங்கி இருக்கேன்.

—நெற்குப்பை கி.மனோகரன்

பச்சைப் பசேலென்று தக்காளிச் செடிகள் ஒருபுறம் பாத்தி பாத்தியாக வளர்ந்து நின்றன. அவற்றில் பெரும் இரத்தத் துளிகளைப் போல், தக்காளிப் பழங்கள் காய்த்துக் குலுங்கின. கத்தரிப் பாத்திகளும், வெண்டைப் பாத்திகளும் வரிசை வரிசையாக நீண்டு கிடந்தன. அவற்றில் விளைந்திருந்த காய்களை சில சிறுவர்கள் பறித்துக் கூடை கூடையாக நிரப்பிக் கொண்டிருந்தனர். பந்து பந்தாகக் காய்த்திருந்த காலி ப்ளவர்களையும் முட்டை கோஸுகளையும் மற்றொரு பிரிவினர் சேகரித்துக் கொண்டிருந்தனர்.

கருணை இல்லத்தின் தேவைக்குப் போக மீதியாகும் காய்கறிகள் மற்றும் பழ வகைகளை காலையில் வியாபாரிகள் லாரிகளில் வந்து ஏற்றிச் சென்று விடுவார்கள். அதுபோலவே பெரிய இரும்புக் கேன்களில் கறந்து வைத்திருக்கும் பாலையும் தினமும் காலையிலும், மாலையிலும் லாரிகள் வந்து ஏற்றிச் சென்றுவிடும். இவற்றில் கிடைக்கும் வருமானமே கருணை இல்லத்தின் பெரும் பகுதிச் செலவை ஈடுகட்டக் கூடியதாய் இருந்தது.

கடற்கழிகளிலும், தென்னந்தோப்புகளிலும் சுதந்திரமாய் ஓடி விளையாடித் திரிந்த உதயனுக்கு முதலில் இந்த வேலைகளும், கட்டுப்பாடுகளும் மிகவும் சிரமமாகத்தான் இருந்தது. ஆனால் சில நாட்களுக்குள்ளாகவே அவன் மனம் அதில் ஈடுபாடு கொள்ள ஆரம்பித்தது. படிப்பின் பேரில் அவனுக்கிருந்த ஆர்வமும், திருமதி மார்கரெட் அம்மையார் காட்டிய அன்பும், இந்தப் புதிய வாழ்க்கையோடு அவனை வெகு விரைவிலேயே ஒன்றிப்போக வைத்தன. உண்மையிலேயே அங்கு வேலை செய்வதில் ஒரு தனி ஆசையை அவன் வளர்த்துக் கொண்டான்.

அன்று தோட்டவேலை முடிவடைந்ததும், வாய்க்காலில் ஓடிக் கொண்டிருந்த தண்ணீரில் கைகளையும் கால்களையும் கழுவிக் கொண்டு விடுதியை நோக்கி நடக்க ஆரம்பித்தான் உதயன். மாலையில் நடைபெறும் நல்வழி வகுப்புக்குச் செல்ல வேண்டியிருந்ததால் விரைவாக நடந்தான்.



கொய்யா, ஆரஞ்சு மா போன்ற பழ மரங்களில் இருந்து பறித்த பழங்களையும், காய்கறிகளையும் கூடைகளில் சுமந்து கொண்டு விடுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர் சில சிறுவர்கள்.

அவன் வாழைத் தோட்டத்தைக் கடந்து நடந்தபோது யாரோ பின்னாலிருந்து, "ஏய் உதயா" என்று அதிகார தோரணையில் அழைப்பது கேட்டது.

அவன் திரும்பிப் பார்க்க, ஒரு மரத்தில் சாய்ந்தவாறு காளிமுத்து நின்று கொண்டிருந்தான். இன்றும் அவன் கையில் பீடி புகைந்து கொண்டிருந்தது! நெற்றியில் விழுந்து கிடந்த தலை முடியை அலட்சியமாகப் பின்னால் ஒதுக்கித் தள்ளிவிட்டு சைகை காட்டி, "இப்படி வா" என்று அவன் உதயனை அழைத்தான்.

மனோகரன் அவனைப் பற்றிச சொல்லியிருந்தவற்றினாலும், நேரில் அவன் போக்கைக் கண்டதாலும் அவன் பேரில் மிகுந்த அதிருப்தி கொண்டிருந்த உதயன், நின்று என்ன என்பது போல் அவனைப் பார்த்தான்.

"என்னப்பா, அப்படிப் பார்க்கறே! கொஞ்சம் நேரம் பேசிட்டுப் போகலாம் வா" என்று புன்னகைத்தான் காளிமுத்து.

"இல்ல. நல்வழி வகுப்புக்கு நேரமாச்சு, நான் போகணும்" என்ற உதயன் திரும்பிச் செல்ல முற்பட்டான்.

காளிமுத்து, தன் குரலைக் கடுமையாக்கிக் கொண்டு, "அட, வான்னா போயிட்டே இருக்கியே! ஒருநாள் நல்வழி வகுப்புக்குப் போகலேன்னா ஒண்ணும் கெட்டுப் போயிடாது... அந்த மனோகரன் பயல் ஏதாச்சும் என்னைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் சொல்லி இருப்பான் போல இருக்கு.. அதுதான் என்னைப் பார்த்தா இப்படிப் பயப்படறே?" என்று சிரித்தான்.

அவனது கேலிச் சிரிப்பு உதயனுக்கு எரிச்சலை மூட்டியது. அவன் திரும்பி வந்து, "நான் ஒன்றும் பயப்படலே,



என்ன பேசணும்?" என்று கேட்டான்.

"ரொம்பவும் கஷ்டப்பட்டு, தோட்டத்துல வேலை செய்துட்டு வர்றே... களைச்சுப் போயிட்டே. கொஞ்சம் உட்கார்ந்து இளைப்பாறிட்டுப் போயேன்?"

அவன் பேசிய தோரணையால் மேலும் கோபமடைந்த உதயன், "அது இருக்கட்டும். எல்லோரும் தோட்டத்துல வேலை செய்யறபோது, நீ மட்டும் இங்க சும்மா நின்னுக்கிட்டிருக்கியே....? இது உனக்கே நல்லாயிருக்கா?" என்று அவன் முகத்தைப் பார்த்தான்.

அதைக் கேட்டதும் 'கடகட'வென்று சிரித்த காளிமுத்து. "அட, பைத்தியக்காரா, உன்னை மாதிரி என்னையும் ஏமாந்தவன்னு நினைச்சுட்டியா?.... யாருமில்லாத அனாதைகளை இப்படி மாடா உழைக்க வச்சு, அந்த வெள்ளைக்காரி பணத்து மேல மிதக்கறா.... அவளோட பசப்பு வார்த்தையில ஏமாந்து போயி நீங்களும் தலைகால் புரியாம ஆடறீங்க!" என்றான் படு அலட்சியமாக.

உதயன் முகத்தைச் சுளித்துக் கொண்டு, "ஆதரிக்க யாருமில்லாத நம்மை, அம்மா எவ்வளவு அன்பு காட்டி வளர்க்கறாங்க...! அவங்களப் போய் நீ இப்படி மரியாதை இல்லாம பேசக்கூடாது" என்றான் கண்டிக்கும் குரலில்.

தன் கையிலிருந்த பீடியை வீசி விட்டுத் தொண்டையைச் செருமிக் கொண்டே காளிமுத்து, "ஓகோ, நீ அப்படி நெனச்சிட்டு இருக்கியா...? உண்மையிலேயே நம்ம மேல அந்தம்மாவுக்கு அன்பிருந்தா, எதுக்கு இப்படித் தோட்டத்துல நம்மை வேலை வாங்கறா...? இதோப்பாரு. ஒவ்வொரு நாளும் இந்த தோட்டத்துல இருந்து எத்தனை லாரி காய்கறியும், பழங்களும், பாலும் விற்பனை ஆகுது தெரியுமா?... இதெல்லாம் யாரோட உழைப்பு...? நம்மப் போல பிஞ்சுப் பசங்களோட உழைப்பு! ஆனா நமக்கு புழுப் பிடிச்ச அரிசிச் சோறும் கோதுமை ரொட்டியுந்தான் ஆகாரமாகத் தறாங்க!" என்று அவன் சொன்னபோது வெறுப்பின் உச்சம் அவன் முகத்தில் பரவியிருந்தது.

"இருக்கட்டும்... இத்தனை பேரைப் படிக்க வைக்க துணிமணி வாங்க, சாப்பாடு தர எவ்வளவு செலவாகும்...? அதுக்கெல்லாம் இதுதானே பயன்படுது? அதை யோசிச்சுப் பாரு."

காளிமுத்து விடாமல், "நீ நெனைக்கறது தப்பு. அந்தம்மாவுக்கு வெளிநாட்டுல இருந்து எவ்வளவு பணம் வருது தெரியுமா...? அதுல பாதிகூட நமக்கு இங்கே செலவு செய்யறதில்ல... ஆனா இப்படி விரட்டி விரட்டி நம்ம வேலை வாங்கி, பணத்துக்கு மேல பணமா குவிக்கிறாங்க. சொந்த ஆதாயத்துக்கு அந்தம்மா செய்யற காரியத்தையெல்லாம் அன்புன்னு நெனச்சு ஏமாந்து போறீங்க" என்றான் சலிப்புடன்.

அவனுக்கு என்ன பதில் சொல்வது என்று புரியாமல் விழித்த உதயன், "அம்மாவ ரொம்ப நல்லவங்கன்னு சொல்றாங்களே?!" என்று குழப்பத்துடன் கேட்டபோது அவன் குரல் வலுவற்றுப்



"எதுக்கு உன் மகன் திடுதிடுப்புன்னு வேகமாக ஓடறான்..."

"பெட்ரோல் மூலிகைச் செடியை தின்னுருப்பானா இருக்கும்!"


-நெற்குப்பை கி.மனோகரன்

"என்டா சட்டையை திருப்பிப் போட்டுக்கிட்டிருக்கே?"

"அம்மாதான் 'இந்த சட்டை அழுக்கா போகலை, இதையே இன்னைக்கும் திருப்பிப் போட்டுக்கோ-'ன்னு சொன்னாங்க!"

-சீர்காழி வி.ரேவதி





''என்னங்க உங்க பையன் தலைகீழா நின்னுகிட்டு ஏதோ வாய்ப்பாடு சொல்லிக் கிட்டிருக்கான்?''

''அவனோட டீச்சர் ரெண்டுலேந்து பத்து வாய்ப்பாட்டைத் தலைகீழா மனப் பாடம் பண்ணிக்கிட்டு வரணும்னு சொல்லியிருக்காங்களாம்''

'வானவில்' மூர்த்தி

போயிருந்தது.

காளிமுத்து சற்று நேரம் ஒன்றும் பேசாமல் நின்றான். பின், "அதோ பாரு" என்று சற்றுத் தொலைவில் பூந்தோட்டத் தால் சூழப்பட்ட அழகிய வீடு ஒன்றைச் சுட்டிக் காட்டினான்.

அது திருமதி மார்கரெட் அம்மையார் குடியிருக்கும் வீடு என்பதைப் புரிந்து கொண்ட உதயன், எதற்கு அதைக் காட்டு கிறான் என்பது தெரியாமல் அவனைப் பார்த்தான்.

காளிமுத்துவின் கண்கள் சிவந்தன. கோபம் கொப்பளிக்க ஆவேசக் குரலில் அவன் பேசலானான். "அந்த வீட்டுக் குள்ள போய்ப் பார்த்தேன்னா அசந்து போயிடுவே!.. வெள்ளக்காரம்மா, சுடு தண்ணிக்கு ஒரு குழாய், பச்சத் தண்ணிக்கு ஒரு குழாய், ரூமுக்கு ரெண்டு விசிறின்னு அவளுக்கு சொகுசு வாழ்க்கை.. அவ வீட்ல இருக்கிற நாய்கூட பாலும் கேக்குந்தான் சாப்பிடும்... நாம மட்டும் இங்க பண்ணை வேலை செய்யணும். ஏன்? நமக்கு வேற கதியில்லை... அவ சொன்னதை செய்தாத் தான் அரை வயிற்றுக் கஞ்சி" என்ற அவன் குரலில் விரக்தி மேலோங்கி நின்றது.

அவனது அவமரியாதையான வார்த் தைகள் உதயனின் மனதை சங்கடப்படுத் தினாலும், அவன் சொல்வதிலும் உண்மை இருக்குமோ என்று நினைத்துக் குழம்பி நின்றான்.

காளிமுத்து அவன்தோளில் அன்புடன் கையை வைத்தான். "உதயா, ஆத்திரத்துல என்னென்னவோ பேசிட்டேன்... இதுக் காக பயந்துராதே... இங்க அனாவசி யமான கெடுபிடியெல்லாம் உண்டு.... அதுக்கெல்லாம் டிமிக்கி கொடுக்கத் தெரிஞ்சுக்கணும்... யாரை எப்படி சமாளிக்கணும்னு உனக்கு சொல்லித் தரேன்; கவலையை விடு... புத்திசாலித் தனமா நடந்தாத்தான் இங்கே பொழைக்க முடியும்.... இல்லேன்னா, அடிமையாகத் தான் இருக்கணும்" என்றான் ஆதரவுடன்.

காளிமுத்துவின் பேச்சில் கட்டுண்டு நின்றான் உதயன். அவன் முகத்தை வாஞ்சையுடன் பார்த்த காளிமுத்து, "இன்னொரு முக்கியமான விஷயத்தைச் சொல்றேன் கேட்டுக்கோ... நம்ம மனோ கரன் பயல்கிட்ட ரொம்ப ஜாக்கிரதையாக இரு... ஏன் தெரியுமா? அம்மாவுக்கு ஒற்று வேலை பார்க்கறதே இங்க அவன்தான்" என்றான் மெதுவாக.

உதயனுக்குத் தலை சுற்றுவது போலிருந் தது. நல்வழி வகுப்புக்குப் போகாதது நினைவுக்கு வர, அவன் பரபரப்புடன் எழுந்த வேளையில், இல்லப் பணியாள ரான அருமைநாயகம் அவர்களை நோக்கி வேகமாக வருவது தெரிந்தது. அருகில் வந்தவர், "தம்பி காளிமுத்து, அம்மா உன்னை உடனே கூட்டிட்டு வரச் சொன்னாங்க. உதயன், உன்னையுந்தான்" என்றார்.

உதயனுக்கு மனதுக்குள் திகில் பிடித்துக் கொண்டது. என்ன ஆகுமோ என்று நினைத்தவனாக உள்ளூர நடுங் கினான். வெளிறிப்போன அவன் முகத்தைப் பார்த்த காளிமுத்து அவன் கையைப் பற்றிக் கொண்டு காதில் மெது வாக, "ஒண்ணும் பயப்படாதே. நான் எப்படிச் சமாளிக்கிறேன் பாரு" என்று கூறிவிட்டுத் தைரியமாகப் பணியாளரைத் தொடர்ந்தான்.

உதயனும் படபடக்கும் நெஞ்சோடு அவர்களைப் பின் தொடர்ந்து நடக்க லானான்.


(தொடரும்)















பழமொழி என்ன? போட்டி

இங்கே உள்ள 14 படங்களையும் கவனித்துப் பாருங்கள். அதோடு, இவைகளுக்குள் உள்ள குறிப்பையும் கவனியுங்கள். இவைகளுக்குள் ஒரு பழமொழி; உங்களுக்கு மிகவும் தெரிந்த ஒரு பழமொழி; மறைந்துள்ளது. இதைக் கண்டுபிடித்து எழுதி, முகவரிக் கூப்பனையும் ஒட்டி, 31.12.96–க்குள் அனுப்பி வையுங்கள். முகவரிக் கூப்பன் இல்லாமல் வருபவை பரிசீலனைக்கு ஏற்கப்பட மாட்டா. தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு கோகுலம் பொறுப்பாகாது. அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தரவேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையிலேயே பரிசு முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.


"பிள்ளையாரப்பா! என்னை பாஸ் போட வச்சா அடுத்த வருஷம் உன்னை மெட்ராஸ் வந்து கடல்ல கரைக்கிறேம்ப்பா!"
– சீர்காழி. வி. ரேவதி
"ஒரு வாரத்தில கடனைத் திருப்பிக் கொடுக்கலைன்னா 'தோலை' உரிச்சிடுவேன் ஆமா."
– சீர்காழி. ஜே. பலராமன்
"இன்னைக்கு வீட்டுப் பாடம் செய்து வராதவர்கள் எல்லாம் மரத்து மேல ஏறி நில் லுங்க!"
– கு. அருணாசலம்
"இன்னும் உன்னை அடிக்கவே இல்லை. அதற்குள் ஏன் அழுகிறாய்?"
"எல்லாம் ஒரு தற்காப்புக்காகத்தான் சார்!"
– ஆர். பிரகாசம்.
"எங்க கணக்கு வாத்தியார் ரொம்ப நகைச்சுவையோடு கணக்கு சொல்லித் தருவார்."
"2 இட்லி 1 தோசைக்கு 1 லிட்டர் தானியம் அரைக்கணும்னா 6 இட்லி 3 தோசைக்கு எவ்வளவு மாவாட்டணும்னு கேட்பாரே!"
– சீர்காழி. வி. ரேவதி

கிறிஸ்மஸ் பரிசு



அம்மாவிடம் தையற்கூலிக்கான பணத்தைப் பெற்றுக்கொண்டு செல்வம் கடைவீதிக்குச் சென்றான். கிறிஸ்மசுக்கு இன்னும் நான்கு நாட்கள்தான் இருந்தன. கடைவீதியே திருவிழாக் கோலம் பூண்டது போன்று கும்பல். வண்ண விளக்குகளின் ஒளியில் கடைகள் குளித்துக் கொண்டிருந்தன.

“மாடர்ன் டைலர்ஸ்” கடைக்குள் நுழைந்தான் செல்வம். அங்கும் கும்பல்தான். இயங்கிக் கொண்டிருக்கும் தையல் மிஷின்களின் ஒலி வேறு.

“நீங்க சொன்ன நேரத்துக்கு வந்திருக்கேன். இந்தாங்க ருபாய் நோட்டை நீட்டினான் செல்வம்.

தையற்காரர் சட்டையைக் கொடுத்ததும் ஆசையாய்த் தடவிப் பார்த்தான். அவனுக்குப் பிடித்தமான பழப்புக் கலரில் கொத்துக் கொத்தாக மஞ்சள் நிறப் பூக்களோடு விளக்கு ஒளியில் பளிச்சிட்டது அவன் கிறிஸ்மஸ் சட்டை. ரொம்ப நாட்களாக அவனுக்கு இதே மாதிரி சட்டை வாங்க வேண்டும் என்று கொள்ளை ஆசை! நினைத்ததை உடனே வாங்கிக் கொடுக்க அவனுக்கு அப்பாவும் இல்லை; அதற்கேற்ற வசதியும் இல்லை. அம்மாதான் நாலைந்து வீடுகளில் வேலை செய்து அவனை வளர்த்து வருகிறாள்.

இந்தச் சட்டையை வாங்குவதற்குத் தான் எத்தனை இடைஞ்சல்கள்!

முதலில் சேர்த்து வைத்திருந்த பணம் அவனுக்கு உடல் நலம் சரியில்லாமல் போனதால் மருத்துவத்திற்குச் செலவழிந்து விட்டது. இன்னொரு முறை வாங்க முயன்றபோது - எதிர்பாராத விருந்தினர்களின் வருகையால் குடும்பச் செலவுக்குச் சரியாகி விட்டது. இந்தத் தடவை தான் தேனீக்கள் தேன் சேர்ப்பது போல சில்லரைக் காசுகளை உண்டியலில் போட்டு கொஞ்சம் கொஞ்சமாகச் சேமித்தாள். இந்த கிறிஸ்மஸ்க்கு வாங்கியே தீர வேண்டும் என்ற மகனின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வேலை பார்க்கும் வீட்டில் முன்பணம் வாங்கி எப்படியோ.... அம்மா வாங்கித் தந்துவிட்டாள்! அதன் பிறகு தையற்கூலி. நல்லகாலம்! தையற்கடைக்காரர் ஒரு வாரம் கழித்துச் சட்டையை வாங்கிக் கொண்டு போகச் சொன்னதால் அம்மா அதற்குள் பணத்தைப் புரட்டிக் கொடுத்து விட்டாள்.

இதோ அவன் விரும்பிய சட்டை கிடைத்து விட்டது. கிறிஸ்மஸை மகிழ்ச்சியாகக் கொண்டாடலாம்.

தையற்காரர் கொடுத்த பிளாஸ்டிக் பையில் சட்டையைப் பத்திரப் படுத்திக் கொண்டு வெளியே வரும்போது....

“செல்வா!” என்று தன்னை அழைக்கும் குரல் கேட்கவே திரும்பிப் பார்த்தான்.

அழைத்தது அவர் எதிர் வீட்டுக்காரர் ஏகாம்பரம்தான்.

“ரிப்பர் செய்ய சைக்கிளைக் கொடுத்திருந்தேன். இப்ப நல்லா செஞ்சுட்டாங்க. இந்த சைக்கிளைக் கொண்டு போய் பத்திரமா என் வீட்டில் கொடுத்துடு. எனக்கு உடனடியா சேலம் வரை போய்விட்டு வர வேண்டிய வேலை இருக்கு” என்று சைக்கிளை அவனிடம் கொடுத்தார் அவர். மகிழ்ச்சியோடு சைக்கிளில் ஏறி அமர்ந்தான் செல்வம். மெதுவாக கடைவீதியை வேடிக்கைப் பார்த்துக் கொண்டே அடுத்த தெருவுக்கு வந்தான். வழியில் தென்பட்ட நண்பன் மணிகுமாரிடம் சிறிது நேரம் பேசிவிட்டு வீடு இருக்கும் பகுதியை நோக்கி சைக்கிளைத் திருப்பும்பொழுது- “சிதம்பரம் பூங்கா” கண்ணில் பட்டது.

த.ஜானகி

பூங்காவிற்குள் அவன் நுழையும்போது எதிரே சிலர் பூங்காவை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர். சைக்கிள் விடும் ஆசையில் சிறிது தூரம் பூங்காவிற்குள் சென்றான். பக்கத்தில்தான் சறுக்கு விளையாட்டு விளையாடும் பகுதி. சைக்கிளை நிறுத்திவிட்டு படிக்கட்டுகளில் ஏறினான். இரண்டு முறை சர் சர் என்று சறுக்கி விழுந்தான். அதற்கு மேல் விளையாடத் தோன்றவில்லை.

எப்போதும் மாலை நேரத்தில் கலகல வென்றிருக்கும் அந்தப் பூங்கா அன்று எட்டு மணிக்கே அமைதியாகவும் வெறிச் சென்றும் இருந்தது அவனுக்கு ஒரு வித அச்சத்தைக் கொடுத்தது. நாளைக்கு சேர்த்து விளையாடிக் கொள்ளலாம்' என்று எண்ணியபடி நந்தியாவட்டைச் செடியை கடக்கும்போது யாரோ இலேசாக முனகுவதுபோல் காதில் விழுந்தது.

யாராக இருக்கும்?

ஒலி வந்த திக்கை நோக்கி விரைந்தான். செல்வம். அங்கே.

உட்காரும் சிமெண்ட் பலகைக்கும்



செம்பருத்திச் செடிகளுக்கும் இடையில் பேண்ட் அணிந்த, பெரியவர் ஒருவர் விழுந்து கிடந்தார். மங்கிய விளக்கொளி யில் அவர் நெற்றியிலிருந்து இரத்தம கசிந்து கொண்டிருப்பது தெரிந்தது.


திக்கென்றது செல்வத்திற்கு. சுற்றும் முற்றும் பார்த்தான். கண்ணுக்கு எட்டிய வரையில் மனித வாடையே தெரிய வில்லை. யாரோ ஓர் ஆள் அவசர அவசர மாக பைக்கில் செல்வது தெரிந்தது. சத்தம் போட்டு அவரைக் கூப்பிட முயல்வதற் குள் பைக் வாயிலைக் கடந்து விட்டது.


என்ன செய்வது என்று தெரியாத அச்சத்திலும் தனிமையிலும் ஒரு வினாடி திகைத்தான். அவரை அப்படியே விட்டுச் செல்லவும் மனம் இடம் தர வில்லை. "எட்டாம் வகுப்பு" படிக்கும் நான் ஒரு சாரணச் சிறுவன் ஆயிற்றே?" என்று தனக்குள் கூறிக் கொண்டான்.

பிறகு மளமளவென்று அவர் அருகில் சென்றான்.

குனிந்து. "ஸார். ஸார்....! என்று பல மாகக் கூப்பிட்டான். அடிபட்டிருந்தவர் மெள்ளக் கண்களைத் திறந்தார்.

"நான் ஏற்கனவே ரத்தக் கொதிப்பு வி...யாதி..க்கா...ரன். இப்..ப... அடிபட்டு... என்...னால... தலை...யை... யே... தூக்க முடி யலை. ஏதாவது துணியை - நெத்தியை சுத்தி கட்டிவிட்டு.. என் மகனோட.... போன் நம்பர் ... 112341. உடனே...





''கோழி, ஆடு இவைகளுக்கு பிடிக்காத கிழமை எது தெரியுமா?''

'Fri' Day

எஸ்.நாகராஜன்

அ..வ..னை... வர்றச் சொ..ல்...."

அதற்கு மேல் அவரால் பேச முடிய வில்லை. மயங்கி விட்டார்.

என்ன செய்வது? இரத்தத்தை எப்படி நிறுத்துவது? சுற்றும் முற்றும் பார்த்தான். துணியோ துண்டமோ - ஒன்றும் கிடைக்க வில்லை. புதுச்சட்டைதான் கையை நெருடியது!

நான் போட்டுக் கொண்டிருப்பது ஸ்கூல் யூனிஃபாரம் சட்டை. இதைக் கழற்றிக் கட்டினால் மறுபடியும் யூனிஃப் பாரம் போடாது போனால்... ஃபைன் கட்டணும். அதனால... அதனால... என் னோட புதுச்சட்டை போனால் போகட் டும். இவரைக் காப்பாற்றுவது தான் முக்கியம்.... அம்மா கேட்டால்... ஏதாவது சமாளித்துக் கொள்ளலாம்.

தனக்குள் எண்ணியபடி ப்ளாஸ்டிக் பையிலிருந்து புதிய சட்டையை எடுத்தான் செல்வம். அவருடைய சிறிய கைக்குட் டையை பாக்கெட்டிலிருந்து எடுத்தான். அதன் உதவியினால் வழிந்துக் கொண் டிருக்கும் இரத்தத்தைத் துடைத்தான். தலையை லேசாகத் தூக்கி புதுச் சட்டை யினால் நெற்றியைச் சுற்றிக் கட்டினான். இரத்தம் வருவது கொஞ்சம் குறைந்தது.

பாக்கெட்டில் இருந்த இரண்டு ரூபாயும் அருகில் இருக்கும் எஸ்.டி.டி.பூத் தும் ஞாபகத்திற்கு வர, பெரியவர் சொன்ன நம்பருக்கு போன் செய்ய சைக் கிளில் ஏறி அமர்ந்தான்.

மறுநாள் மாலை. பள்ளி விட்டு வந்த செல்வம் வீட்டுப் பாடம் எழுதிக் கொண் டிருந்தான். அம்மா அரிசியில் கல் பொறுக்கிக் கொண்டிருந்தாள்.

அப்போது

அவன் குடிசை வீட்டு முன்பு ஒரு கார் வந்து நின்றது. செல்வத்திற்குப் புரிந்துவிட் டது. வந்திருப்பது முதல் நாள் இரவு தான் போன் செய்த சில நிமிடங்களிலேயே தந்தையை அழைத்துச் செல்ல வந்த அவருடைய மகன் மகுடபதி என்று.

தன் வீட்டில் அவரைச் சரியாக உபசரிக்கக்கூட முடியாதே என்று எண் ணியவனாய் கூச்சத்தோடு வர வேற்றான். கயிற்றுக்கட்டிலைப் போட்டு அமரச் செய்தான்.

"பெரியவருக்கு இப்ப உடம்பு எப்படி இருக்கிறது?'' என்று உண்மையான அக்கறையோடு வினவினான் செல்வம்.

"ஓரளவு நன்றாகவே இருக்கிறார். நாளைக்கு ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டிற் குக் கூட்டிக் கொண்டு போகலாம் என்று டாக்டர் சொல்லி விட்டார்'' என்றார் மகுடபதி.

"ரொம்ப சந்தோஷங்க"

செல்வம் தன் அம்மாவிடம் நடந்த விஷயங்கள் எதையும் தெரிவிக்கவில்லை. ஆனால் அவரோ, புரியாமல் நின்ற அம்மாவிடம் கூறலானார்.

"எங்கப்பா எப்போதும் - ஊட்டியில் தான் இருப்பார். வழக்கம்போல சிதம் பரம் பூங்கா பக்கம் போயிருக்கிறார். பூங் காவைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்ப நினைக்குமே போது தலையை லேசா சுற்றுவது மாதிரி இருந்ததாம். அப்படியே சிமெண்ட் பெஞ்சியிலே உட்கார்ந்து விட்டார். இருட்டு வேறு, ஜன நடமாட் டம் குறைஞ்சு போய்விட்டது. அந்த சமயம் அங்கே வந்த ரவுடி ஒருத்தன் கத்தி யைக் காட்டி மிரட்டி எங்கப்பா போட் டிருந்த செயின், வைர மோதிரம், ரிஸ்ட் வாட்ச் கழுத்திலே போட்டிருந்த செயின், கொஞ்சம் பணத்தோட பர்ஸ் - எல்லாவற்றையும் பிடுங்கிக் கொண்டு ஓடி விட்டானாம். எங்கப்பா அவனோட போராடிப் பார்த்தபோது அவனோட கத்தி நெற்றியிலே கொஞ்சம் ஆழமாகவே பட்டு விட்டது. அங்கு வந்த உங்க பையன் செய்த உதவியினாலே எங்கப்பா பிழைத்துக் கொண்டு விட்டார்."

"ஸார்! நான் ஏழை. என்னால பெரிய உதவி ஒண்ணும் செய்ய முடியவில்லை. என்னோட கடமையைத்தான் செய்தேன்" என்றான் செல்வம் கூச்சத்துடன்.

"அப்படிச் சொல்லாதே செல்வா! நீ ஏழையாக இருக்கலாம். ஆனால் உன் னோட மனசு ஏழை இல்லை. உன்னோட


புத்தம் புதிய சட்டையை எடுத்து இரத்தம் வருவதைக் கட்டுப் படுத்தி எனக்கு போன் செய்யாதிருந்தால்... உயிருக்கே ஆபத்து ஏற்பட்டிருக்கும் என்று டாக்டரே சொன்னதை நீ கேட்கவில்லையா? ஆஸ்பத்திரியில் அவரை அட்மிட் செய்யறவரை பக்கத்தில் இருந்து நீ செய்த உதவியை என்னால மறக்கவே முடியாது. நீ செய்த உதவிக்கு என்று நினைக்காதே, என்னோட கிறிஸ்மஸ் பரிசாக இதை வைத்துக் கொள்" என்று கூறியபடி தன் கைப்பெட்டியில் இருந்து அவனுக்கு இரண்டு செட் டிராயர் சட்டை, ஸ்வீட் பாக்கெட், ஆப்பிள் ஆரஞ்சு பழங்கள், .. வகையறாக்கள் எல்லாவற்றையும் கட்டிலின் மீது வைத்தார் மகுடபதி

"செல்வம், என்னோட சகோதரியின் பையனாக நினைத்து இவைகளைக் 'கொடுத்திருக்கிறேன். மாமாவின் அன்பளிப்பாக நினைத்து ஏற்றுக் கொள். உனக்கு எப்போது என்ன உதவி தேவைப் பட்டாலும் தயங்காமல் கேள். செய்யத் தயாராக இருக்கிறேன்" என்று கூறியபடி விடை பெற்றுக் கொண்டு சென்றார்.

"அம்மா! ராத்திரி லேட்டா வீட்டுக்கு வந்தேன்... நீ ரொம்ப கோபமா இருந்தே. அந்த சமயத்திலே நீ கஷ்டப் பட்டு வாங்கிக் கொடுத்த புதுச்சட்டையைப் பற்றி நான் சொன்னா உனக்கு இன்னும் கோபம் அதிகமாயிருக்கும். உனக்கு கிறிஸ்மசுக்கு டிராயரைத்தான் வாங்க முடியலை. வாங்கிக் கொடுத்த சட்டையாவது ஒழுங்கா வெச்சிருக்கக் கூடாது? புத்தம் புது சட்டைய இப்படிச் செய்துட்டியே... நீ பெரிய துரை.. கர்ணன் பரம்பரைன்னு திட்டுவே... வருத்தப்படுவே... அதனால நீ சந்தோஷமா இருக்கும்போது... பக்குவமா உன்கிட்டே விஷயத்தைச் சொல்லாம்' என்று இருந்தேன்... என்னை மன்னிச்சுடும்மா" என்றான் செல்வம்.

"என்னைவிட என் மகனுக்குத்தான் எத்தனை பெரிய மனசு!" என்று எண்ணினாள் அம்மா.

இப்பேது மகன் மீது அம்மாவுக்குக் கோபம் இல்லை. வருத்தம் இல்லை. அந்தப் பணக்காரர் சொன்னதுபோல தன் மகன் ஏழையாக இருந்தாலும் அவன் மனசு வறுமையாக இல்லை என்பதை உணர்ந்த அவள் தன் மகனை பாசத்தோடு; அன்போடு; மகிழ்ச்சியோடு; பெருமையோடு பார்த்தாள்.




''அறப்போர் மூலம் காந்தியடிகள் எதற்காக உழைத்தார்''

''விடுதலைக்கு''

''எங்கே திருப்பிச் சொல்லு''

''குக்லைதடுவி''


க.வ.க.வே.சித்திரவேலு



''பரீட்சை ஹால்ல ரெண்டுபேர் குத்தித் தள்ளி சண்டை போட்டாங்களா?''

''ஆமாம்! நடந்தது பலப்பரீட்சை ஆச்சே...!''

ஜூனியர்தேஜ்



"நாடகத்துக்கும் சினிமாவுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?"

"நாடகம் நடக்கும். சினிமா ஓடும்"

ஐ.ஷபீர்

அதே பாடம்!



பனங்குடி, கிராமமும் அல்ல நகரமும் அல்ல. அது இரண்டிற்கும் இடைப்பட்ட ஓர் ஊர். அந்த ஊரில் முத்துவேல் பல சரக்குக் கடையைத் தெரியாதவர்களே இல்லை. 'முரட்டு மீசை முத்து வேல்' என்று தான் அவரை அழைப் பார்கள். கருப்பணசாமி போல் ஆகிருதி யான உடல்வாகு. முரட்டு மீசை, விரல் களில் பளபளக்கும் மோதிரங்கள். பட்டு வேஷ்டி, சட்டையுடன் எப்போதும் பளிச் சென்று இருப்பார். நெற்றியில் திருநீறும் குங்குமமும் எப்போதும் நிறைந்திருக்கும். பார்த்தவுடன் பக்திமான் என்று எளிதில் அடையாளம் கண்டு கொள்ளலாம்.

சிரிக்கச் சிரிக்கப் பேசும் முத்து வேலின் குணத்தால் பலசரக்கு வியா பாரம் பெருகியது. அவர் தன் கடைக்கு வரும் சிறு பிள்ளைகளிடம் கூடக் கோபித் துக் கொண்டது கிடையாது.

ஆனால் உண்மையில் அவர் ஒரு வேஷதாரி. பசுத்தோல் போர்த்த புலி. நாணயமில்லாதவர். கலப்பட வியாபாரி. அரிசி, பல சரக்கு, எண்ணெய் போன்ற பொருட்களிலெல்லாம் கலப்படம் செய்து விடுவார். அவரது கடைச் சாமான்களை வாங்கி உபயோகிக்கும் வாடிக்கையாளர் களுக்கு உடல்நலக் குறைவு கண்டிப்பாக ஏற்படும். அதையெல்லாம் அவர் கண்டு கொள்வதே இல்லை. பொருட்களின் எடையும் கூடச் சரியாக இருக் காது. ஆனால் முத்துவேல் தன் குடும்ப உபயோகத்திற்கென்று மட்டும், சுத்தமான, கலப்பட மற்ற சாமான்களை வாங்கி வருவார்.

ஒரு சமயம் நெய்யில் முத்துவேல் எதையோ கலப்படம் செய்து விட்டார். அதை வாங்கி உபயோகித் தவர்களுக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டது. இதை யறிந்த முத்துவேல் சுதாரித்துக் கொண் டார். கலப்பட நெய்யைக் காலி செய்து விட்டு டின்களில் புதிய சுத்தமான சரக்கை வைத்து விட்டார். பரிசோத னைக்கு வந்த அதிகாரிகள் அவரைப் பாராட்டிவிட்டுச் சென்றார்கள்.

காப்பிப் பொடியில் கலப்படம் செய்த தற்காகவும், மிளகாய்ப் பொடியில் கலப் படம் செய்ததற்காகவும் அவர் இரண்டு தடவை அபராதம் கட்டியிருக்கிறார்.

முத்துவேலிற்கு இரண்டு குழந்தைகள். பையன் கனகவேல் ஐந்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தான். பெண்

விஜயா இரண்டாம் வகுப்பு.

ஒரு நாள் விஜயாவிற்குக் காய்ச்சல். முத்துவேல் தன் வீட்டிற்கு அருகிலுள்ள மருத்துவமனைக்குக் கூட்டிச் சென்றார். சிறுமியைப் பரிசோதித்த டாக்டர் அவளுக்கு ஊசி மருந்தை ஏற்றினார். கொஞ்ச நேரத்தில் விஜயா மயக்கமானாள். அவளுக்கு மூச்சுத் திணறியது. வாயில் நுரை தள்ளியது. கைகால்கள் செயலிழந்து விட்டன. பதறிப் போன டாக்டர் மாற்று மருந்தைக் கொடுத்தார். பிரயோஜனம் இல்லை. விஜயா இறந்து விட்டாள்.

பெருங்கோபம் கொண்ட முத்துவேல் டாக்டரைத் திட்டித் தீர்த்தார். தவறான மருந்தைப் பயன்படுத்தியதால்தான் தன் மகள் இறந்துவிட்டாள் எனப் போலீசில் புகார் செய்தார்.

விசாரணைக்கு வந்த மருத்துவ அதிகாரி விஜயாவிற்குப் போடப்பட்ட இஞ்ஜெக்‌ஷன் போலியானது எனக் கண்டு பிடித்தார். அந்தப் போலி மருந்துகள் அனைத்தும் மருந்துக் கடைகளிலிருந்து


அருள்நம்பி

கைப்பற்றப்பட்டன. அவர் தனது கடையில் மற்றவர்களுக்குப் படித்த அதே பாடத்தை இன்று வேறொரு கடையில் அவருக்குப் படித்துவிட்டார்கள்! சிக்கிக் கொண்டவன் பாவம் அப்பாவி விஜயா! இருப்பினும் இறப்பை யாரால் ஈடுசெய்ய முடியும்? கலப்படம் செய்து மக்களை ஏமாற்றிய முத்துவேலிற்கு இது ஒரு கசப்பான பாடம்!

அவர் இப்போது தன்னைத் திருத்திக் கொண்டார். முத்துவேலின் பல சரக்குக் கடையில் இப்பொழுதெல்லாம் கலப்படமற்ற சுத்தமான சாமான்கள் மட்டுமே கிடைக்கின்றன.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்ற முதுமொழியை அவர் முன்னரே அறிந்திருந்தால் ஒருவேளை அவரால் விஜயாவின் மறைவைத் தடுத்திருக்க முடியுமோ?





இந்தப் பதினெட்டு ஆமைகளை 11 ஒரு புறத்திலும், 7 மற்றொரு புறத்திலும் வரும்படி ஒரே கோடு போட்டுப் பிரியுங்கள் பார்க்கலாம்.

விடை: 4லில் இருந்து 13க்கு இழுத்தால் கோடு.



யாருக்குப் பெரிய மனசு?

புவனை கலைச்செழியன்

கருப்பன் வெள்ளாடுதான். ஆனால், மனிதனைப் போல, கூர் அறிவு மிக்க ஜீவன் அது. கருப்பனைத் தன் உயிர் நண்பனாகவே பாவித்தான் சாமிநாதன். அதற்கு உண்ணத் தழை பறித்து வந்து போடுவதும், தண்ணீர் வைப்பதும், மாலை வேளைகளில் விளையாட்டாக அதை மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்வதும் அவனுக்கு மிகவும் பிடித்தமான செயல்கள்.

தினமும் காலையில் சாமிநாதன், "கருப்பா, ஸ்கூலுக்குப் போய் வரட்டுமா?" என்று அதன் முகத்தோடு முகம் வைத்துக் கொஞ்சலாகக் கேட்டு விட்டுத்தான் பள்ளிக்குப் புறப்படுவான். அதுவும் மென்மையாகத் தலையசைத்து அவனுக்கு விடை கொடுக்கும். மாலையில் பள்ளி முடிந்து திரும்பும்போது, 'மே' என்று கத்தி, பாசத்துடன் அவனை வரவேற்கும்.

சாமிநாதன், தான் சாப்பிடும் சோறு, சிற்றுண்டி முதலியவற்றிலும் கருப்பனுக்குப் பங்கு கொடுப்பான். அது ஆவலோடு உண்பதை ஆசையுடன் கவனிப்பான்.

கருப்பனுக்கு மகிழ்ச்சி வந்து விட்டால், துள்ளித் துள்ளி சாமிநாதனைச் சுற்றிவரும். முன்னங்கால்கள் இரண்டையும் மண்டி போட்டுக் கொண்டு, அவனை நிமிர்ந்து பார்க்கும். 'பலே, பலே' என்று பாராட்டி அதன் கொம்புகளைப் பற்றித் தலையைக் குலுக்கி விடுவான் அவன்.

சாமிநாதனும் கருப்பனும் இப்படி இணை பிரியாமல் பழகி வந்தது, மற்றவர்களுக்கு விசித்திரமாகப் பட்டது. 'வாய் இல்லாப் பிராணியிடம் வாஞ்சை வைப்பதற்கும் ஓர் அளவு இல்லையா?' என்று குறைப்பட்டுக் கொண்டவர்களும் உண்டு! எனினும், சாமிநாதன் எதையும் பொருட்படுத்தவில்லை. அவனுடைய பெற்றோர் ஏழைதான். ஆனால், விலை மதிக்க முடியாத செல்வமாகக் கருப்பன் அந்த வீட்டில் விளங்கியது.

"அப்பா! தேர்வுக்கு ஃபீஸ் கட்ட வருகிற பதினைந்தாம் தேதிதான் கடைசி நாள்" -- சாமிநாதன் அப்பாவிடம் சொன்னான்.

"எவ்வளவு கட்ட வேணும்?"-- அப்பா கேட்டார்.

"ஐம்பது ரூபாய், அப்பா!"

"உனக்குப் பரீட்சைப் பணம் கட்டணும். அம்மாவுக்கு வீட்டு சாமான் வாங்கிப் போடணும். பண முடையோ இப்ப தாங்க முடியாதபடி இருக்கு....!"

யோசனை செய்தார் அப்பா.

"சரி, அப்பிடிச் செய்துதான் சமாளிக்கணும்!"

"எப்படி அப்பா?"

"உன் கிட்ட சொல்றதுக்குக் கஷ்ட

மாகத்தான் இருக்கு. ஆனா, அதைத் தவிர வேற வழி ஒண்ணும் தோணலை."

"என்னப்பா சொல்றீங்க?" தவிப்புடன் கேட்டான் சாமிநாதன்.

"சடக்குன்னு இப்ப எதுவும் சொல்றதுக்கு இல்லே... இரண்டொரு இடத்தில் கடன் கேட்டுப் பார்க்கிறேன். கிடைச்சுட்டா ரொம்ப நல்லது. இல்லாட்டா..."

சற்றுத் தயங்கிய அப்பா, மேற்கொண்டு எதுவும் சொல்ல விரும்பாதவராய், துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு, வீட்டை விட்டு வெளியேறினார்.

தேதி பதிமூன்று

"அப்பா! பரீட்சைக்குப் பணம் கட்ட இன்னும் இரண்டு நாள்தான் இருக்கு!"

"நினைப்பு இருக்கு, சாமிநாதா! நானும் அலையா அலைஞ்சி, கேக்காத இடத்தில் எல்லாம் கேட்டுட்டேன். சொல்லிவச்ச மாதிரி, ஒவ்வொருத்தனும் இல்லைன்னு கையை விரிச்சுட்டான்! அதனால...."

"அதனால.....?"

"கருப்பனை வித்துடலாம்னு இருக்கேன்! தம்பையாகிட்ட விலை பேசிட்டு வந்திருக்கேன்."

சாமிநாதனுக்குத் தூக்கி வாரிப் போட்டது! காரணம் தம்பையா கசாப்புக் கடைக்காரர்! அவரிடமா கருப்பனை விற்கப் போகிறார் அப்பா!

"தம்பையா கசாப்புக் கடைக்காரர் ஆச்சே! அவர் கருப்பனை வெட்டிப் போட்டு விற்பனை செய்து விடுவாரே, அப்பா!"

"கருப்பனை நம்ம வீட்டு லேயே கூட எதுக்காக வளர்க்கிறோம்னு நீ நெனைச்சிக்கிட்டு இருக்கே? நாமெல்லாம் கூட மாமிசம் சாப்பிடறவங்க தானே! நீ இப்படிப் பேசறது வேடிக்கையாக இருக்கே!"

"நாம மாமிசம் சாப்பிடறவங்க தாம்பா. ஒத்துக்கறேன். ஆனா, குட்டியிலேர்ந்து செல்லமா வளர்த்துக்கிட்டு வந்த கருப்



பனை, நம் தேவைக்காகச் சாகடிக்கக் கொடுக்கிறது நியாயமா? அது பெரிய பாவம்பா!"

"நாமா கருப்பனைக் கொல்லப் போறோம்? தம்பையாதானே வெட்டப் போறார்? அதனால, அந்தப் பாவம் கொஞ்சமும் நம்மைச் சாராது."

"கருப்பனை நாம் கொல்றதுக்கும் பிறத்தியாரைவிட்டுக் கொல்ல வைக்கிறதுக்கும் என்னப்பா வித்தியாசம்? தயவு செய்து கருப்பனை விற்க வேண்டாம்பா!"

"அப்ப உன் பரீட்சைக்குப் பணம் கட்டறது எப்படி.? படிச்ச படிப்பெல்லாம் வீணாப் போயிடணும்னு பார்க்கிறியா!"

"பாசத்தோட வளர்த்த வாயில்லாத ஜீவனைக் கொன்னுட்டு அதனால் நான் பலனடைய விரும்பலை, அப்பா! நீங்க ஒண்ணும் எனக்குப் பணம் கட்ட வேண்டாம். படிப்பு கெட்டாலும் கெட்டுப் போகட்டும்."

"அர்த்தமில்லாம உளறிக்கிட்டு இருக்காதே. நாளைக்குக் காலையில தம்பையா வரத்தான் போறார். இருநூறு ரூபா கொடுத்துட்டு, கருப்பனை ஓட்டிக்கிட்டுப் போகத்தான் போறார். பேசாம இட!"

அப்பா, வெட்டு ஒன்று, துண்டு இரண்டாகச் சொல்லிவிட்டார்! அவரை மறுத்துப் பேச வகையற்றவனாய் கண்களில் கண்ணீர் பெருக, உள்ளே போய்த் தரையில் சோர்வுடன் சாய்ந்தான் சாமிநாதன்.



பொழுது விடிய வெகு நேரம் இருந்தது. 'கருகும்' என்று இருட்டு. அப்பாவும் அம்மாவும் ஆழ்ந்த நித்திரையில் இருந்தனர்.

சாமிநாதன் படுக்கையை விட்டு மெல்ல எழுந்தான். ஓசைப் படாமல் தோட்டப் பக்கம் சென்றான். கட்டியிருந்த கருப்பனை அவிழ்த்துத் தலைக் கயிற்றுடன் பிடித்துக் கொண்டான். பக்க வாட்டுப் படலைத் திறந்து கொண்டு நடந்தான். அவன் எண்ணத்தைப் புரிந்து கொண்டது போல், கருப்பனும் அமைதியாகச் சென்றது.

"என்னங்க எழுந்திருங்க!" -- பரபரப்புடன் அப்பாவை எழுப்பினாள் அம்மா.

கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டே, மெல்ல எழுந்து பாயில் உட்கார்ந்தார் அப்பா. கன்னத்தில் கைவைத்தபடி, கவலையோடு நின்றிருந்தாள் அம்மா.

"சாமிநாதனைக் காணோம். தோட்டத்



"அப்பா! கால்ல முள்ளு குத்திடிச்சு!"
"பொய் சொல்லாதே! முள்ளு, உன்னைக் குத்தலே, நீதான் அதைக் குத்திக்கிட்டே!"
— சீர்காழி வி. ரேவதி

தில் கட்டியிருந்த கருப்பனையும் காணோம்ங்க!"

"என்னது! தம்பையா எட்டு மணிக்கு வந்துடுவாரே! அவருக்கு எப்படி ஜவாப்பு சொல்றது?"

"ஜவாப்பு சொல்றது இருக்கட்டும். முதல்ல புள்ளையையும் ஆட்டையும் தேடிக் கண்டு பிடிச்சுக்கிட்டு வர்ற வழியைப் பாருங்க!"

"எங்கே கண்டு தேடறது? எந்தப் பக்கமா போயிருப்பானோ?"

கவலை தேங்கிய முகத்துடன், வீட்டை விட்டுக் கிளம்பினார் அப்பா.

எங்கெங்கோ அலைந்து திரிந்துவிட்டு ஏமாற்றத்துடன் வீடு திரும்பிய அப்பாவுக்கு அங்கே ஓர் ஆச்சரியம் காத்துக் கிடந்தது.

தம்பையா! அவர் அருகே, கருப்பனைப் பிடித்தபடி சாமிநாதன்!

"ஐயா, இந்தாங்க... நான் ஆட்டுக்குக் குடுக்கிறதாகச் சொன்ன இருநூறு ரூபா" என்று சொல்லிப் பணத்தை நீட்டினார் தம்பையா.

பணத்தை வாங்கிக் கொண்ட அப்பா, "ஆமாம், ஆட்டை இப்பவே ஓட்டிக்கிறீங்களா?" என்றார் அப்பா குழப்பத்துடன்.

"அதுக்கு இப்ப அவசரம் ஒண்ணுமில்லீங்க!"

அப்பாவின் திகைப்பைப் போக்குகிற மாதிரி, தம்பையாவே பேசத் தொடங்கினார்.

"ஆட்டை ஓட்டிக்கிறதைப் பத்தி சாவகாசமா யோசனை பண்ணிக்குவோம். தெளிவாச் சொன்னாத்தான் உங்களுக்கு விவரம் புரியும்" என்ற தம்பையா நடந்ததை விளக்கத் தொடங்கினார்.

விடியற் கருக்கலிலேயே தம்பையாவின் வீட்டுக்குக் கருப்பனுடன் வந்துவிட்ட சாமிநாதன், கண்ணீர் விட்டு அழுதபடியே அவர் காலில் விழுந்தான்.

"ஐயா! இந்த ஆடு - கருப்பன் என் உயிருக்கு உயிரான சிநேகிதன். பாய். இதைக் கசாப்புக்கு உங்களிடம் விற்கப் போவதாக அப்பா சொன்னார். நான் கருப்பனை செல்லமா வளர்க்கிறேன். அதைப் பிரிஞ்சு என்னால் ஒரு கணமும் உயிர் வாழ முடியாதுங்க. தயவு செய்து, இதை வாங்கிக் கொன்று போட்டுடாதீங்க!" -- கலங்கிய குரலில் தன் வேண்டுகோளைத் தெரியப்படுத்தினான்.

"இதை என்கிட்ட குடுத்துட்டு, சொற்ப விலையிலே ஒரு குட்டி வாங்கி வளர்த்துக்கப்படாதா தம்பி?" -- தம்பையா கேட்டார்.

"நீங்க சுலபமா கேட்டுட்டீங்க ஐயா. கருப்பனை விட்டுட்டு வேறொரு குட்டியை வளர்க்கக் கூடாதான்னு! எத்தினி ஆடு வந்தால்தான் என்னங்க! அதெல்லாம் இந்தக் கருப்பனுக்கு இணையாக முடியாதுங்க. என் மனசோட, உசிரோட கலந்துட்டதுங்க கருப்பன்."

தம்பையாவுக்கு வியப்பு மிகுந்தது.

"நாங்க ஏழைங்க. என்னோட பழகறது, சிநேகிதமா விளையாடறது எல்லாம் இது ஒண்ணுதாங்க. உங்களுக்கு இதை விட்டா வேறு எத்தனையோ ஆடு கிடைக்கும்ங்க. அதனால, தயவு பண்ணி என் மேல இரக்கம் காட்டுங்க. என் கருப்பனை எனக்கு விட்டுக் கொடுத்துடுங்க!"

சாமிநாதனைப் பார்த்தார் தம்பையா. அவன் விழிகளில் கண்ணீர் வெள்ளம் போல் பெருகிக் கன்னங்களில் வழிந்தோடியது. அடுத்து அவரது விழிகள் கருப்பனை நோக்கின. அதுவும் அழுவது மாதிரியே தோற்றம் அளித்தது.

பாசத்தால் இருவரும் கட்டுண்டு இருப்பது. ஆடு வெட்டிப் பிழைக்கும் தம்பையா

வின் உள்ளத்தையும் உருக்கி விட்டது.

"உனக்குப் பரீட்சைப் பணம் கட்டணும்கிறதுக்காகத்தானே தம்பி, அப்பா இதை விற்கிறார்?"

"ஐயா, ஓர் உயிரைப் போக்கிவிட்டு, அதனால வர்ற பணத்தைப் பயன்படுத்தி நான் பரீட்சைக்குப் போக வேணுங்களா? அது பாவம் இல்லையா? பழகின பிராணியோட ஆத்மாவை சுயநலத்துக்காகப் பறிக்கிறதைப் போல படுபாதகம் வேற என்னங்க இருக்கு?

சாமிநாதனின் பேச்சு தம்பையாவை உலுக்கியது. அவர் உள்ளம் கசிந்தது.

"சரி, வா.. உங்க விட்டுக்குப் போவோம். அங்கே போய் ஒரு நல்ல முடிவு எடுப்போம்."

"அப்படியானா என் கருப்பனுக்கு....?"

"ஒரு ஆபத்தும் நேராது! நேரும்படி நானும் விட மாட்டேன்!"

தம்பையா சொல்லி முடித்தார்.

"ஐயா! உங்க பிள்ளைக்கு, கடவுள் மாதிரி கருணை நிறைஞ்ச மனசு. இந்த ஆட்டை நான் விலைக்கு வாங்கறதா யில்லை!"

"அப்ப, நான் சொன்ன குடும்ப கஷ்டம், பையனோட பரீட்சை விஷயம்...?" -- தவித்தார் அப்பா.


"சாமிநாதன் ஆசைப்பட்டபடி ஆடு இங்கேயே இருக்கட்டும்க."

நான் பணத்தைக் கடனாகத் தந்ததாக வச்சுக்கிட்டு, ஆக வேண்டிய செலவைக் கவனிங்க. சௌகரியப்பட்ட போது, கொஞ்சம் கொஞ்சமா கடனைத் தீர்த்துடலாம்."

"உங்களுக்குப் பெரிய மனசுங்க!" என்றார் அப்பா.

"பெரிய மனசு எனக்கும் இல்ல; உங்களுக்கும் இல்ல; உங்க மகனுக்குத்தான். அவனோட இரக்க குணத்துக்கு ஆண்டவன் ஒரு குறையும் வைக்க மாட்டார்!"

இப்படிச் சொல்லிவிட்டு, விழிகளில் வழிந்த ஆனந்தக் கண்ணீரைத் துடைக்கவும் தோன்றாமல் விடை பெற்றார் தம்பையா.



"ஆம்லெட்டா பார்க்கப் போனே? எத்தனை தைரியம்?"
"நான்போனது ஷேக்ஸ்பியரோட ஹாம்லெட் நாடகத்துக்கு என்ன?"

மாடியில் விஷ்ணு ஓய்வெடுத்துக் கொண்டிருந்தான். அம்மா, அடுப்பங்கரையில் ஏதோ இனிப்பு செய்து கொண்டிருந் தாள்.

"அம்மா... அண்ணன் எங்கே? என்ற ஷீலா வின் குரல் கேட்டவுடன் அடுப்பை நிறுத்தி விட்டு விரைந்து வந்தாள் அம்மா.

"எதுக்குடி இப்ப விஷ்ணுவைத் தேடற? என்று சற்று அதட்டலாகவே கேட்டாள்.

"ரொம்ப அவசரம்மா..." என்றதும், அம்மா ஆவலுடன் விவரம் கேட்க ஷீலா தொடர்ந் தாள்.

"பக்கத்து வீட்டு மாமாவுக்கு மஞ்சள் காமா லையாம்... அவங்க மரத்துல இளநீர் நிறைய இருக்கு... அதை அறுக்கணுமாம். அதுக்குத் தான் விஷ்ணுவைத் தேடறேன்..."

அம்மா சற்றுக் குழப்பத்துடன், "அதுக்கு ஏண்டி விஷ்ணுவைத் தேடறே...! அவனுக்கு மரம் எல்லாம் ஏறத் தெரியாதே...?" என்று கேட் டாள்.

உடனே ஷீலா, "என்னம்மா, நீ புரியாம பேசறே...? அவன்தான் விஷ்ணுவாச்சே... தன் சங்குச் சக்கரத்தை விட்டா தென்னை மரத்து மேல பறந்து, இளநீர் குலையை அறுத்து தொப்பு, தொப்புன்னு கொட்ட வைக்குமே?" என்றாள்.

"ஆரம்பிச்சுட்டியா... காலையிலேயே?" என்று மாடியிலிருந்து கீழே இறங்கினான் விஷ்ணு.

ஷீலாவின் விளையாட்டுத்தனத்தை எண்ணி மகிழ்ந்தாலும் அம்மாவுக்கு உள்ளூர வருத்தம்தான்! எல்லோரையும் வரம்பு மீறிக் கிண்டல் செய்யும் மகள் ஷீலாவின் வாயா டித்தனத்தைத் தன்னால் திருத்த முடியவில் லையே என்ற வேதனை.

வாசற்கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டு அம்மா கதவைத் திறந்தாள். எதிர் பாராத மகிழ்ச்சி. ஷீலாவின் மாமாவும் அவரது மகன் வடிவேலும் வந்திருந்தனர். அம் மாவும், விஷ்ணுவும் அவர்களை அன்புடன் வரவேற்றனர். விஷ்ணுவும், ஷீலாவும் அது வரை வடிவேலுவைப் பார்த்ததே இல்லை.

சிறிது நேரம் கழித்து, "மாமா, இது உங்க பையனா?" என்று ஆவலுடன் விசாரித்தாள் ஷீலா.

"ஆமாம்மா" என்று மாமா உற் சாகத்துடன் பதிலளித்தார்.



"பெயர் முருகேசன்தானே?" என்று ஷீலா கேட்டதும், "இல்லையே! என்றார் குழப்பத்துடன்.

அம்மாவுக்கு ஒன்றுமே ஓடவில்லை. விஷ்ணு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். ஷீலா தொடர்ந்தாள்.

"அப்ப வடிவேலுவாயிருக்கும். சரி தானே மாமா?" என்றதும், "இந்தப் பையன் ஷீலாவிடம் என்ன பாடுபடப் போகிறானோ?" என்று வேதனையுடன் பதைபதைத்தான் விஷ்ணு.

மாமா, ஆச்சரியத்துடன், "அட சரியா சொல்லி விட்டாயே! எப்படிம்மா?" என்றார் அப்பாவித் தனமாக.

"இது ரொம்ப சுலபம் மாமா.... இந்த மாதிரி கிராமத்துப் பையன்களில் பாதிப்பேர் முருகேசன்... மீதி வடிவேலுவாகத்தான் இருக்கும்" என்றாள் ஷீலா.

வடிவேலுவுக்கு ஷீலா தன்னைக் கிண்டல் செய்கிறாள் என்பது புரிந்து விட்டது. அவன் முகம் சற்று வாட்டமடைந்தது. அதைக் கவனித்த ஷீலா இன்னும் உற்சாகம் அடைந்து அவனை மேலும் மேலும் மட்டம் தட்ட எண்ணினாள்.

"ஆமாம் முருகேசு, ஸாரி வடிவேலு. இப்ப நீ என்ன கிளாஸ் படிக்கிறே?" என்று கிண்டலுடன் கேட்க, "நான் பத்தாவது படிக்கிறேன்" என்றான் அவன் அழுத்தலாக.

ஷீலா விடவில்லை.

"சரி, கிளாஸ்ல என்ன ராங்க்?" என்றாள்.

நா. அம்மு

"முதல் ராங்க்" என்று அவன் சொல்லவும்... ஷீலாவுக்கு ஒரே ஆச்சரியம். சற்று நிதானித்தாள்.

"ஆமாம், அது எப்படி நீ வந்து முதல் ராங்க் வாங்கறே?" என்று கிண்டல் கேலி எல்லாம் கலந்து அழுத்தமாக ஷீலா கேட்டாள்.

விஷ்ணு, மாமாவிடம் வீட்டிலுள்ள புகைப் படங்களை எல்லாம் காண்பித்து அதைப் பற்றி பெருமையாக மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்டிருந்தான். ஷீலாவிடம் வடிவேல் தனியாக சிக்கியிருந்தான்.

ஷீலாவின் கேள்வியில் இருந்த நக்கலை வடிவேலு உணர்ந்து கொண்டான். இனி இதை வளர விடக்கூடாது. சரியான பதிலடி தர வேண்டும் என்று முடிவு செய்து கொண்டான்.

"ஷீலா அக்கா, முதல் ரேங்க் வாங்கறது ரொம்ப சுலபம். மூன்று விஷயம் இருக்கு. அதும்படி நடத்தால் எந்தக் கழுதை வேண்டுமானாலும் சுலபமாக முதல் ரேங்க் வாங்கலாம். நீகூடத்தான்" என்றான். ஆர்வத்துடன் ஷீலா, "என்னது அது? எனக்கும் சொல்லுடா?" என்று கேட்டாள்.



அமரகவி

பாரதிதன் பாட்டாலே
புத்துணர்ச்சி ஊட்டி விட்டான்;
வீரர்களாய்க் கொதித்தெழவே
விடுதலைக்கு வித்திட்டான்!

தாய்நாட்டின் பெருமையினை
தரணியெங்கும் பரப்பிவிட்டான்;
நாய்போலப் பிறர்க்கடிமை
நாமிருத்தலை உணர்த்திவிட்டான்!

விடுதலையுங் கிடைத்ததென்று
வெற்றிமுரசு கொட்டிவிட்டான்;
நடப்பவற்றை முனமேயே
நற்கவிஞன் நவின்றுவிட்டான்!

விழிப்புணர்ச்சி தந்துவிட்டு
விரைவினிலே சென்றுவிட்டான்!
அழியாப் புகழடைந்தே
அமரகவி ஆகிவிட்டான்!

– எஸ். உமாமகேஸ்வரி
(செட்டிக்குறிச்சி)

"முதல் விஷயம் மனதை ஒருமுகப் படுத்துவது. இரண்டாவது விஷயம் காலையில் படிச்சதை மாலையில் மனப்பாடம் செய்வது." என்று சொல்லி நிறுத்தினான் வடிவேலு. "மூணாவது விஷயம் என்னடா?" என்றாள் ஷீலா ஆவலை அடக்க முடியாமல்.

"பிறரை மட்டம் தட்டிப் பேசாமல் வாயை மூடிக் கொண்டிருப்பது..." என்று வடிவேலு சொல்ல விஷ்ணு சற்று சிரித்தான்.

"சே, கிராமத்தான்னு கேவலமா நினைச்சது எவ்வளவு தப்பாப் போச்சு..!" என்று எண்ணித் தன் தவறை உணர்ந் தாள் ஷீலா. அவன் மாற அதுபோது மானதாக இருந்தது!



உப்போ உப்பு!

சீனாவில் கடற்கரை ஓரம் நடந்து சென்று கொண்டிருந்த ஏழை விவசாயி, கொக்கு ஒன்று மண் குன்றின் மீது உட்கார்ந்து கொண்டிருப்பதைப் பார்த்தான். அந்த நாட்டில் கொக்குகளைக் காண்பது அரிது. மேலும் அவை ஏதாவது ஒன்றின் மீது உட்கார்ந்து விட்டால் அது விலை மதிக்க முடியாத உயர்ந்த பொருளாகவோ, அல்லது அதில் புதையலோ இருக்கும் என்ற நம்பிக்கை அங்கு உண்டு.

ஏழை விவசாயி ஆசையுடன் மண்ணைத் தோண்டினான். உள்ளே கட்டி கட்டியாக ஏதோ பொருள் இருந்ததைக் கண்டான். அதுதான் உப்பு. அந்நாட்களில் உப்பு யாராலும் உபயோகிக்கப்படவில்லை. அந்தப் பொருள் உப்பு என்பது விவசாயிக்குத் தெரியாவிட்டாலும், கொக்கு உட்கார்ந்த இடத்தில் உள்ள பொருள். அதனால் கட்டாயமாக விலைமதிப்புள்ளதாக இருக்கும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் அதை எடுத்துக் கொண்டு அரண்மனைக்குச் சென்று அரசரிடம் கொடுத்தான். அரசன் கோபம் கொண்டு 'ஒன்றுக்கும் உதவாத மணல்கட்டியைக் கொண்டு வந்து எனக்குக் கொடுக்க உனக்கு என்ன தைரியம்' என்று விவசாயியை உடனேயே சிறையிலடைக்க உத்தரவிட்டான். விவசாயியோ அந்தப் பொருள் கொக்கு தந்த அதிர்ஷ்டம் என்று கூறியும் மன்னன் நம்பவில்லை.

அந்த உப்புக் கட்டிகளை அரண்மனை சமையல்காரன் ஒரு அலமாரியில் போட்டு வைத்தான். அது அங்கேயே பல வாரங்கள் இருந்ததால் ஈரப்பதத்துடன் கசிய ஆரம்பித்திருந்தது.

ஒருநாள் சமையல்காரன் மன்னருக்காக சமைத்த உணவு வகைகளை அலமாரியின் கீழே வைத்திருந்தபோது உப்புக் கட்டியிலிருந்து கசிந்த ஈரச் சொட்டுக்கள் உணவில் விழுந்து விட்டன. வேறு உணவு சமைக்க நேரம் இல்லாததால் சமையல்காரன் பயந்து கொண்டே அந்த உப்புச் சொட்டு விழுந்த உணவை மன்னருக்குப் படைத்தான். சிறிது நேரம் கழித்து மன்னர் சமையல்காரனைக் கூப்பிட்டு அனுப்பினார். தனக்குத் தண்டனை கிடைக்கப் போகிறது என்று பயந்து சென்ற அவனுக்கு இனிமையான அதிர்ச்சி காத்திருந்தது.


மன்னன் அவனிடம், "இதுவரை நீ சமைத்தது இவ்வளவு ருசியாக இருந்ததே இல்லை. இன்று நீ உணவில் என்ன சேர்த்தாய்? மிக ருசியாக உணவு இருந்ததே?" என்று கேட்டான். அலமாரியில் வைத்திருந்த உப்புக் கட்டியின் கசிவுச் சொட்டுகள் உணவில் விழுந்ததை சமையல்காரன் கூறினான். அன்றிலிருந்து உணவில் உப்பைச் சேர்க்கும்படி மன்னன் ஆணையிட்டான். உப்பிற்காக மேலும் ஆராய்ச்சி செய்து அவை கண்டுபிடிக்கப்பட்டு எல்லோரும் அதை உபயோகிக்கும் அளவில் உப்பு பிரபலமானது. உப்பு இப்படித்தான் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டது.

அருமையான உப்பைக் கண்டுபிடித்துத் தனக்கு வழங்கிய விவசாயிக்கு மரியாதை செய்ய விரும்பிய மன்னன் விவசாயியை சிறையிலிருந்து விடுவித்துக் கொண்டு வர ஆணையிட்டான். ஆனால் ஆணை வரும் முன்பே அந்த விவசாயி இறந்து விட்ட செய்திதான் கிடைத்தது. மன்னன் வருத்தம் அடைந்தான். ஆனாலும் விவசாயியின் மகனை அவைக்கு வரவழைத்து மூட்டை மூட்டையாகப் பரிசுப் பொருள்களைக் கொடுத்துத் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டான்.

- ஜி. இந்திரா

ரேவதி

கழுகு பறவைகளின் அரசனா?



வானில் உயரத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்த பெண் கழுகு, 'க்கிக்' 'க்கிக்' என்று குரலெழுப்பியது. அதைப் புரிந்து கொண்ட ஆண் கழுகு "நானும் கவனிச்சிட்டேன். காகம் அந்தக் கிணத்து மேட்டுல இருந்தபடி எலிக்குட்டியைக் குறி வைத்துக் கொண்டிருக்கே... அதைத் தானே சொல்றே?" என்று கேட்டது.

"ஆமாம். காகம் எலிக்குட்டியைப் புடிக்கட்டும். அதை நான் போய்ப் புடிச்சிட்டு வந்துடறேன்" என்றது பெண் கழுகு.

வெகு தொலைவில் கீழே, கிணற்றுமேட்டில் தலையைச் சாய்த்தபடி, குடிசையின் சாக்கடையிலிருந்து எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த குட்டி எலியைக் கவனித்துக் கொண்டிருந்தது காகம். குட்டி எலி வெளியே வர, காகம் பாய்ந்து கொத்திக் கொண்டு கிளம்ப, உயரே வட்டமிட்டுக் கொண்டிருந்த பெண் கழுகு இறக்கையை மடக்கிக் கொண்டு அம்பு போல் பாய்ந்து வேகமாக வந்தது. கண்ணிமைக்கும் நேரம் கூட ஆகவில்லை. வளைந்த கொக்கி நகக் கால்களால், குட்டி எலியைக் கொத்திய காகக்கையை அப்படியே பிடித்து இறுக்கிக் கொண்டு கிளம்பியது!

ஆண்கழுகு வானில் குறுக்கிட்டது.

"எங்கே போறே?"

"பனைமரக் கூட்டுக்குத்தான். இதென்ன கேள்வி! அங்கேதானே இரண்டு குஞ்சும் இருக்கு?"

"இப்போ அங்கே ஒரு குஞ்சு; மூத்த குஞ்சுதான் இருக்கு. அதுக்கு இன்னைக்குப் பசிக்காது..."

கணவனைக் கேள்விக்குறியுடன் பார்த்தது பெண் கழுகு.


"வருத்தப்பட்டுப் பயனில்லை. தம்பியை அண்ணன் சாப்பிட்டு விட்டது.

அதனால் அதற்குப் பசிக்காது. நம்ம இனத்தின் வழக்கப்படி ஒரே ஓர் முட்டைதான் நீ இட்டிருக்கணும். அதிசயமாக இரண்டு முட்டை இட்டால், அதன் முடிவு இப்படித்தான் இருக்கும். இது இயற்கையின் நியதி."

"சரி, இப்போ இந்த இரையை என்ன பண்ணுவது?" என்று கேட்டது பெண் கழுகு.

"மலைப் பிளவில் இருக்கும் கூட்டுக்குக் கொண்டு போய் இருவரும் பகிர்ந்து சாப்பிடலாம்."

காகத்தை அது பிடித்திருந்த குட்டி எலியோடு கால்களில் இடுக்கியிருந்த பெண் கழுகு திரும்பிப் பறந்தது.



"க்கிக்" "க்கிக்"

"என்ன?" என்று திரும்பியது பெண் கழுகு.

"பெருமான்கோவில் கோபுரத்தில், அந்த ராமர் பட்டாபிஷேகப் பொம்மையில் குடைக்கு மேல் இருக்கும் இடுக்கில் தவிட்டுக் குருவி கூடுகட்டியிருக்கு இல்லையா? அந்தக் குஞ்சுகளைப் பிடிக்க பாம்பு போய்க்கிட்டு இருக்கு கவனிச்சியா? உனக்குப் பாம்பு வேணுமா? குருவிக் குஞ்சு வேணுமா?"

"பாம்புதான் வேணும். பாம்பு தின்னு எத்தனையோ நாளாச்சு."

அடுத்த மூன்றாவது நிமிடம், ஆண் கழுகு பாம்பைக் கால்களில் இடுக்கிக் கொண்டு வந்தது. இரண்டுக்கும் செமை விருந்துதான்!


அடுத்த நாள். இரண்டு கழுகுகளும் பெருமாள் கோவில் கோபுரத்தின் மேல் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. கீழே கோபுரவாசலில் பக்தர்கள் கூட்டம்.

"இந்தக் கழுகுதான். இதுதான் நேற்று பாம்பைக் கொத்தி, குருவிக் குஞ்சுகளைக் காப்பாற்றியது!"

"ஆமாம். இதுவேதான். இப்போ இன்னொன்றையும் கூட்டிக் கொண்டு வந்திருக்கு!"

"இது இராமாயண ஜடாயுவின் மறுபிறப்பாகத்தான் இருக்கும். சீதையைத் தூக்கிக் கொண்டு ராவணன் பறந்தபோது, ஜடாயு தானே வழிமறிச்சு சண்டை போட்டது?"

"ஆமாம். ஆமாம்! ஆனால் ஜடாயுவுக்கு வெற்றி கிடைக்கலே. அந்த முயற்சியில் படுகாயம் அடைந்தது. ஆனால், இந்தக் கழுகு



தன் முயற்சியில் வெற்றியடைந்து, குருவிக் குஞ்சுகளைக் காப்பாற்றி பாம்பைக் கொன்று விட்டது!"

ஒரு பக்தர் தன் கையில் இருந்த சர்க்கரைப் பொங்கலைப் பிரித்து மண்டபத்தின் மேல் வைத்தார்.

"என்ன சொல்றே? குருவிக் குஞ்சுகளைக் காப்பாற்றவே பாம்பைத் தூக்கிக் கொண்டு போனோம் என்று இவர்கள் நம்பி, தங்கள் நன்றிக்கு அடையளமா பொங்கலை வைச்சிருக்காங்க. சாப்பிடலாமா?"

"நம்ப நோக்கம் பாம்பு இரைதான்னு இவங்களுக்குப் புரிந்தால் கல்லால் அடிப்பாங்களோ?" என்று தயங்கியது பெண் கழுகு.

"அவங்களுக்குத் தெரிஞ்சாத்தானே?"

"அப்போ குருவிக் குஞ்சுகளைப் புடிக்கப் போறதில்லையா?"

"அதை நாளைக்கு வைச்சுப்போம். நெய்யும் சர்க்கரையும், ஏலக்காய் முந்திரிப் பருப்புப் போட்டு செஞ்ச சர்க்கரைப் பொங்கல்... நமக்கு யார் தருவாங்க? வா ஒரு கை பார்ப்போம்."

இரண்டு கழுகுகளும் 'ஜிவ்' வென்று பாய்ந்து வந்து பொங்கலைத் தின்றன.

"என்னமா திங்குது! ஒருவேளை திருக்கழுக்குன்றத்துல தினமும் நடுப்பகலில் பொங்கல் தின்ன வந்துக்கிட்டிருந்ததே... அந்த ரெட்டைக் கழுகோட சந்ததிகளா இதுங்க இருக்குமோ?"

"இருந்தாலும் இருக்கும்!"

பக்தர்கள் கைகூப்பிக் கண்மூடிக் கன்னத்தில் போட்டுக் கொண்டனர்.

"என்ன அநியாயமா இருக்கு! திருக்கழுக்குன்றத்துக்கு வந்து கொண்டிருந்த கழுகுகள் கோடாங்கி வகை வெள்ளைக் கழுகுகளாச்சே! கழுகு இனத்துல ஐம்பது வகைக்கு மேல் இருக்குன்னு இவங்களுக்குத் தெரியலையே!" என்றது பெண் கழுகு.

கூட்டத்தில் இருந்த ஒரு சிறுமி,

"கழுகே கழுகே சாப்பிடு
கருணையின் உருவே சாப்பிடு!
பழுப்புக் கழுகே சாப்பிடு
பொங்கலை நல்லாச் சாப்பிடு" என்று பாடினாள்.



"கேட்டியா சிறுமி பாடறதை? கிளி, புறா, மயில், குருவி, கொக்கு என்று எல்லாப் பறவைகளைப் பற்றியும் குழந்தைகளுக்காகப் பாடல் பாடியிருக்கிறார்கள். ஆனால் நம்மைப் பற்றி மட்டும் ஒருவரும்

பாடக் காணோம். இப்பத்தான் முதல் முதலா ஒரு பாட்டைக் கேட்கிறேன்!"

"ஆமாம் ஆமாம்," என்றது பெண் கழுகு.

சிறுமி பாடலைத் தொடர்ந்தாள்.

"பறவை ராஜா சாப்பிடு
பதமாய் பொங்கல் சாப்பிடு!
வீரரே விரும்பிச் சாப்பிடு
வணங்கிக் கேட்டேன் சாப்பிடு"

"இந்தச் சிறுமியை எனக்கு ரொம்பப் புடிச்சிருக்கு. இவள் நம்மைப் பற்றிப் பாடினதுக்கு நாம்ப ஏதாவது பரிசு தர வேண்டும். என்ன தரலாம்?"

"நாளைக்கு அந்தக் கொய்யா மரத்து அணிலை இரை பிடிக்கறதா இருக்கோமே... அதை இந்தச் சிறுமிக்கு நம்ம அன்புப் பரிசா தரலாம்."

"இந்தச் சிறுமியின் வீடு கூட எனக்குத் தெரியும்."

அடுத்த நாள் காலை இரண்டு கழுகுகளும் சிறுமியின் வீட்டுக் கூரையில் உட்கார்ந்திருந்தன. ஆண் கழுகின் கால்களுக்கு இடையே ஒரு அணில் சிக்கிக் கிடந்தது.

எதற்காகவோ வீட்டு முற்றத்திற்கு வந்த சிறுமி ஆண் கழுகின் கால்களில் சிக்கிக் கிடந்த அணிலைப் பார்த்து அலறிக் கொண்டு உள்ளே ஓடிப் போனாள்.

"வீட்டுக் கூரை மேல் கழுகு உட்காருவது நல்ல சகுனம் இல்லே. அதோட அது அணிலை வேற புடிச்சிக்கிட்டு வந்திருக்கு சீக்கிரம் விரட்டி விடுங்கள்" என்று அம்மா கத்தினாள்.

சிறுமியின் அண்ணன் கவண் வில்லுடன் முற்றத்திற்கு வந்தான்.

"நன்றி கெட்ட மனிதர்கள். இவர்களுக்காக அருமையான அணிலை இழக்க இருந்தோமே!" என்று பறந்தன இரண்டு கழுகுகளும்.

அறிவியல் உண்மைகள்

◆ கழுகுகள் (EAGLE) உலகம் முழுவதும் பரவியுள்ளவை. ஐம்பது வகைகளுக்கு மேல்.

◆ அசைவ உண்ணிகள்.

◆ உறுதியான வளைந்த அலகு, உறுதிமிக்க வளைந்த கால் விரல்கள் இவைகளின் சிறப்பு அம்சங்கள்.

◆ மிகவும் கூரிய பார்வை உடையவை. மிக உயரத்தில் பறக்கும் பறவை இதுவே. பறந்து கொண்டிருக்கும்போதே, தரையில் இரை இருக்கிறதா என்பதைக் கவனித்துக் கொண்டே இருக்கும். தென்பட்டால், உடலைச் சுருக்கிக் கொண்டு அம்பு போல் பாய்ந்து வந்து கால்களில் தூக்கிக் கொண்டு போய் விடும்.

◆ ஆணும் பெண்ணும் அன்புடன் இணைபிரியாமல் வாழும். குடும்பம் நடத்துவது எல்லாம் வானில் பறந்தபடிதான்!

◆ பெரும்பாலும் இரண்டு கூடுகள், வெவ்வேறு இடங்களில் கட்டும். ஒன்றில் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்த பிறகு இன்னொன்றைப் பயன்படுத்தும்.

◆ ஒரே ஓர் முட்டைதான் இடும். தப்பித் தவறி இரண்டு முட்டை இட்டுவிட்டால், முதல் முட்டையில் இருந்து வெளிவரும் குஞ்சு, இரண்டாவது முட்டையில் இருந்து வெளிவரும் குஞ்சைத் தின்றுவிடும். இது இயற்கையின் சட்டம். ஒரு குஞ்சை மட்டும் அம்மாவும் அப்பாவும் போட்டி போட்டு அன்புடன் வளர்க்கும்.

◆ பசி வந்து விட்டால், துணிவாக வந்து கோழிக் குஞ்சுகளையும், அணில், புறாக்களையும் தூக்கிக் கொண்டு போகும். பருந்து அடிப்பது என்பது இதுதான். அஞ்சாமைக்கு இலக்கணமாக விளங்குவதாலேயே கழுகு பறவைகளின் அரசனாக மதிக்கப்படுகிறது.

◆ நாற்பது ஆண்டுகள் வரை வாழக்கூடும். ஆணோ பெண்ணோ இறந்து, திரும்பி வராது என்ற உறுதியான நிலை ஏற்பட்டால்தான் இன்னொரு துணையைத் தேடும்.

◆ இராவணனைத் தாக்கிய மிக நீண்ட, வலுவான இறகுகள் உடைய கழுகரசன் 'ஜடாயு' வகைக் கழுகுகள் இப்பொழுது இல்லை.

◆ திருக்கழுக்குன்றத்திற்கு வந்து கொண்டிருந்த வெள்ளைக் கழுகுகள் (NEOPHRON PERENOPTERUS) கோடாங்கிக் கழுகுகள் வகையாகும்.

◆ கழுகுகள் மனித இனத்திற்கு அளவில்லாத நன்மைபுரிகின்றன. இறந்த விலங்கு, பறவைகளின் உடல்களை இரையாக்கிக் கொண்டு காட்டில் இவை தோட்டி வேலை செய்கின்றன. இவை இல்லாவிடில் சுற்றுப்புறச் சூழல் மாசுபடும்.

◆ வேட்டைக்கு உதவும் பறவையாக இவை பயிற்சி தரப்பட்டு முகலாய மன்னர்களால் செல்லமாக வளர்க்கப்பட்டன.

◆ மனிதர்கள் கூறுவதைப் புரிந்து கொண்டு நடக்கக்கூடிய பறவையாக இவை இன்றும் பயிற்றுவிக்கப்பட்டு சர்க்கஸ் காட்சிகளில் இடம்பெற்று வருகின்றன.

◆ இந்தியாவில் கழுகு அபசகுனமாகக் கருதப்பட்டாலும் மேல்நாடுகளில் இவை வீரத்தின் சின்னம். அரசாங்கத்தின் சின்னமாகக் கூட இவை உள்ளன.

சேதுபதி

புரிஞ்சுக்க போங்க....!


கபீர் கெட்டிக்காரன்! நன்றாகப் படிக்கவும், பேசவும், எழுதவும் செய்பவன். அதைவிடவும் பிறருக்கு உதவி செய்வதில் மிகுந்த விருப்பம் உடையவன்!

எந்தப் பிரச்னையாக இருந்தாலும் மிக எளிதாகப் புரிந்து கொண்டு தீர்த்து வைப்பதில் கபீர் புத்திசாலி. புரியாமல் திணறும் எந்தக் கணக்கையும், கேட்பவர்க்கு நிமிடத்தில் புரிய வைத்து முழு மதிப்பெண் பெறத் தகுதியுடையவராக ஆக்குவதில் கைதேர்ந்தவன். அதனால் எல்லோரும் நன்றாக அவனிடம் பழகுவார்கள். அவன் இருக்கிற இடமே கலகலப்பாக இருக்கும்!

அன்று மதிய உணவு வேளைக்குப் பிறகு ஓய்வு நேரத்தில், அவனது வகுப்புத் தோழர்கள் அனைவரும் மரத்தடியில் கூடி ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். மரத்தடியில் தமது நண்பர்கள் இருப்பதை அறிந்து அப் பக்கம் நோக்கி நடந்தான் கபீர்.

குளுமை நிறைந்த வேப்பமரம்! சுற்றிலும் ஒழுங்குபடுத்தப்பட்டு அழகுதரும் பூஞ்செடிகளுக்கு மத்தியில் யாரோ ஒரு பெரிய பச்சைக் குடையை நட்டு வைத்த மாதிரி நெடுஞ்சாலையிலிருந்து பார்க்கிற போதெல்லாம் தெரியும் மரம்! அதைப் பற்றிக் கூட ஒருநாள் கவிதை எழுதி, தமது நண்பர்களிடம் வாசித்துக் காட்டிய மகிழ்வான அனுபவம் அவனது மனத்திரையில் ஓடிக் கொண்டிருந்தது.

"அதெல்லாம் கிடையாது. ஒருமைப்பாட்டுக்காகச் சொல்ற பொய் அது!" என்று ஆக்ரோஷமாய்க் கத்திய சிவாவின்



குரல் கபீரை நிகழ் உலகத்துக்குக் கொண்டு வந்தபோது, அவன் மரத்தடிக்கு வந்து விட்டான்.

"என்னப்பாது...! மரத்தடி மாநாட்டில் பிரச்னை...?" என்றபடி அவர்கள் கவனத்தை ஈர்த்தான் கபீர்.

"கபீர், சரியான நேரத்திலே வந்து சேர்ந்தே...!" என்றான் குமார்.

"என்னது...?" என்றான் கபீர், முழுமையாகப் புரிந்து கொள்ளும் நோக்கத்தோடு...!

"இன்று தமிழ் வகுப்பில், "ஒன்றே குலம் ஒருவனே தேவன்'னு சார் சொன்னார் இல்லியா...? அது சம்பந்தமா..." என்று குமார் சொல்லிக் கொண்டிருக்கும்போதே கபீரின் கவனம் வகுப்பறை நிகழ்வுக்குள் மூழ்கிப் போனது!

வகுப்பில் செய்தித்தாள்களைப் பற்றிய பாடம் நடந்து கொண்டிருந்தது. செய்தித்தாள்களில் என்னவெல்லாம் இடம்பெறும் என்று பேசிக் கொண்டு இருந்தபோது, அன்றையச் செய்தியான மதக்கலவரம் பற்றிய விவாதம் எழுந்தது. பலரது கருத்துக்களையும், கேட்டுப் பரிசீலித்து இதற்கெல்லாம் முடிவு, "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற திருமூலர் கருத்தின்படி வாழ்வதுதான்!'' என்று ஆசிரியர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே மணியடித்தது. "மீதியை அடுத்த வகுப்பில் பார்க்கலாம்" என்று சொல்லி விட்டுப் போனார் ஆசிரியர். அது பற்றித்தான் இந்த விவாதம் என்று புரிந்து கொண்ட கபீர், "அது சரிதானே...? அதிலென்ன சந்தேகம்?" என்றான்!



"கபீர் நீயும் ஜால்ராப் போடறே...!" என்றான் சிவா.

பிரச்னை புரிந்து விட்டது கபீருக்கு! நேரடியாக விளக்குவதை விட ஏதேனும் செய்து காட்டினால்தான் அவர்களுக்குப் புரியும் என்று முடிவு கட்டியவனாய் மௌனமாக எல்லோரையும் பார்த்தான்!


பின்னர் மெதுவாக, "கண்ணன், மேரி, பாத்திமா மூணு பேரும் எழுந்திருங்க...!" என்றான்.

ஏனென்று புரியாமலேயே எழுந்தனர் மூவரும்! அவர்களைப் பார்த்து, "உங்களோட தண்ணி பாட்டில்களை எடுத்துட்டு வாங்க...!" என்றான் கபீர்.

மூவரும் கொண்டு வந்தார்கள்!

ஒரு வாட்டர் கேனின் மூடியைக் கழற்றிவிட்டு, "இதில்






''கடல் ஏன் நீலநிறத்தில் உள்ளது?''

''சொட்டுநீலம் ஏற்றிவந்த கப்பல் கவிழ்ந்ததால நீலநிறத்தில் இருக்கிறது.''


♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦



''சீனு, நான் சுகுமாரை அழைச்சிட்டு வரச் சொன்னா நீ குமாரை அழைச்சிக்கிட்டு வந்திருக்கே?''

''இவன்தான் சார் சு. குமார்.''

✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧



''பல் இருந்தும் பல் தேய்க்க முடியாத உருவம் எது, சொல்லு?''

''தெரியலையே. நீயே சொல்லு!''

''கப்'பல்'!''

– செ. கார்த்திக்

ஏதேனும் இருக்கிறதா...?'' என்று அந்த மூடியைக் கூட்டத்தினரிடம் காட்டிக் கேட்டான் கபீர்!

மாயாஜாலம் காட்டுபவனின் செயலை ஆர்வத்தோடு வேடிக்கை பார்ப்பது போலக் கவனித்த நண்பர் கூட்டம் "ஒன்றுமில்லையே...!" என்றனர்.

"சரி... கண்ணன், முதலில் நீ கொண்டு வந்த தண்ணீரைக் கொஞ்சம் இதில் ஊற்று" என்றான்!

கண்ணன் ஊற்றினான்!

"அடுத்து பாத்திமா...!"

அவளும் அவ்வாறே ஊற்றினாள்.

"அடுத்து மேரி!"

மேரியும் கேனில் நீரை ஊற்றினாள்.

நீரூற்றிய கேனைத் தூக்கிப் பிடித்தபடி எழுந்த கபீர், "இதிலே மூணு பேரோட தண்ணீரும் இருக்கு! இப்போ கண்ணன், பாத்திமா, மேரி நீங்க மூணு பேரும் நீங்க விட்ட தண்ணீரைத் தனித்தனியா எடுக்கணும்!" என்றான்.

"அது எப்படி முடியும்?" என்றனர் மூன்று பேரும், கோரஸாக!


"ஏன் முடியாது...? ஒரே கடவுளையே வேறு வேறாகப் பிரித்துப் பார்க்கிறபோது, தண்ணீரில் மூன்று பேருடையதையும் ஏன் பிரிக்க முடியாது? சிவா, நீ பிரித்துக் காட்டு... உன்னால் கண்டிப்பாக முடிய வேண்டும்" என்று கபீர் சொன்னதும் படபடவென்று கைதட்டல் எழுந்தது.

இன்னும் புரியாதவனாய் விழித்தான் சிவா! "ஏன் கைதட்டறீங்க...?" என்று கேட்டான்!

மேரி சொன்னாள்... "இன்னுமா புரியல்லே...? தண்ணீர் ஒரே மாதிரிதான். கண்ணனின் பாத்திரத்தில் இருந்ததனால அது கண்ணனின் தண்ணீர்! என்னோட பாத்திரத்திலே இருந்ததனால... அது என்னோடது...! அதே மாதிரித்தான் பாத்திமாவோடதும்...! ஒரே தண்ணீரைத் தனித் தனியே வைச்சுக்கிற மாதிரிதான், ஒரே கடவுளை நாம் வேறே வேறேயாப் பிரிச்சு வழிபடறதும்... ஆனாலும் கடவுள் ஒருவர் தான்னு புரிஞ்சு போச்சு..."

"இதை எல்லாருமே உணர்ந்துக்கிட்டா இந்தியாவிலே மதக்கலவரமே வராது..." என்றான் கண்ணன்.

"இப்பத்தான் எனக்குப் புரிஞ்சது" என்றான் சிவா. "சரியான டியூப் லைட்!" என்றான் குமார்! தன்னைத் தமிழ் ஆசிரியருக்கு ஜால்ரா என்று திட்டிய சிவாவை வென்று விட்டதில் அவனுக்குத் தனி மகிழ்ச்சியில்.



திக்...திக்...திக்... கதைகள்! பயமின்றிப் படியுங்கள்!

ரமணியின் முகத்தில் வெற்றிக் களிப்பு நிறைந்திருந்தது. அதே அளவுக்கான பெருமிதமும், செருக்கும் அவனைச் சுற்றியிருந்த, அவன் அணியைச் சேர்ந்தவர்களுக்கும் இருந்தது.

எதிரே இருந்த செல்வம் அணியினர் நேர் மாறான மனநிலையில் இருந்தனர்.

“செல்வம், நாங்க பொன்விழா கொண்டாடப் போறோம். என்னுடைய இந்த பாணா காற்றாடி உன்னுடைய காற்றாடியைச் சேர்த்து இதுவரை ஐம்பது காற்றாடிகளை ஜெயிச்சிருக்கு. போட்டிக்கு வான்னு நானா உன்னை அழைக்கலே. நீதான் வலிய வந்து போட்டியிடக் கூப்பிட்டே” என்றான் ரமணி.

ரமணி கூறியது உண்மைதான். நண்பர்கள் புடைசூழ ரமணி தன் பாட்டுக்குத் தன்னுடைய பாணா காற்றாடியை அகஸ்தியர் காலனியில் விட்டுக் கொண்டிருந்தான். ஸ்புட்னிக் காலனியில் செல்வம் தனது பேந்தா காற்றாடியை விட்டுக் கொண்டிருந்தான்.

பாணா காற்றாடி என்பது கதவு போன்ற அளவுடைய மிகப் பெரிய காற்றாடி. மூங்கிலைப் பாதியாகப் பிளந்து வளைத்து வில் கட்டி காற்றாடி செய்திருப்பார்கள். காற்றாடியின் ஓரத்தை நூல் வைத்து மடக்கி ஒட்டியிருப்பார்கள். இதன் கனத்தைத் தாங்கக் கூடிய அளவுக்கு நூல் உறுதியாக இருக்கும். இதை வைத்து தென்னை மரத்தின் ஓலை மட்டையைக் கூட அறுத்து விழ வைப்பார்கள்! இது பறக்கும் போது, நூலில் எது பட்டாலும், அறுத்து விழ வைக்கும். இதை வைத்துத்தான் ரமணி பந்தயம் போட்டு நாற்பத்தொன்பது காற்றாடிகளை அறுத்திருக்கிறான்.

செல்வம் வைத்திருந்த காற்றாடி பேந்தா வகை. முறத்தைப் போன்ற (பேந்தா) உருவமுடையது. அதில் குறுக்கும் நெடுக்குமாகப் பல வண்ணக் கோடுகள் இருக்கும். செல்வத்தின் தந்தை குஜராத்தில் பணியாற்றியவர். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை செல்வம் கூட ராஜ்கோட்டில்தான் இருந்தான். காற்றாடிக்குப் பெயர் போனது குஜராத். அங்கேயும் பந்தயப் போட்டிகள் நடக்கும். நூல், பார்க்க மெலிந்து இருந்தாலும், நன்கு முறுக்கேறிய வகை. இதுவும் பறக்கும்

சின்னபாபு.



போது கூட, தன் மேல் படும் எதையும் அறுக்கக் கூடியதே!

செல்வத்தின் நண்பன் ஒருவன், "டேய் இந்தத் தந்தியை உன் காற்றாடியில் அனுப்புடா" என்று ஒரு வண்ணக் காகிதத்தைத் தந்தான். அதில் "பரிசு ஐந்து ரூபாய்!" என்று எழுதியிருந்தது. இந்த மாதிரி பரிசு அறிவிப்புகளைக் காற்றாடி மொழியில் தந்தி என்பார்கள். காற்றாடியைப் பாதி இறக்கி, நூலை அறுத்து, தந்தியை மறுபடி, நூலை முடிந்து மாட்டிப் பறக்க விடுவார்கள். தந்தி, காற்றாடியின் முனைக்குப் போய்விடும். நூல் பட்டு தந்தி கரைந்து, அறுந்து விழும். அதை எடுத்து வருபவர்களுக்குப் பரிசு தருவார்கள்.

நண்பன் அளித்த வண்ணத் தந்தியை அனுப்ப, ரமணி தனது காற்றாடியை இறக்கினான். அது வளைந்து வட்டமிட்டு இறங்கும் பாதையில், செல்வத்தின் பேந்தா பறந்து கொண்டிருந்தது. பாணாவின் நூல்பட்டு எங்கே பேந்தாவின் நூல் அறுந்து விடுமோ என்ற எண்ணத்தில் பேந்தாவை இறக்கிக் கொள்ளும்படி செல்வத்திற்குச் சொல்லியனுப்பினான் ரமணி.

இதைப் பெரிய கௌரவப் பிரச்னையாக செல்வம் எடுத்துக் கொண்டான்.

"இதுக்கு மேல் அப்பன் காத்தாடியை எல்லாம் நான் ராஜ்கோட்டில் விட்டு ஜெயித்தவன். பேந்தாவை இறக்க மாட்டேன். வேணுமானால் போட்டி போட்டு ஜெயிச்சு வெட்டி, ஒட்டிக்கச் சொல்" என்றான் வீம்புடன்.

இப்பொழுது ரமணிக்கு இது கௌரவப் பிரச்னையாகி விட்டது. காற்றாடியை லாவகமாகத் தாழ்த்தி, சுழல வைத்து, பேந்தாவுடன் சிக்க வைத்தான். உயர்த்தி, சுழலவைத்து, சுற்றிச் சுற்றி முடிச்சுப் போட வைத்து உயர்த்தி சுண்டினான். பேந்தாவின் நூல் அறுந்து விட்டது. ஆனால், ரமணி போட்ட முடிச்சின் காரணமாக பேந்தா பறந்து சென்று விழாமல், பாணாவோடு சேர்ந்து பறந்தது! பாணா

வின் பலத்தில் அதுவும் உயர்ந்து, பறந்து சிரித்தது. ஆனால் கட்டுப்பாடு எல்லாம் ரமணியின் கையில்!

"தோத்துட்டேன்னு எழுதிக் கொடு செல்வம். கொஞ்சம் கூட அலுங்காம நலுங்காம உன் காற்றாடியை இறக்கி முழுசா தந்திடறேன்" என்றான் ரமணி பெருந்தன்மையுடன்.


வேறுவழியின்றி செல்வம் எழுதிக் கொடுத்தான். ரமணி, காற்றாடியை இறக்கப் போகும் சமயத்தில் என்ன காரணமோ தெரியவில்லை. பேந்தாவின் நூல் அறுந்தது! தலையை சாய்த்து சாய்த்துத் தாழப் பறந்தபடி, மெதுவாக இறங்கத் தொடங்கியது.

"சோமு, பாணாவை இறக்கிக் கொண்டாடா. நான் செல்வத்தின் பேந்தாவைப் பிடிக்கப் போறேன்" என்று விரைவாகச் செயல்பட்டான் ரமணி.

இரண்டு அணியினரும் காற்றாடியின் பின்னால் தெருக்களைக் கடந்து அசுர வேகத்தில் கத்திக் கொண்டே கண் மூடித்தனமாக ஓடினார்கள்! அந்த அறுந்த பேந்தா தலையைச் சாய்த்துச் சாய்த்து தாவிப் பறந்தது. ஊரின் எல்லையைத் தாண்டி, ஏரிக்கு மேல் பறந்து. அக்கரையில் இருந்த பங்களாவின் மொட்டை மாடியில் விழுந்து ஒளிந்து கொண்டது! பின் தொடர்ந்து ஓடி வந்த நண்பர்களுடன் ரமணி ஏரிக்கரையில் திகைத்துப் போய் நின்றான்.

"செல்வம் காற்றாடியை மறந்துடு. அது பேய் பங்களாவுக்குள் விழுந்துடுத்து. அதுக்குள்ள போய், காற்றாடியைக் கொண்டு வரக் கூடிய அளவுக்குத் துணிவுள்ளவர்கள் யாரும் இல்லை!" என்றான் சேகர். அவன் ரமணியின் நண்பன்!

செல்வத்தின் கண்கள் கலங்கின.





ரமணி முன்னே வந்தான்.

"செல்வம், உன் காத்தாடியை முழுசா உன்னிடம் ஒப்படைக்கறதா நான் வாக்குக் கொடுத்திருக்கேன். நான் போட்ட நிபந் தனையை ஏற்று, தோற்றுப் போயிட்டதா நீ வேற எழுதிக் கொடுத்திருக்கே! அதனால, வாக்கைக் காப்பாற்ற வேண்டியது என் பொறுப்பு."

"ரமணி, சாதாரணமான நிலைகளில் நீ சொல்றது சரி. ஆனால் இது அபாயம் நிறைந்த முயற்சி. அந்த பங்களாவின் பேரே பேய் பங்களா! போன மாசம் வரை 12 பேர் அங்கே செல்வத்தோட ஒரே குடும்பமா வாழ்ந்தாங்க அந்தக் குடும்பத்துல இப்போ யாருமே உயிருடன் இல்லை. பிரான்சுக்கு சுற்றுப்பயணம் போனவங்க ஒட்டுமொத்தமா விமான விபத்துக்கு ஆளாகியிட்டாங்களாம். அவங்க எல்லாரும் பேய் உருவில் வந்து அங்கே இரவில் அமர்க்களம் பண்ணறாங் களாம்! தானாகவே விளக்கு எரியுதாம்; டீவி. ஓடுதாம்! இரவில் காட்டுக் கத்தலாம்! வேணு மானா நாளைக்குக் காலையில் வெளிச் சத்தோட நாம போய்ப் பார்க்கலாம்" என் றான் ஸ்ரீதர். அவன் ரமணியின் நண்பன்.

"நல்ல யோசனைதான். ஆனால், இப்பெல் லாம் இரவில் மழை பெய்கிறதே? அப்படி இன்னிக்கும் பெய்தால் காற்றாடியின் நிலை என்னவாகும்? இந்த ஒத்திப் போடல் சமாச் சாரமே வேண்டாம். இப்பவே போகலாம். உங்களுக்குப் பயமாக இருந்தால், யாரும் என் கூட வர வேண்டாம்! நான் மட்டும் போறேன்" என்றான் ரமணி உறுதியாக.

ஒரு நிமிடம் பயங்கர மௌனம். யாருமே பேசவில்லை.

"இது புத்திசாலித்தனம் இல்லை ரமணி. நானே சொல்கிறேன் இந்த அபாய முயற்சி வேண்டாம். காற்றாடியை விட, உயிர் விலை மதிப்புமிக்கது இல்லையா? அதோடு ஏரியில் நீர் நிறைந்து தளும்புகிறது. ஒன்று நீந்திப் போக வேண்டும். இல்லை பத்து கிலோ மீட்டர் சுற்றிக் கொண்டு நடந்து போக வேண்டும். காலையில் பார்த்துக் கொள்ள லாம்" என்று ரமணியின் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினான் செல்வம்.

"நானும் ஸ்ரீதரும் மாவட்ட அளவில் நீச்சலில் பதக்கம் வாங்கியவர்கள்" என்று சட் டையைக் கழற்றினான் ரமணி.

"ரமணி, ஏரி நீருக்குள் முதலை இருக் காம்!" என்று தயங்கினான் ஸ்ரீதர்.

"போன வாரம் வரை சாண் அளவுக்குத் தான் இதில் நீர் இருந்தது. இப்பத்தான் அடைமழை பெய்திருக்கு. அப்ப இல்லாத முதலை இப்ப திடீர்னு எப்படி வரும்? கப்சா விட்டு மிரள வைக்கவும் ஒரு எல்லை இல் லையா?" என்று சிரித்த ரமணி, "நான் போகத் தான் போறேன். துணிச்சல் இருக்கறவங்க என்னோட வாங்க. பயப்படறவங்க வீட்டுக் குப் போய் ரசம் சாதம் சாப்பிட்டு விட்டு, போர்வையை மூடிக்கிட்டுத் தூங்குங்க!" என்று நீரில் பாய்ந்தான்.

"நானும் வரேன் ரமணி. உனக்கு ஆவது எனக்கும் ஆகட்டும்!" என்று தானும் நீரில் இறங்கினான் ஸ்ரீதர்.

"நானும் வரேன் ரமணி" என்ற செல் வமும் இறங்கினான் ஜட்டியுடன்.


மூவரும் நீந்தினர். பாதி தூரம் நீந்தி யிருப்பார்கள். திடீரென்று நீருக்குள் என் னவோ சத்தம்! மங்கிய நிலவொளியில் ஏரி நீரில் தலைதூக்கியிருந்த பாறை மேல் ஒரு பெரிய முதலை! வாயைப் பிளந்து காட்டிக் கொண்டிருந்தது!

"உன் அசட்டுப் பிடிவாதத்தின் விளை வைப் பார்த்தாயா? பேய்க்கு பலியாகப் போகிறோமோ இல்லையோ, இந்த முத லைக்கு பலியாவது நிச்சயம்!" என்றான் செல் வம். அவன் உடம்பு நடுங்கியது. ஸ்ரீதருக்கும் – ரமணிக்கும் கூடத்தான்!

(அடுத்த இதழில் முடியும்)

உரக்கப் படிக்க உன்னதக் கதைகள்

எனக்கு வேண்டாம்!



தமிழ்நாட்டில் எவ்வளவோ புலவர்கள் இருந்திருக்கிறார்கள். மக்களது கல்வி வளர்ச்சிக்கும், இலக்கியச் சுவையை உணர்ந்து மகிழவும் இவர்கள் பணி உதவியது. பெரும்பாலும் இவர்கள் அரசர்களின் ஆதரவில் தான் வாழ்ந்தனர்.

அரிசில்கிழார் என்று ஒரு புலவர். அரிசில் என்பது இவரது ஊரின் பெயர். இது திருச்சிராப்பள்ளியில் உள்ள கொள்ளிடக்கரையைச் சேர்ந்த அரியலூர் என்று சிலர் கூறுகிறார்கள். இல்லை, இது மைசூரில் உள்ள அரிசிக்கரை என்றும் சிலர் கூறுகிறார்கள்.

அரிசில்கிழார் பெரும் புலவர். இவர் தங்களைப் பற்றிப் பாடமாட்டாரா என்று அரசர்கள் ஏங்கினார்களாம்! அந்த அளவுக்குக் கவி பாடுவதில் தனித் திறமை பெற்றிருந்தார் அரிசில்கிழார்.

பெருஞ்சேரல் இரும்பொறை என்று ஒரு சேர மன்னன் இருந்தான். இவனுக்குத் தலை நகர் தொண்டி. இது துறைமுக நகரும் கூட. இவனுடைய மனைவியின் பெயர் அந்து வஞ்செள்ளை. இருவருமே புலவர்களின் பாடல்களைக் கேட்டு, அவைகளின் இலக்கியச் சுவையை அறிந்து மகிழ்வதில் சிறந்தவர்கள்.

பெரும்புலவரான அரிசில்கிழார் தொண்டி நகருக்கு வந்தார். சேர மன்னன் இரும்பொறையின் அவைக்

கும் வந்தார். மன்னரும், அரசியாரும், அவைக்களப் புலவர்களும் அரிசில் கிழாரை அன்போடு வரவேற்றனர்.

அரிசில்கிழார் சேர மன்னன் இரும்பொறையையும், சேரநாட்டு வளத்தையும் சிறப்பாக எடுத்துக் காட்டும் அருமையான பத்துப் பாடல்களைப் பாடினார். பொருட்சுவையும், சொற்சுவையும் கொண்ட அந்தப் பாடல்களைக் கேட்டதும் அவையோர் மகிழ்ந்தனர். அரசனும் அரசியும் மகிழ்ச்சிப் பெருக்கால் தன்நிலை கொள்ளாது தவித்தனர்.

அற்புதமான அந்தப் பாடல்களுக்கு ஈடாக மன்னன் இரும்பொறை என்ன பரிசு தரப் போகிறான் என்பதை அறிய எல்லோரும் ஆவலாகக் காத்திருந்தனர். உயர்ந்த பாடல்களுக்கு ஏற்றபடி உயர்ந்த பரிசாக அவை இருக்க வேண்டும் என்று அவர்கள் அனைவரும் எதிர்பார்த்தனர்.

என்ன பரிசைத் தருவது என்று மன்னன் இரும்பொறையும் தவித்தான். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தவனாகத் தன் அரியணையை விட்டுக் கீழே இறங்கினான்.

''வெட்னரி'' ஆஸ்பத்திரிக்கு எப்படிப் போகணும்?

இப்படியே ''கால்நடை''யாய்ப் போங்க!''

— பாளை பகம்பொன்



"அரிசில்கிழாரே, உமது பாடல்களுக்கு ஏற்றதாகத் தரக்கூடிய அளவுக்கு உயர்ந்த பரிசு எதுவுமே என்னிடம் இல்லை. எல்லாமே பாடலை விடக் குறைந்தவையே. இருந்தாலும், இருப்பதற்குள் சிறந்ததைத் தர முடிவு செய்து விட்டேன். பெற்றுக் கொள்ளுங்கள்" - மன்னன் தான் பேசினான்.


அரிசில்கிழார் பரிசைப் பெறக் கைகளை நீட்டினார். மன்னன் சட்டென்று தன் தலையில் இருந்த மணி முடியைக் கழற்றினான். அரிசில் கிழாரின் கைகளில் கொடுத்து விட்டான்!

"அரிசில்கிழாரே! உங்கள் ஒப்பற்ற பாடல்களுக்கு எனது எளிய பரிசாக இந்தச் சேர நாட்டையே; அரசுரிமையையே தந்து விட்டேன். மறுக்காது ஏற்று என்னைப் பெருமைப்படுத்துங்கள்" என்றான் மன்னன்.

அரசியார் அரியணையில் இருந்து இறங்கிவர, மன்னனும் அரசியும் வெளியே செல்ல முயன்றனர்.

எல்லோரும் திகைத்தனர். புலவர்களுக்குப் பரிசாக பொற்கிழி தருவார்கள்; பொன்னாடை தருவார்கள்; ஆடு, மாடு, யானை தருவார்கள்; ஊர்கள், காடு, கழனிகள் தருவார்கள். இப்படித் தன் அரசாட்சியையே தந்ததாகக் கேட்டது கூட இல்லையே! புலவர் தந்த பாடல்கள் உயர்ந்தவை என்றால் அவைகளை விட உயர்ந்தது அல்லவா இரும்பொறை அளித்துள்ள பரிசு! புலவர் தன் பாடலால் சிறந்தவர் என்றால், அவரைவிடச் சிறந்து விட்டானே மன்னன் இரும்பொறை தன் பரிசால்!

அரிசில்கிழார் செய்வது அறியாமல்.



துடித்தார்; தவித்தார். கைகளில் இருந்த மணிமகுடம் அவருக்கு இரும்பாகக் கனத்தது!

“மன்னா! புலவனுக்குப் பரிசாக அரசாட்சியையே தந்து விட்டு புலவனையும் அவன் பாடல்களையும், உங்களுடைய பெருமையையும் உயர்த்திக் கொண்டு விட்டீர்கள். ஆனால், என் நிலையை எண்ணிப் பாருங்கள். எனக்கு ஆளத் தெரியுமா? பகைவர் வந்தால் போரிடத் தெரியுமா? நாட்டையும் மக்களையும் காக்கத் தெரியுமா? எனக்கு வேண்டாம் இந்த அரசுரிமை. பாடிய புலவனுக்குத் தன் அரசுரிமையையே பரிசாகத் தந்த வள்ளல் என்று எல்லோரும் உங்களைப் போற்றுவார்கள். அதேசமயம், பாடலைப் பாடிப் பரிசாக ஆட்சி உரிமையையே பெற்ற பேராசைக் காரப் புலவன் என்று என்னைச் சாடுவார்கள்” என்று மன்றாடினார் அரிசில் கிழார்.

இரும்பொறை மனமிரங்கவில்லை. மனைவியுடன் வெளியேறத் துடித்து நின்றான்! புலவருக்கு ஒரு யோசனை தோன்றியது. “இருங்கள் மன்னா. அரசாட்சி என்னிடம் உள்ள உரிமையால் இந்த நாட்டின் சாதாரணக் குடிமகனாகி விட்ட உங்களுக்கு ஒரு கட்டளை இடுகிறேன். அரச கட்டளையை மீறுவது கடுமையான குற்றம். என்னுடைய சார்பில் இந்த நாட்டின் ஆட்சியை ஆண்டு வரும்படி கட்டளை இடுகிறேன்” என்றார் கடுமையான

கொசு என்ன கூறியிருக்கும் - போட்டி முடிவு

தபால் துறையினரின் வேலை நிறுத்தமாக இருந்தால் எங்களுக்கு என்ன என்று முடிவெடுத்தவர்கள் போல், கூரியர் சர்வீஸ் மூலமாக விடையை அனுப்பித் திணற அடித்து விட்டார்கள் வாசகர்கள்! சில ஊர்களில் இருந்து புத்திசாலித்தனமாக ஐந்து அல்லது ஆறு பேர் சேர்ந்து ஒரே உறையில் தங்கள் விடையைக் கூரியர் மூலம் அனுப்பிருந்தார்கள். எல்லாமே சரியான விடை! ஏமாந்தது கோகுலம் ஆசிரியர்தான்!

குலுக்கல் மூலம் ரூபாய் பத்து பரிசு பெறுபவர்கள்:

1. எஸ். கவியரசு, புத்தூர், ஆந்திர மாநிலம், 2. ஆர்.ராஜேஸ்வரி, குரோம்பேட்டை, சென்னை-44. 3. டி.பிராங்ளின். கொத்தகிரி. 4. எம்.சபீர் ஹூசெய்ன், திருச்சி - 12. 5. ஈ. சந்துரு, பாண்டி-8. 6. எச்.வீணா, திருச்சி, 7. இரா.ஹரிணி, பாண்டிச்சேரி-5, 8. அ.ஜோசப் பிரசாத், திருவையாறு, 9. பி.வினோத்குமார், பாண்டிச்சேரி-9, 10. கு.மோசஸ்சீலன், உத்திரங்குடி, 11. என்.தீபிகா, புதுடெல்லி-67, 12. எம்.எலிசபெத், மதுரை-16, 13. டி.ஜெ.அக்ஷயா, நாவல்பூர், ராணிப்பேட்டை, 14. பி.எச்.சபீதா, திருச்சி-17, 15. எஸ்.விதூஷணன். கொழும்பு-13, ஸ்ரீலங்கா, 16. ஈ.பாகீரதி, பரமக்குடி, 17. எம்.ஸ்ரீதர், காரைக்கால் -2, 18. ஆர்.அறிவுக்கரசன், நந்திமங்கலம், ஆந்திரா, 19. ஜி.குருவாயுரப்பன். அட்டகட்டி. 20. கே.பத்மாவதி, கோவை - 4.

போட்டிக்கான கருத்து: ஆ.சு.கிருஷ்ணன், சென்னை.

பரிசு பெற்றவர்களுக்கு பாராட்டு. கலந்து கொண்டவர்களுக்கு நன்றி. விடை: "சிங்கராஜா, தேவைப்பட்டால் சொல்லுங்கள், நானே வந்து இரத்தம் தருகிறேன்!" என்றது கொசு.

குரலில்.

வேறுவழியின்றி இரும்பொறை பணிந்து வணங்கினான். அரிசில் கிழார் மணிமுடியைத் தட்டில் வைத்துக் கொடுத்தார். தானே அதை மீண்டும் இரும்பொறைக்கு அணிவித்தார். மன்னன் வேண்டியபடி அவனுக்கு அமைச்சராக இருக்கவும் இசைந்தார்.

தன் அரசாட்சியையே ஒரு புலவனுக்குப் பரிசாத் தரக் கூடிய அளவுக்கு இரும்பொறைக்கு எவ்வளவு பெரிய மனம்! புலவர் எனக்கு உன் ஆட்சியைத் தா என்று கேட்வா கேட்டார்?

அரிசில்கிழார் மட்டுமென்ன? இரும்பொறைக்குக் குறைந்தவராகவா இருந்தார்? தனக்குப் பரிசாக வந்த ஆட்சியை மீண்டும் இரும்பொறைக்கே அளித்து விட்டாரே! அவர் மனம் வைத்திருந்தால் பரிசாகத் தரப்பட்ட ஆட்சியைத்தானே வைத்துக் கொண்டு மன்னனாகி இருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை.

சங்க காலத்து மக்கள், என்னுடைய உள்ளம் உயர்ந்ததா உன்னுடைய உள்ளம் உயர்ந்ததா என்று போட்டி போட்டுக் கொண்டு உயர்ந்த வாழ்வு வாழ்ந்தார்கள்! தாங்கள் மனவளர்ச்சி அடையாதவர்கள் என்று தங்கள்மேல் பழிவந்துவிடுமோ என்று அஞ்சி உயர்ந்த செயல்களையே எப்பொழுதும் செய்து புகழ்வாழ்வு வாழ்ந்தனர்.

வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார்
இசை ஒழிய
வாழ்வாரே வாழாதவர் (240)

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.

எல்ஐசி என்றால் பாதுகாப்பு



வேகப் பந்து, கோபமாக வந்து தாக்கும் போது உங்கள் பேட்கள் கால்களை மட்டுமே பாதுகாக்கிறது. ஆனால் லைஃப் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா அதாவது எல். ஐ. சி. வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு பாதுகாப்பு தருகிறது. எல். ஐ. சி. பாலிசி என்றால் என்ன என உங்கள் பெற்றோரிடம் கேளுங்கள். அது எப்படி உங்களை பத்திரமாக பாதுகாக்கிறது என அவர்கள் விளக்குவார்கள். ஏனெனில், எல். ஐ. சி. உங்கள் மீது அக்கறை கொண்டுள்ளது.

லைஃப் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா

காப்பீடு செய்யுங்கள். பாதுகாப்பு பெறுங்கள்.

Registered with the Registrar of Newspaper of India Registered No. TN / MS (S) 281 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka

